பக்கங்கள் : பதினாறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 23 வள்ளுவர் ஆண்டு 2039 ஆனி 01 ஞாயிற்றுக்கிழமை (15.06.2008) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 200

# ஐரோப்பிய ஒன்றியப் பிரதிநிதிகள் கிழக்கே செல்லக் கதவடைப்பு!

## முதலமைச்சர் பிள்ளையானைச் சந்திக்க மறுத்ததால்!!

கொழும்பு, ஜூன் 15

**நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ள 3 அங்கத்தவர்களை கொண்ட ஐரோப்பிய ஒன்றியத்தின் பிரதிநிதிகள் கிழக்கு மாகாணம் செல்வதற்கு அரசாங்கம் கதவடைப்புச் செய்துள்ளது.**

கிழக்கு மாகாண முதலமைச்சர் சிவனேசதுரை சந்திரகாந்தனைச் (பிள்ளையானை) சந்திப்பதற்கு ஐரோப்பிய ஒன்றியப் பிரதிநிதிகள் மறுப்புத் தெரிவித்தமையே அரசின் கதவடைப்புக்குக் காரணம் என்று அறியப்படுகிறது

சுவீடன், நெதர்லாந்து, ஸ்பெயின் ஆகிய நாடுகளைச் சேர்ந்த பிரதிநிதிகள் மூவர் நாளை மறுதினம் செவ்வாய்க் கிழமை தொடக்கம் ஆறு நாள் விஜயத்தை மேற்கொண்டு இலங்கை வருகின்றனர்.

சர்வதேச விதிமுறைகளுக்கு இணங்க இலங்கையில் மனித உரிமைகள் பேணப்படுகின்றனவா ஜி.பி.எஸ். பிளஸ் வர்த்தக உடன்படிக்கையை நீடிப்பதற்கு உரிய தகுதி பெறும் விதத்தில் அரசின் நடவடிக்கைகள் அமைந்துள்ளனவா என் பதனையும் கண்டறியவே மூவர் குழுவின் விஜயத்தின் பிரதான நோக்கம் ஆகும். இக் குழு தாம் கிழக்குமாகாணத்துக்கு செல்வ தற்கும்

(16 ஆம் பக்கம் பார்க்க)

## திருமலையில் நேற்றிரவு ஒருவர் சுட்டுக் கொலை

திருகோணமலை, ஜூன் 15

திருகோணமலை நுழைவாயிலில்- அநுராதபுரம் சந்தியில்-நேற்று இரவு 7.30 மணியளவில் இனந்தெரியாத ஆயுததாரிகளால் துறைமுக அதிகாரசபை ஊழியர் ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்டார்.

அநுராதபுரம் சந்திப் பகுதியைச் சேர்ந்த சிவநாயகம் இராசநாயகம் (வயது - 28) என்பவரே சூட்டுக்குப் பலியானவர் ஆவார்.

தமது பணி முடிந்து அவர் வீட்டுக்கு திரும்பிக் கொண்டிருந்த வேளை வழிமறிக்கப்பட்டு சுடப்பட்டார் என்று தெரிவிக்கப்பட்டது. (அ-1-151)

## பரந்தனில் விமானத் தாக்குதல் மூதாட்டி காயம்

வவுனியா, ஜூன் 15

கிளிநெச்சி மாவட்டத்தில் பரந்தன் பகுதியில் நேற்றுப் பி.ப 1.15மணியளவில் விமானப் படை நடத்திய தாக்குதலில் மூதாட்டி ஒருவர் காயம் அடைந்தார்.

குமரபுரம் பொது நோக்கு மண்டபம் மற்றும் 10வீடுகளும் சேதமடைந்தன எனத் தெரிவிக்கப்பட்டது.

(16 ஆம் பக்கம் பார்க்க)

## பேச்சுக்களை ஆரம்பிப்பதற்கு முன்னர் ஆயுதங்களை கைவிடுவது சாத்தியமாகாது

### அப்படி ஒரு வரலாறு இருந்ததில்லை என்கிறார் ஸ்ரீகாந்தா

யாழ்ப்பாணம், ஜூன் 15

சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிப்பதற்காக விடுதலைப் புலிகள் ஆயுதங்களைக் கைவிடுவது என்பதும் சரணடைவது என்பதும் நடைமுறையில் ஒன்று தான். அது சாத்தியமானது அல்ல.



தமிழ்த் தேசிய கூட்ட மைப்பின் நாடாளுமன்றஉறுப்பினர் என்.ஸ்ரீகாந்தா இவ்வாறு கருத்துத் தெரிவித்துள்ளார். ஆயுதங்களைக் கைவிட்டாலேயே விடுதலைப் புலிகளுடன் பேச்சு என்று ஜனாதிபதி மஹிந்த தெரிவித் துள்ளமை தொடர்பில் கடும் விசனம் தெரிவித்து வெளியிட்ட அறிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார். அந்த அறிக்கையில் ஸ்ரீகாந்தா எம்.பி மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:

பேச்சுக்களை மீண்டும்ஆரம்பிப்பதற்கு முன் நிபந்தனையாக விடுதலைப்புலிகள் ஆயுதங்களைக் கைவிட வேண்டும் என்று ஜனாதிபதி கோரியிருப்பது நடைமுறைச் சாத்தியமானது அல்ல. ஆயுதமோதல் ஒன்றில் சம்பந்தப்பட்டுள்ள எந்தவொரு தரப்பும் ஆயுதங்களைக் கைவிடுவது என்பதும் சரணடைவது என்பதும் நடைமுறையில்

(16 ஆம் பக்கம் பார்க்க)

## கிழக்கு மாகாணத்தில் சிவில் தொண்டர் படை; சபையின் முதலாவது அமர்வில் ஆராய்வு

திருகோணமலை, ஜூன் 15

கிழக்கு மாகாணத்தில் ஆயிரம் பேர் கொண்ட சிவில் தொண்டர் படை ஒன்றை உருவாக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

கடந்த 11ஆம் திகதி நடைபெற்ற கிழக்கு மாகாணசபையின்முதலாவது அமர்வின்போது சிவில் தொண்டர் படையை உருவாக்குவது குறித்து விரிவாக ஆராயப்பட்டுள்ளது.

அடுத்துவரும் கூட்டங்களில் தொடர்ந்து ஆராயப்பட்டு, அரசின் அனுமதி பெற்று படைக்கு ஆள் சேர்க்கும் பணி ஆரம்பிக்கப் படும் எனக் கூறப்படுகிறது.

கிழக்கில் உள்ள சனத் தொகையில் இன விகிதாசாரப்படி படைக்கு ஆள்கள் சேர்க்கப் படுவர்.-

பொலிஸாருக்கு மேலதிகமாக சிவில் தொண்டர் படை செயற்படும் - என்றும் தெரிவிக்கப்படுகிறது.

வடக்கு- கிழக்கு மாகாண முதலமைச்சராக வரதராஜப் பெருமாள்பதவி வகித்தபோதும் சிவில் தொண்டர் படை உருவாக்கப்பட்டது. அதில் 250 பேரே இணைக்கப்பட்டிருந்தனர். (அ-1-151)

## மன்னார் பெரியமடு மீட்கப்பட்டதாக படைத்தரப்பில் நேற்று அறிவிப்பு

கொழும்பு, ஜூலை 15

மன்னார் பெரிய மடுப்பகுதியில் நேற்றுப் பிற்பகல் இடம்பெற்ற கடும் சண்டையை அடுத்து அப் பகுதி தமது கட்டுப்பாட்டில் வந்துள்ளது என படைத்தரப்பு அறிவித்துள்ளது.

நேற்றுக்காலை படையினரின் முன்னேற்றத்தை முறியடிக்க விடுதலைப்புலிகள் கடும் தாக்குதலை நடத்தினர்.-

கடும் மோதலின் பின் படையினர் பெரிய மடுவை முழுமையாக மீட்டனர்.-

இந்தச் சண்டையில் ஏழு படையினர் காயமடைந்தனர் .-

2.5 கிலோ மீற்றர் நீளமான பெரியமடுக் குளப் பகுதியை முழுமையாக படையினர் மீட்டுள்ளனர்- என்று பாதுகாப்பு ஊடகத் தகவல் நிலையம் தெரிவித்தது (அ-1)

## மடுமாதா வருடாந்தத் திருவிழா நடைபெறாது; அரசு-புலிகள் பேச்சும் உடன் சாத்தியமில்லை

யாழ்ப்பாணம், ஜூலை 15

மன்னார் மடுமாதா தேவாலய வருடாந்த திருவிழா இம்முறை நடத்தப்படமாட்டாது. இது தொடர்பான தீர்மானம் நேற்று நடைபெற்ற மதகுருமார் மாநாட்டில் எடுக்கப்பட்டுள்ளது.

அதேவேளை, மடுமாதா புனித சொரூபம் தொடர்பில் அரசுக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையில் உடனடிப் பேச்சுக்கள் சாத்தியமில்லை என்று நேற்றைய கூட்டத்தில்கலந்துகொண்ட மதகுருமார் கருத்துத்

(16 ஆம் பக்கம் பார்க்க)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்.மக்கள் கடின உழைப்பாளிகள் வாழ்வியல் யதார்த்தம் புரிந்தவர்கள்

## பேணி அடிகளார் புகழாரம்

யாழ்ப்பாணம், ஜூன் 15

யாழ்ப்பாண மக்கள் கடின உழைப்பில் ஆர்வம் கொண்டவர்கள். வாழ்க்கையின் உண்மைத் தன்மையை அறிந்தவர்கள் - இவ்வாறு யாழ்ப்பாணச் சமூகத்துக்குப் புகழாரம் சூட்டினார் கத்தோலிக்கம் சார்



வரலாற்றுத்துறையில் தெற்காசியாவின் புலமைமிகு எழுத்தாளரான அருட்திரு பேணி யோடர் (வயது 95) அடிகளார்.

கத்தோலிக்க திருச்சபையின் யாழ்.மறை வட்டம் குறித்து ஆய்வுசெய்வதற்காக யாழ்ப்பாணம் வந்துள்ள பேணி அடிகளார், நேற்று யாழ்.ஆயர் இல்லத்தில் பத்திரிகையாளர்களைச் சந்தித்தார். அப்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

யாழ்.மக்கள் வாழ்க்கையில் பிடிமானமும் உழைப்பில் ஆர்வமும் கொண்டவர்கள். ஜேர்மன் நாட்டு மக்களும் இத்தகையவர்களே என்றும், பேணி அடிகள் குறிப்பிட்டார்.

தனது தேக ஆரோக்கியம் குறித்து கருத்துக் கூறிய பேணி அடிகளார், நேர அட்டவணை, கிராமமான உடற்பயிற்சி, ஆக்கபூர்வமான எண்ணங்களை வெளியிடுதல் மற்றும் எதிர்மறையான எண்ணங்களை தவிர்த்துக் கொள்ளல் போன்றனவே தனது உடல் ஆரோக்கியத்துக்குக் பிரதான காரணிகள் என்று - அவர் விளக்கினார்.

இத்தாலியைச் சேர்ந்த பேணி அடிகளார் தனது 22 ஆவது வயது முதலே இலங்கையில் வசித்து வருகிறார். இவர் பல மொழிகளிலும் பெரும் புலமையாளர் ஆவார்.

இந்தப் பத்திரிகையாளர் சந்திப்பின் போது யாழ்.பல்கலைக்கழக கிறிஸ்தவத்துறைத் தலைவர் அருட் கலாநிதி ஞா.பிலேந்திரன் அடிகளார் மற்றும் 'பாதுகாவலன்' ஆசிரியரும் யாழ்.ஆயரின் செயலாளருமான அருட்தந்தை எவ்.ஏ. றொசான் அடிகளார் ஆகியோரும் உடனிருந்தனர். (அ-02-25)

# சிற்பியின் பவள விழாவும் நூல் வெளியீடும் இன்று

## சுன்னாகம் ஸ்கந்தவரோதயாவில்

யாழ்ப்பாணம்,ஜூன் 15

மூதறிஞரும் மூத்த எழுத்தாளரும் இதழியலாளருமான சிற்பி சிவசரவணபவனின் பவள விழாவும் அவரது சிறுகதைத் தொகுதி வெளியீட்டு விழாவும், இன்று பிற்பகல் சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரியில் நடைபெறவுள்ளன.

'ஞானம்' சஞ்சிகையின் இம் மாத இதழ் சிற்பியின் பவள விழாச் சிறப்பு மலராக வெளிவருகிறது.அம்மலரின் வெளியீட்டுடன் பவள விழாவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

அத்தோடு, சிற்பி எழுதிய சிறுகதைகளின் மூன்றாவது தொகுப்பு நூலான 'நினைவுகள் மடிவதில்லை'யும் இன்று வெளியிடப்படுகிறது.

இன்று பிற்பகல் 3.30 மணிக்கு ஆரம்பமாகும் பவள விழாவுக்கு பிரபல எழுத்தாளரும் யாழ். இலக்கிய வட்டத் தலைவருமான செங்கை ஆழியான் க.குணராசா தலைமை வகிக்கிறார்.

விழாவில் தொடக்க உரையை ஸ்கந்தவரோதய கல்லூரி அதிபர் செஞ்சொற் செல்வர் ஆறு.திருமுருகன் நிகழ்த்துவார். வாழ்த்துரையை ஓய்வுபெற்ற உதவிக் கல்விப் பணிப்பாளர் அ.தற்பரானந்தனும் பாராட்டுரைகளை கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ், கோப்பாய் ப.சிவம், கவிஞர் சா.துரைசிங்கம், ஐ.சாந்தன் ஆகியோரும் நிகழ்த்துவர்.

பவளவிழா மலரை 'ஞானம்' சஞ்சிகையின் ஆசிரியர் டாக்டர் தி.ஞானசேகரன் வெளியிட்டு விழா நாயகரை கௌரவிப்பார். 'நினைவுகள் மடிவதில்லை'சிறுகதை தொகுதியை பேராசிரியர் அ.சண்முகதாஸ் வெளியிட்டு வைப்பார்.

'ஞானம்' சஞ்சிகையின் அனுசரணையுடன் யாழ். இலக்கிய வட்டம் பவள விழாவையும், சிறுகதைத் தொகுதி வெளியீட்டு விழாவையும் நடத்துகிறது. (அ)

# சார்க் மாநாட்டில் கலந்து கொள்ள இந்தியப் பிரதமருக்கு நேரில் அழைப்பு

## அமைச்சர் போகல்லாகம புதுடில்லி செல்கிறார்

கொழும்பு, ஜூன்15

புதுடில்லிக்கு இன்று விஜயம் செய்யும் இலங்கை வெளிவிவகார அமைச்சர் றோகித போகல்லாகம, பிரதமர் மன்மோகன் சிங்கை நாளை சந்தித்துப் பேச்சு நடத்தவிருக்கிறார். கொழும்பில் எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் நடைபெற உள்ள சார்க் உச்சி மாநாட்டில் பங்குபற்றுமாறு நேரில் அழைப்பு வழங்குவது அவரது விஜயத்தின் பிரதான நோக்கமாகும்

விடுதலைப் புலிகளுக்கு எதிராக மேற்கொள்ளப்படும் இராணுவ நடவடிக்கை மற்றும் கிழக்குத் தேர்தல் ஆகியன தொடர்பாக பிரதமருக்கு அவர் எடுத்து விளக்குவார் எனத் தெரிவிக்கப்படுகிறது. அத்துடன் ஓகஸ்ட் மாதம் 2ஆம்,3 ஆம் திகதிகளில் இலங்கையில் நடைபெறும் சார்க் உச்சிமாநாட்டில் கலந்து கொள்ளுமாறு பிரதமரிடம் அவர் நேரில் கோருவதுடன் அழைப்பையும் வழங்குவார் என்று செய்தி ஏஜென்ஸி ஒன்று தெரிவித்தது.

இந்தியாவுடன் நல்ல உறவுகளை நாங்கள் பேணி வருவதால் அந்த நாட்டின் தலைமைத்துவத்துடன் பிந்திய நிலைப்பாடுகள் குறித்து அமைச்சர் போகல்லாகம விரிவாகப் பேசுவார் என்று இலங்கைக்கான தூதர் சி.ஆர். ஜெயசிங்கதெரிவித்தார்.

இன்று புதுடில்லி வரும் அமைச்சர் நாளை பிரதமர் மன்மோகன் சிங்கை சந்திப்பதுடன் ஏனைய தலைவர்களுடனும் பேச்சுக்களை நடத்துவார். (அ-1)

## சடலங்களை அடையாளங் காண பணிப்பாளர் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜூன் 15

05.05.2008 ஆம் திகதி கொடிகாமம் பொலிஸாரால் ஒப்படைக்கப்பட்ட சுமார் 25 வயது மதிக்கத்தக்க ஆண் ஒருவரின் சடலமும் 13.06.2008 இல் சாவகச்சேரி பொலிஸாரால் ஒப்படைக்கப்பட்ட 25-30 வயது மதிக்கத்தக்க ஆண் ஒருவரின் சடலமும் யாழ்.போதனா வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளன. உரித்துடையோர் 5 நாள்களுக்குள் உரிய அடையாளம் காட்டி பொறுப்பேற்குமாறு யாழ். போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் கேட்டுக்கொண்டுள்ளார். (1)

## முதலுதவி இறுவட்டு வெளியீடு ஒத்திவைப்பு

யாழ்.இந்துக்கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் இன்று ஞயிற்றுக்கிழமை நடைபெற விருந்த மானிடன் முதலுதவிப் பயிற்சி இறுவட்டு வெளியீடு ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

நிகழ்வு இடம்பெறும் நாள் பின்னர் அறிவிக்கப்படும் என்று இறுவட்டு வெளியீட்டு நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளர் தெரிவித்தார்.

## மென்பந்தாட்டம்

மந்திகை, ஜூன் 15

மாலிசந்தி மைக்கல் விளையாட்டுக் கழகத்தின் 15 ஆவது ஆண்டுவிழாவையொட்டி நடத்தப்பட்டு வரும் மென்பந்து துடுப்பாட்டச் சுற்றுப்போட்டியில் இன்று காலை 8 மணிக்கு கரணவாய் அண்ணா சிலையடி விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து திருநாவலூர் விளையாட்டுக்கழகம் மோதுகிறது.

பி.ப. 3 மணிக்கு - அல்வாய் கலைமகள் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து உடுப்பிட்டி ஐக்கிய விளையாட்டுக்கழகம் மோதுகிறது. நாளை பி.ப. 3 மணிக்கு கரவெட்டி மகேசன் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து வல்வெட்டி ஒற்றுமை விளையாட்டுக் கழகம் மோதுகிறது. (1-218)

திறப்புவிழா அழைப்பு

Digital Electronics
Show Room

பெருமகிழ்வோடு அழைக்கின்றோம்

யாழ் மண்ணில் இலத்திரனியல் துறையில்
புத்தொளிபரப்ப கஸ்தூரியார் வீதியில் ஓர் காட்சியறை

நிகழும் வைகாசித் திங்கள் 16.06.2008
காலை 11.53 மணி தொடக்கம் 01.32 மணிவரையுள்ள சுபநேரத்தில்

திரு.T.ஜெயராஜசிங்கம்
(சிரேஷ்ட முகமையாளர், ஹற்றன் நஷனல் வங்கி, யாழ்ப்பாணம்)
அவர்களால் திறந்து வைக்கப்படவிருக்கிறது.

தங்கள் வருகையையும் மேலான
ஆதரவையும் வேண்டி நிற்கின்றோம்

#205/7, Raja Complex,
Kasthuriar Road, Jaffna.

J.G Creation-779913123

மணமகள் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பம், 34 வயதுடைய, ரேவதி நட்சத்திரம், லக்கினத்தில் நட்பு செவ்வாய் மொத்த கிரக பாவம் 48 உடைய கொழும்பில் தனியார் நிறுவனத்தில் பணிபுரியும் மணமகனுக்கு பொருத்தமான மணமகள் தேவை.

விள. இல. 3108,
மே/பா உதயன். (75334)

தென்மராட்சி மேற்கு ப.நோ.கூ.சங்கம்

வெற்றுப்பொருள் கூறுவிலை

எமது சங்கத்தில் வெற்றுப்பை, சாக்கு, 04 லீற்றர் வெற்று ரின் என்பன விற்பனைக்குண்டு. தேவையானோர் 25.06.2008 இற்கு முன்னர் கூறுவிலையை சங்கக் காரியாலயத்தில் ஒப்படைக்கவும்.

(சி-553330) பொது முகாமையாளர்.

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



திருமதி
அம்பலவாணர் சிவஞானவதி

தோற்றம் 16 - 02 - 1936 மறைவு 16 - 05 - 2008

*குடும்பத்தின் குல விளக்காய்*
*அன்பின் இருப்பிடமாய்*
*நற் பண்புகளுடன் எமை வாழ வைத்து*
*எமக்காகவே வாழ்ந்த எம் அன்புத் தெய்வமே!*
*எம் உயிருள்ள ஒவ்வொரு நாளும்*
*உங்களை நினைத்துக்கொண்டே இருப்போம்.*

அன்னாரின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (15.06.2008) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் வருகைதந்து ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

துவாரகை, சேமபுலம் வீதி,
உரும்பிராய் தெற்கு,உரும்பிராய்.

தகவல்:
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### திருமதி டானியல் முருகேசு நகுலாம்புசம்

கரவெட்டி மேற்கைப் பிறப்பிடமாகவும் வதிரியை வதிவிடமாகவும் கொண்ட திருமதி டானியல் முருகேசு நகுலாம்புசம் நேற்று(14.06.2008)சனிக்கிழமை காலமானார்.

அன்னார் அமரர் டானியல் முருகேசுவின் அன்பு மனைவியும் D.M. வேதாபரணம் (ஓய்வுபெற்ற கிராம அலுவலர்),D.M. கற்பகநாயகம், அமரர் D.M.விபுலானந்தன், D.M.வித்தியாதரன் (ஆஸ்திரேலியா), அருந்தவமலர் (சுவிஸ்), அமரர் D.M.தேவநாயகம், D.M.தேவாபரணம்(ஆஸ்திரேலியா), D.M.. தேவநேசன் ஆஸ்திரேலியா) ஆகியோரின் அன்புத் தாயும் அமரர் D.M.வேதநாயகம் D.M.வேதாரணியம்(ஓய்வுபெற்ற ஆசிரியர்) ஆகியோரின் சிறிய தாயும் சந்திரவதனா, இதயமலர், ரஞ்சிதமலர், அமரதாசன் , அனிதா (சாந்தி), ஸ்ரெலா புஸ்பராணி ஆகியோரின் அன்பு மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

*புனிதம்,*
*வதிரி,*
*கரவெட்டி.* (A)

தகவல்:
D.M. வேதாபரணம்
(மகன் - ஓய்வு பெற்ற கிராம அலுவலர்)
021 226 3340

A/L(Maths)ல் 03 பாடங்களில் சித்தியுண்டா? இந்தியாவில் உயர்கல்வி
2012 MAYல் நீங்களும் ஒரு பொறியியலாளர்
இதோ உங்களுக்கு பொறியியல் அனுமதி
Be An Engineer in 2012 May
Cousers Offered:
Bachelor of Engineering (BE)
- Civil Engineering - Mechanical Engineering - Electronics & Communication Engineering - Information Technology
- Electrical & Electronics Engineering - Computer science & Engineering - Fashion Technology
- Post Graduate courses (ME)
- M.B.A(Master of Business Administration) - M.C.A (Master of Computer Applications)
SUNTHARALINGAM SAJIVAN ECE (B.E) A/L 2005 St. Michel's College Batticalo
PALANIPPILLAI SENTHILLAPAN IT (B.Tech) A/L 2004 St.John's College Jaffna
KAARUNYAA SIVARATNAM IT (B.Tech) A/L 2007 Chunakkuli Girls' College Jaffna
SIVAKUMARAN VIDIYABUSHAN IT (B.Tech) A/L 2003 St.John's College Jaffna
KANTHIMATHINATHAN KAMALNATH ECE(B.E) A/L 2006 Bambalapity Hindu College, Colombo
All India Council For Technical Education (AICTE)இனால்
ELEGIBILITY A/L 3 PASSES (Maths Stream)
SPOT ADMISSION GIVEN
For more information & Spot admission;-
Mr.T.Elankeethan(Jaf) Tel - 0212228374 Mobile - 0775936343
Mr.S.Jeyakanth(Col) Mobile - 0773867257
v4educationalconsultancy@gmail.com
V4 EDUCATIONAL CONSULTANCY PRIVATE LIMITED
SONA COLLEGE OF TECHNOLOGY
Sona Nagar, Salem - 636005, Tamilnadu
APPROVED BY AICTE ... TO ANNA UNIVERSITY & ISO CERTIFIED
The Express Institute Irupalai, Kopay Tel:0212225840

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யுத்தத்தை எமது எதிர்காலச் சந்ததிக்குக் கையளிக்கப் போகிறோமா, என்ன.....?

**நாட்டில் தொடர்ச்சியாக இடம்பெற்றுவரும் யுத்தம் காரணமாக இந் நாட்டின் சமூகங்கள் யாவும் எதிர்நோக்க நேர்ந் துள்ள சவால்கள் குறித்தும், யுத்தம் ஒருபோதும் இந்நாட் டின் இனப் பிரச்சினைக்குத் தீர்வாக மாட்டாது என்பதனையும் வலியுறுத்தி கொழும்பு ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தின் சமூக விஞ்ஞான ஆய்வுத்துறையின் சிரேஷ்ட விரிவுரையாளர் மயூர சமரக்கோனின் கருத்து கட்டுரை வடிவில்.**




குல அடிப்படையிலான சமூக அமைப்பு நடைமுறையிலிருந்த காலத்திலிருந்து இன்றைய நவீன சமூக அமைப்பு நடைமுறை பேணப்படும் காலகட்டம்வரை, சமூக மாற்றங்களின்போது, அத்தகைய மாற்றங்களைத் துரிதப்படுத்துவதற்கான அடிப்படைக் காரணியாக அமைந்தது மனித சிந்தனையில் ஏற்பட்ட மாற்றங்களே ஆகும். அத்தகைய மனித சிந்தனை மாற்றங்கள் காரணமாக மனிதர்கள் தம்மைச் சுற்றியுள்ள உலகம் தொடர்பாக அக்கறை காட்டிச் செயற்பட ஆரம்பித்தனர். அதன் பிரதிபலனாக புதியவை குறித்த தேடுதல்களும் உருவாக்கல்களும் பல்கிப் பெருக வாய்ப்புகள் உருவாகின. விசேடமாகத் தொழில்நுட்ப அறிவு அபிவிருத்தி அடைந்ததன் காரணமாக பெரும் அபிவிருத்தி யுகமொன்றில் பிரவேசிக்கும் வாய்ப்பு மனித சமுதாயத்துக்கு வாய்த்தது.

இத்தகைய அபிவிருத்தி யுகத்தில் மனித சமூகத்தின் வளர்ச்சிக்குக் காரணமான புதுப் புது இயந்திர சாதன உற்பத்தி, மருந்து வகைகள், எலெக்ரோனிக் சாதனங்களின் உற்பத்தி போன்ற துறைகள் அபிவிருத்தி கண்டன. அதேசமயம், மனித குலத்துக்கு அழிவை ஏற்படுத்தவல்ல பலதரப்பட்ட நவீன போராயுதங்கள் மற்றும் உபகரணங்கள் என்பவற்றைப் போட்டிபோட்டு உற்பத்தி செய்வதிலும் மனித இனம் உற்சாகம் காட்டிச் செயற்பட்டது. இதன் பலாபலன்கள் எவை என்பதை இன்றைய இலங்கைச் சமூகத்தை நோக்கும்போது தெளிவாக உணர்ந்து கொள்ள இயலும். இன்று இந்நாட்டின் சமூகங்கள் அனுபவிக்க - முகம்கொடுக்க நேர்ந்துள்ள தடைகள் மற்றும் சிரமங்கள் என்பவையே இவற்றுக்குப் பொருத்தமானதொரு உதாரணமாகக் கொள்ளத்தக்கவையாகும்.

இவ்விடயத்தில் மற்றொரு அம்சமும் இணைந்துள்ளது. இன்று உலகின் அபிவிருத்தியடைந்த நாடுகள் தயாரிக்கும் போராயுதங்கள் மற்றும் உபகரணங்கள் பெரும்பாலும் இன்று அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளாலேயே பயன்படுத்தப் படுகின்றன என்பதே அந்த முக்கிய அம்சமாகும். இதற்குப் பொருத்தமானதொரு உதாரணமாக எமது நாடான இலங்கையைக் குறிப்பிட்டுக்கூற இயலும். அந்த வகையில், மனித சமுதாயத்தில் உண்மையில் அபிவிருத்தி ஏற்பட்டுள்ளதா? தேடிக் கண்டிட பொருத்தமானதொரு முகம் பார்க்கும் கண்ணாடியாக இலங்கையை, இந்நாட்டின் சமூகங்களைக் குறிப்பிட இயலும், நாட்டின் பொதுமக்களைப் படுகொலை செய்யும் முறையற்ற நிர்வாக நடைமுறையை நாம் பயன்படுத்தி வருவதாகவே கூறிக்கொள்ள வேண்டியுள்ளது. இதற்கு மேலாக ஒரே வேளையில் பொதுமக்களை நூற்றுக் கணக்கில் படுகொலை செய்யும், கிளைமோர்க் குண்டுத் தாக்குதல், 'மல்ரி பரல்' எறிகணைத் தாக்குதல், 'மிக்' குண்டு வீச்சு விமானத் தாக்குதல் என்பவற்றால் தினமும் நாட்டின் பொதுமக்கள் உயிரிழக்கும் பரிதாப நிலைக்கு நாடு இன்று உட்பட நேர்ந்துள்ளது. இதன் மூலம் நாம் எதனை உணர்ந்து கொள்ள முடிகிறது? மனித சமூகத்தை நேசிக்கும் ஒரு யுகத்தை விட்டு நாம் தூர விலகிச் செல்ல ஆரம்பித்துள்ளோம் என்பதை இவை உணர்த்தி நிற்கின்றனவல்லவா?

விசேடமாக, விடுதலைப் புலிகளது குரூரமான குண்டுத்தாக்குதல்கள் காரணமாக, இந்நாட்டின் ஒட்டு மொத்தச் சமூகங்களுமே ஒரே இடத்தில் ஸ்தம்பித்துப் போய் விட நேர்ந்து விட்டுள்ளது எனக் கூறினால் அது எந்த வகையிலும் தவறாகிவிடாது. முன்னைக்கால சமூக அமைப்பை ஆழ்ந்து நோக்குவோமானால், வீட்டிலிருந்து வெளி யில் புறப்படும் சமயம் மீண்டும் வீட்டுக்குத் திரும்பி வருவது குறித்த நிச்சயமற்ற நிலை மீனவ சமூகத்து ஆண்கள் மத்தியில் மட்டுமே நிலவி வந்தது. அதாவது கடலின் சுபாவம் எந்த வேளையில் மாற்றமடையும் என்பது குறித்து முற்கணிப்பீடு மேற்கொள்ளத்தக்க வாய்ப்பு முன்னைய காலத்தில் இருக்கவில்லை. இதனால் தமது தொழிலை மேற்கொள்ளக் கடலில் இறங்கும் மீனவர்கள் தம்மால் பத்திரமாகக் கரையேற இயலுமா? இல்லையா? என்பது குறித்து உறுதிப்படுத்திக்கொள்ள இயலாத நிலையே அன்றைய மீனவ சமூகத்தின் மத்தியில் நிலவி வந்தது. இதனாலேயே மீனவர்கள் தொழிலுக்காகக் கடலுக்குச் செல்ல

## அத்தகைய நம்பிக்கை-மனோரீதியில் பலவீனமான-சமுதாயம் உருவாகவே-வழிசெய்யும்!

வீட்டை விட்டுப் புறப்படும்போது தொழிலுக்குப் போய்விட்டு வருகிறேன் எனக் குடும்பத்தாருக்குக் கூறிச் செல்வதை முன்னைய காலத்தில் தவிர்த்ததாகக் கூறப்படுவதுண்டு.

### மனோரீதியில் பலவீனமான சமுதாயம் உருவாகும் நிலை

ஆனால் இன்று தமது தொழிலுக்காகச் செல்வதற்கு வீதியில் இறங்கும் சாதாரண பொது மக்களுக்கும்கூட அன்றைய மீனவர்களுக்கு ஏற்பட்ட நிலையே ஏற்பட்டுள்ளது. காலையில் தொழிலுக்குச் செல்வதற்காக வீதியில் இறங்கும் தமது குடும்ப உறுப்பினரது உயிர்ப் பாதுகாப்புக்குறித்து கவலைப்பட வேண்டிய நிலை அக்குடும்பத்தின் ஏனைய உறுப்பினர்களுக்கு ஏற்பட்டுள்ளது. அந்த அளவுக்குப் பொதுமக்கள் மத்தியில் பாதுகாப்பற்றதொரு நிலை நிலவி வருகின்றது. இத்தகையதொரு பின்னணியில், சமூகங்கள் மத்தியிலான அபிவிருத்தி குறித்து சிந்தித்துப் பார்க்க இயலுமா? என்ற கேள்வி பூதாகரமாக எம் முன் எழுந்து நிற்கின்றது. உண்மையில் இத்தகைய நிலை தொடர்ச்சியாக நீண்டு செல்லுமானால் அதன் விளைவு என்னவாகும் என்ற கேள்வியும் நம்முன்னால் எழுந்து பயமுறுத்துகிறது. விசேடமாக இத்தகைய நிச்சயமற்ற தன்மை - குழப்பத்தையும் அச்சத்தையும் ஏற்படுத்தும் நிலை தொடருமானால், இந்நாட்டின் மொத்த சமூகங்கள் மத்தியிலும் மனோரீதியில் வலுக்குன்றி உளநிலை பலவீனமுற்றதொரு சமுதாயம் உருவாகும் நிலை ஏற்படநேரும்.

இத்தகைய சமூகமொன்றில் வாழ நேர்பவர்கள் உளரீதியில் விரக்தி, வெறுப்பு, சமூகத்தின் ஏனையோருக்கு உதவ முன்வராத தன்மை, குரோதம், மகிழ்ச்சியற்ற தன்மை, போன்ற உளத் தாக்கங்களுக்கு உள்ளாகக் கூடும். இத்தகைய உளரீதியிலான பாதிப்பு வயதில் குறைந்த சிறுவர்கள் மத்தியில் கூட உருவாக வாய்ப்பு உண்டாதலால் மன ஆரோக்கியமற்ற எதிர்காலப் பரம்பரையொன்று சமூகங்கள் மத்தியில் உருவாகக் கூடும்.

எவ்வாறான போதிலும், இன்று இந்த நாட்டின் சமூகங்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள இத்தகைய பாதிப்பைப் போக்கி நாட்டில் ஆரோக்கியமான சமுதாயமொன்றை உருவாக்கும் முயற்சியில் இந்நாட்டின் புத்திஜீவிகள் தர[illegible] அவசியம் இன்று ஏற்பட்டுள்ளது. அந்த வகையில் இவ்விடயம் குறித்த தெளிவான பார்வையொன்றை, புரிந்துணர்வை இந் நாட்டின் சமூகங்கள் மத்தியில் உருவாக்கி வைக்க இப் பல்துறைசார் புத்திஜீவிகள் தரப்பால் மட்டுமே இயலும். இவ்விடயத்தில் சிங்கள மற்றும் தமிழ் புத்திஜீவிகள் என்ற பேதம் எதுவுமின்றி இரு இனங்களைச் சேர்ந்த புத்தி ஜீவிகள் தத்தமது இன மக்கள் மத்தியில் நாட்டின் இன்றைய நிலை குறித்து தெளிவான பார்வையொன்றை ஏற்படுத்தி வைக்கும் பொறுப்பை ஏற்று நிறைவேற்றியாகவேண்டியது அவசிய மாகும்.

இனங்களுக்கிடையேயான சிக்கல்களை யுத்தத்தின் மூலமாகவன்றி, புரிந்துணர்வும் விட்டுக்கொடுப்பும் கொண்ட சமாதானப் பேச்சுகள் மூலம் தீர்த்துக்கொள்ளும் சுலபமான வழியொன்றுண்டு என்பதனை இப்புத்திஜீவிகள் தரப்பு நாட்டின் பொது மக்களுக்கு உணர்த்தியாக வேண்டியுள்ளது. அப்பணி சிக்கல்கள் நிறைந்த தொன்றே. அம்முயற்சியில் பின்னடைவுகளை எதிர்நோக்க நேரிடக்கூடும். தேசத்துரோகிகள், இனத்துரோகிகள் எனப் பட்டம் சூட்டப்பட நேரக்கூடும். யுத்த விரும்பிகளதும், யுத்தத்தினால் இலாபமடையும் தரப்பினர்களதும் கொலை அச்சுறுத்தல்களுக்கு உள்ளாகநேரக்கூடும். இத்தகைய சவால்களுக்கெல்லாம் முகம் கொடுக்க நேர்ந்தாலும்கூட புத்தி ஜீவிகள் மற்றும் கற்றிந்தோர் என்ற ரீதியில் சமூகத்துக்குத் தம்மாலான அர்ப்பணிப்பை வழங்கும் நோக்கில் இவர்கள் செயற்பட்டாக வேண்டிய அவசியம் தற்போது ஏற்பட்டுள்ளது. ஆனால், இன்று தமிழ் புத்தி ஜீவிகள் போன்றே சிங்கள புத்திஜீவிகளும் கூட யுத்தத்துக்குப் பக்கபலமாகச் செயற்படவிளையும் போக்கைக் கொண்டிருப்பது துரதிஷ்டவசமானதொன்றாகும்.

### யுத்தத்தின் மூலம் முடிவு என்ற தப்பான நம்பிக்கை

இந்தக் கொடூர யுத்தத்தில் இரு தரப்பையும் சேர்ந்த அப்பாவிப் பொதுமக்களே பெரும்பாலும் உயிரிழக்க நேர்கிறது. தமது அன்றாட வாழ்க்கைத் தேவைகளைத் தேடிக்கொள்ள - தொழில்செய்ய வெளியில் சென்று வரநேரும் பொதுமக்களே கண்ணி வெடித் தாக்குதல்களில் சிக்கி உயிரிழக்க நேர்கிறதேயன்றி ஆடம்பர - வசதி வாய்ப்புமிக்க வாழ்க்கைத் தரத்தைக் கொண்டுள்ள தரப்பினர் பெரும்பாலும் இவற்றால் பாதிப்படைவதில்லை. விசேடமாக விடுதலைப் புலிகள் அமைப்புக்கு இத்தகைய நிலையை எடுத்துக்கூற வேண்டிய பொறுப்புத்

**தமிழில்: ராஜா**

தமிழ்ப் புத்திஜீவிகள் தரப்புக்கு நிறையவே உள்ளது. அதேசமயம் தென்பகுதிச் சிங்கள சமூகத்தவர் மத்தியில் வாழும் தமிழ்ப் பொது மக்கள் மீது குரோதம் பாராட்டாது புரிந்துணர்வுடன் செயற்படவேண்டிய பொறுப்பு சிங்கள சமூகத்தினரைச் சார்கிறது. அரச சார்பு ஊடகங்கள் யாவுமே இன்று தமிழ் மக்கள்மீது குரோதத்தை வளர்த்து விடும் வகையிலேயே சிங்கள மக்களைத் தூண்டி, உணர்ச்சி வசப்படுத்த முயன்று வருகின்றன. புத்தபெருமானின் போதனைகளான அன்பு, காருண்யம் என்பவற்றைச் சகல மக்கள் மீதும் செலுத்திச் செயற்பட வேண்டிய பௌத்த துறவிகள் தரப்பொன்று அரசியலில் தலையிட்டு இன்றைய அரசியல் சிக்கலை மென்மேலும் தீவிரமாக்கும் வகையில் கடுங்கோட்பாட்டு நிலையில் செயற்பட்டு வருவது கவலைக்குரியதாகும். அரசிடமிருந்து பல தரப்பட்ட வசதி வாய்ப்புக்கள், சலுகைகளைப் பெற்றுக்கொள்ளும் நோக்கில் அரசியல் சாராத தனிப்பட்ட அணிகள் சிலவும் கூட இத்தகைய அரசியல் சிக்கல்களில் மூக்கை நுழைத்துத் தமது கடுங்கோட்பாட்டுக் கொள்கை நிலை மூலம் சிங்களப் பொதுமக்களது மனங்களில் தமிழர்களுக்கு எதிரான உணர்வுகளைத் தூண்டிவிட்டுக் குட்டையைக் குழப்பி வருகின்றன. ஆனால், அவர்களது அத்தகைய செயற்பாடுகளால் ஏற்படும் விளைவுகளுக்கெல்லாம் இன்[illegible] பொதுமக்களே பலிக்கடாக்களாக ஆகவேண்டிய - நஷ்டஈடு செலுத்த வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளமை பாரதூரமானதொன்றே ஆகும்.

இந்த விடயம் தொடர்பாக நடந்து கொள்ளவேண்டிய விதம், வழிமுறை என்பவை குறித்து எமது பாதுகாப்புப் படைகள் தரப்புக்கு விரிவாக எடுத்துக் காட்ட நிர்வாகத் தரப்புக்கள் தவறி வருவது பெரும் தவறான அணுகுமுறையொன்றாகக் கொள்ளப்பட வேண்டியுள்ளது. தமது இறுக்கமான, கடுமையான செயற்பாடுகள் மூலம் தீவிர வாதத் தரப்புகள் மென்மேலும் உருவாகப் பாதுகாப்புத் தரப்புகள் வழியேற்படுத்தி வருகின்றன. அத்தகைய தீவிரவாதத் தன்மை மென்மேலும் வளர்ச்சியடைய வழிவகுக்காத விதத்தில் மனோதத்துவ ரீதியில் பொதுமக்கள் மத்தியில் பாதுகாப்புத் தரப்புக்கள் குறித்து நம்பிக்கை மற்றும் நல்லெண்ணம் உருவாகும் விதத்தில், பொது மக்களுடன் சுமுகமாக இணங்கிச் செயற் படப் பாதுகாப்புத் தரப்பினர் கற்றுக்கொண்டாக வேண்டியுள்ளது. சகல தமிழ் மக்களும் தீவிரவாதப் போக்குடையவர்களே; தீவிரவாத செயற்பாடுகளை ஆதரிப்பவர்களே என்ற தோற்றத்தை இந்நாட்டின் பாதுகாப்புப் படையினர் மறந்து அத்தகைய தமது நிலைப்பாட்டை மாற்றிக் கொண்டாக வேண்டியுள்ளது. சிரமமான இந்தப் பணிக்கான பொறுப்பு புத்தி ஜீவிகள் தரப்புக்குண்டு. இந்த விடயத்தில் நாட்டின் அரசியல்வாதிகள், ஊடகவியலாளர்கள் தரப்புகள் உணர்ந்து உதவ முன்வந்திருக்க வேண்டும். ஆனால் இன்று இத்தரப்பினர் ஏனைய வேறு அரசியல் கட்சிகளது தேவைகளை நிறைவேற்றி வைக்கும் விதத்தில் செயற்படுவதையே எம்மால் தெளிவாகப் புரிந்து கொள்ள முடிகிறது. முக்கிய தீர்மானம் அரசியல் வாதிகளால் மேற்கொள்ளப்படும் நிலை காரணமாக நாடு பாதுகாப்பற்ற நிலைக்கு உட்பட நேர்ந்துள்ளது.

### தற்கொலைப் போராளிகளாக தமிழ் இளைஞர்கள் முன்வருவதேன்?

இத்தகைய நிலை தொடர்சியாக நிலவ நேருமானால், அதன் காரணமாக வேறு சிக்கல்களும் உருவாகக் கூடும். நாட்டின் சகல அபிவிருத்தி நடவடிக்கைகளும் ஸ்தம்பித்துப் பின்னடைவைச் சந்திக்கநேரும். நாட்டின் ஒட்டுமொத்த நிர்வாகத்தையும் சுமுகமாக முன்னெடுக்க உதவுபவர்கள் நாட்டில் வாழும் பொதுமக்களே, தற்போதைய நாட்டின் நிச்சயமற்ற, உறுதியற்ற நிலை காரணமாக, இந்த யுத்தத்தின் பலாபலன் எவ்வாறமைந்த போதிலும், நாட்டின் அபிவிருத்தி முற்றுமுழுதாக முடங்கிப் போகும் அபாய நிலை நிலவுகின்றது. அது நிதி ரீதியில் கணக்கிட இயலாததொன்று என்பதுடன் நாட்டின் ஸ்திரமற்ற பொருளாதாரத் தளர்வை ஏற்படுத்துமொன்றாகவும் கருதத்தக்கதாகும். எமது நாடு சிறிய தொன்றான காரணத்தால் நாட்டின் நிர்வாகத்துறைகள் ஒன்றுக்கொன்றுடன் உள்ள தொடர்பும் உயர்வடைந்து காணப்படுகிறது. அந்த வகையில் சமூக ரீதியில் ஒரு தரப்பினருக்கு ஏற்படும் பின்னடைவு, பாதிப்பு ஏனைய தரப்பினர் மத்தியிலும் ஏதோ ஒரு அளவுக்குப் பாதிப்பை ஏற்படுத்துவதாக அமையும். உதாரணமாகக் கொழும்பு நகர்ப்புறத்தில் இடம்பெறும் குண்டுத் தாக்குதல் சம்பவமொன்றின் பாதிப்பு நாட்டின் ஏனைய பிரதேச மக்கள் மத்தியிலும் வலியை ஏற்படுத்துகிறது. மாத்தறை போன்றதொரு புற நகர்ப்புறப் பகுதியில் இடம்பெறும் தீவிரவாதச் சம்பவம் நாட்டின் ஏனைய பகுதிகளில் வாழும் மக்களது மனங்களிலும் எதிரொலிக்கின்றது. அதன் மூலம் மனித உணர்வுகளின் அபிவிருத்தி முற்று முழுதாகப் பாதிப்புற நேர்கிறது.

அண்மைக் காலமாக அதிகரித்து வரும் தீவிரவாதச் செயற்பாடுகள், இனங்கள் மத்தியிலான மனநெருக்கத்தையும், சிநேக பாவ உணர்வுகளையும் பாதித்து வருகிறது. அத்தகைய எண்ணப் பாதிப்புக்கள் நாளுக்கு நாள் அபிவிருத்தி கண்டு, இனங்கள் மத்தியிலான குரோத உணர்வு உயர்வடைய வழிவகுத்து வருகின்றது.

(13 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## 60 ஆவது பிறந்தநாள் வாழ்த்து



**பாலசிங்கம் (பாலா)**
**பரமேஸ்வரி**

இன்று (15.06.2008) ஞாயிற்றுக்கிழமை
ஜேர்மனியில் வசிக்கும்
**பாலசிங்கம் - பரமேஸ்வரி**
தம்பதிகள் தமது 60 ஆவது பிறந்த நாளை
ஜேர்மனியில் வெகு விமரிசையாகக்
கொண்டாடுகிறார்கள். அவர்களை

தம்பதிகள் சமேதராக
பல்லாண்டு காலம் சீரும் சிறப்புடனும்
வாழ எல்லாம்வல்ல இறைவனை
வேண்டுகின்றோம்.

வாழ்த்துவோர்:
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

த.சந்திரமோகன்,
82/11, பருத்தித்துறை வீதி,
3 ஆம் ஒழுங்கை, யாழ்ப்பாணம்.
(75016)


# மீண்டும் எப்போது வருவார்கள்?

**மக்கள் மன்றம்**

உதயன் நாளிதழில் 17.02.2008 வெளியீட்டில் மக்கள் மன்றம் பகுதியில் ''தென்மராட்சிக்கான மாற்றுப் போக்குவரத்துப் பாதைகள்; அதிகாரிகள் அக்கறை காட்டுவார்களா?'' என்ற எனது வேண்டுகோள் பிரசுரமாகியிருந்தது.

இதில் கைதடி- நீர்வேலி இணைப்பு வீதி, கைதடி- மட்டுவில் வீதி ஆகியவற்றின் தேவை குறித்து விளக்கப்பட்டிருந்தது.

பத்திரிகையில் வெளியான அடுத்தவாரமே வீதி அபிவிருத்தித் திணைக்கள (RDD) அதிகாரிகள் வந்து கைதடி- நீர்வேலி இணைப்பு வீதியைப் பார்வையிட்டனர். அதற்கடுத்த வாரம் காலை 7.00 மணியளவில் குறித்த திணைக்கள தொழிநுட்ப அதிகாரிகள் வந்தனர். நாம் அவர்களுக்கு சகல உதவிகளும் செய்து கொடுத்து மாலை 4.00 மணி வரை வீதியின் மதிப்பீட்டுப் பணிகளுக்கு உதவினோம்.

''உதயன் செய்தியால்'' பெரிய பலன் ஏற்பட்டுள்ளதாக ஆனந்தப்பட்டோம். தென்மராட்சிக்கும் வலிகாமத்துக்கும் இடையிலான போக்குவரத்தில் புதிய வழியேற்படுகின்றதென மகிழ்ந்தோம். ஆனால் இன்றுவரை நிர்மாணிப்புப் பணிகள் எதுவும் ஆரம்பமாகவில்லை. 3 மாதங்களும் கடந்துவிட்டன. ''வந்தார்கள், அளந்தார்கள், போனார்கள்'' என்ற கதையாகவே உள்ளது.



இங்கு காணப்படும் படத்தில் இவ் வீதியின் முற்றாக அழிவுற்றுள்ள பகுதியும், அதனைச் சீராக்க காலாவதியாகிப் போன மின்சாரத் தூண்களை மக்கள் நிறுவியுள்ளதையும் காணலாம். இம் மின்சாரத் தூணில் மோட்டார் சைக்கிளை உருட்டிச் சென்றபோது தண்ணீரில் தவறிவீழ்ந்து பலர் அவலப்பட்டதையும், கைத்தொலைபேசி உட்பட்ட பல இலத்திரனியல் பொருள்கள் நாசமுற்றதும் சர்வ சாதாரணமான விடயங்கள். இந்தச் சேதமான பகுதி கைதடிப் பக்கமே உள்ளது.

இன்னமும் 3 மாதங்களில் பருவமழை ஆரம்பமாகப் போகின்றது. அப்போது இவ் வீதியின் ஏனைய பகுதிகளும் அரிப்பிற்கு உள்ளாகி அழியத்தான் போகின்றன.

இவ்வீதியின் நீர்வேலிப் பக்கமான பகுதியில் முன் ஒரு கிலோமீற்றர் நீளமான பகுதி சட்ட விரோத மண் ஏற்றும் வாகனங்களால் மிக மோசமாகச் சிதைவுற்று வருகின்றது. சம்பந்தப்பட்ட அனைத்துத் தரப்பினரும் எதுவித நடவடிக்கையும் எடுக்காதுள்ளனர்.

**NECORD** திட்டம், **CAARP** திட்டம் போன்றவற்றின் ஊடாக இவ் இரு வீதிகளையும் நிலையாக அபிவிருத்தி செய்யுமாறு எமது வேண்டுகோளைச் சமர்ப்பிக்கின்றோம்.

கைதடி.

-மருதன்-


## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



திருமதி **பெனான்டோ**
**மேரிசந்திரா**

பிறப்பு
07.08.1948

இறப்பு
16.05.2008

*சங்கீதம் 116:15*
*கர்த்தருடைய பரிசுத்தவான்களின்*
*மரணம் அவர் பார்வைக்கு அருமையானது*

*அன்பின் உறைவிடமாய்*
*பாசத்தின் புகலிடமாய்*
*எம்மையெல்லாம் அரவணைத்து வளர்த்த*
*கள்ளங்கபடமில்லாத வெள்ளை*
*உள்ளத்துடனே சிரித்த புன்முறுவலடன்*
*பிள்ளைக்குப் பிள்ளைகளாய்*
*பார்த்த மருமக்களையும் அரவணைத்த*
*பேரப்பிள்ளைகளையும் உறவுகளையும்*
*தவிக்கவிட்டு எங்கே சென்றீரோ?*

(75312)

நாவலர் வீதி,
நாவாந்துறை.

தகவல்:
மகன் - **ஆனந்தன் குடும்பம்.**

### ஜெனரேற்றர் உடன் விற்பனைக்கு

**JK4 - Lester**
**(15 K.V.A)**
ஜெனரேற்றர்
விற்பனைக்கு
உண்டு.
தொடர்புகளுக்கு:
**தர்ஷா**
தமிழ்ப் பதிப்பகம்
இராச வீதி,
அச்சுவேலி.
தொ.பே :
0774083698
(75320)

### பாராட்டி வாழ்த்துகின்றோம்



எமது நெருங்கிய உறவினரும்
கொக்குவில் இந்துக் கல்லூரியில்
கடந்த பல ஆண்டுகள் காலமாக
ஆசிரியர், உதவி அதிபர்,
பிரதி அதிபர் ஆகிய பதவிகளை
வகித்தவருமான
**திரு.எஸ்.வி.மகேந்திரன்**
அவர்கள் யாழ்ப்பாணக் கல்வி
வலயத்தின் உதவிக்
கல்விப்பணிப்பாளராக (கணிதம்)
பதவி உயர்வு பெற்றமையையிட்டு
அவரைப் பாராட்டி வாழ்த்துவதுடன், கல்விச் சமூகத்துக்கான
அவரது பணி தொடர்ந்தும் சிறந்து நீடிக்க அருளுமாறு
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

*அம்பிகா ஸ்ரோர்ஸ்,*
*உரும்பிராய் கிழக்கு,*
*உரும்பிராய்.*
(சி/553320)

**இ.கணேசலிங்கம் (சின்னமணி)**
**குடும்பத்தினர்.**

### பெருமைக்குரிய வாடிக்கையாளர்களே!

**ஜி.எஸ்.லிங்கநாதன் அன் கோ** *வில்*

★ **புதிய சாறி பிளவ்ஸ்கள்**
**வந்துவிட்டன.**
**தெரிவுக்கு முந்துங்கள்.**

**G.S.லிங்கநாதன் அன் கோ**
தலைமை ஸ்தாபனம்: 13, 14, பெரியகடை, யாழ்ப்பாணம்.
கிளை ஸ்தாபனம்: 47, பெரியகடை, யாழ்ப்பாணம்.

### நாய்க்குட்டிகள் விற்பனைக்கு

45 நாள் நிரம்பிய பூச்சி நீக்கப்பட்ட ஜேர்மன் செப்பேட் நல்ல இன நாய்க்குட்டிகள் விற்பனைக்குண்டு.

T.P - 222 9253 (75303)

### இறைச்சிக்கோழி விற்பனை

புறொயிலர், கல்பேட் தினமும் சுத்தம்செய்து குறைந்த விலையில் பெற்றுக்கொள்ளலாம்.

**நல்லூர் பாம் சென்ரர்,**
19, முருகேசர் லேன், நல்லூர்.
(75296)

### உடன் தேவை

சிற்றுண்டி வகைகள் தயாரிப்பதில் அனுபவமுள்ள சமையலாள், சமையல் உதவியாள் தேவை. அனுபவமுள்ளவர்கள் உடன் தொடர்பு கொள்ளவும்.

**ஸ்ரீதாமோதர விலாஸ்**
**சைவ உணவகம்**
K.K.S.*வீதி, யாழ்ப்பாணம்.*
(சி/553316)

### விற்பனைக்கு

32, 10, 6, 3 KW ஆகிய டீசல் ஜெனரேற்றர்களும் வேறு பலதரப்பட்ட டீசல் இயந்திரங்களும் விற்பனைக்குண்டு.

**மூர்த்தி,**
*சிவன் வீதி, பரவைக்குளம்,*
*திருநெல்வேலி.*
(75272)

### பிள்ளையார் அச்சகம்

குறைந்த செலவில் Cool Lamination
செய்துகொள்ளலாம்.
**பிள்ளையார் அச்சகம்**
பச்சை மாளிகை,
வண்ணார்பண்ணை சிவன்கோயிலடி,
கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
(சி/553109)

### வீடும் காணியும் விற்பனைக்குண்டு

*உரும்பிராய் கற்பகப் பிள்ளையார் கோயில் வீதியில் அமைந்துள்ள 5 பரப்புக் காணியும் அதற்குள் இருக்கும் பெரிய 6 அறைகள் கொண்ட வீடும் விற்பனைக்குண்டு.*

தொடர்பு முகவரி: தொ.பே: 0112521953
45, ... லேன், ... கொழும்பு 15.

### திருமண சேவை
**www.kumbam.com**

வீட்டில் இருந்தபடியே வாழ்க்கைத் துணையைத் தேடுவதற்கு
முதன் முறையாகத் தமிழிலே வெளிவரும் இணையத்தளம்
**www.kumbam.com** ஆகும்.
நீங்களே கும்பம் மூலம் வயதின்படி, நாடு ரீதியாக,
தொழில் ரீதியாக, மதம் மற்றும் உயரம் அடிப்படையில்
தேடலாம், தெரியலாம். சகல தரவுகளும் இரகசியமாகப்
பேணப்படும். எம்மிடம் 1500 இற்கும் மேற்பட்ட
வெளிநாட்டு, உள்நாட்டுப் பதிவுகள் உள்ளன. முதன்
முறையாகத் தொலைபேசி ஊடாக இலவசப் பதிவு
(யாழ்.மக்களுக்காக).
உடனே அழையுங்கள் - 0117 200 474

| | |
|---|---|
| இலங்கை | 0117 200 474 |
| கனடா | 001 416 2737 780 (24 மணிநேர சேவை) |
| லண்டன் | 0044 208 123 2093 |
| அவுஸ்திரேலியா | 0061 39 016 0164 |
| மின்னஞ்சல்: | admin@kumbam.com |

**www.kumbam.com** ஒரு தமிழ்ப் பாரம்பரிய
விவாகத்தளம். இன்றே பார்வையிடுங்கள்.
குறிப்பு: வெளிநாடுகளில் உள்ள உறவினர்களைக்
கொண்டும் பதியலாம்.
(சி-553194)


### அறிவித்தல்

13.09.2007ஆம் திகதி சங்கானை வைத்தியசாலையில் மு.ப.11.30 மணிக்கு அனுமதிக்கப்பட்டு பிற்பகல் 2 மணிக்கு பிரசவித்து 4 மணியளவில் வீடு சென்ற கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த கௌரிராம் தபோதினி தம்பதி யினரை உடனடியாக சுகாதார சேவைகள் பிராந்தியப் பணிப்பாளரைச் சந்திக்குமாறு கேட்கப்படுகிறார்கள். இவர்களைப் பற்றிய விவரம் தெரிந்தவர்கள் பிராந்தியப் பணிப்பாளருக்கு அறிவிக்கவும்.

(சி/553322) - யாழ்.பிராந்திய சுகாதாரப் பணிப்பாளர்.


### கண்ணீர் அஞ்சலி



*எமது பாடசாலையின் ஆசிரியர்*
சே.ஜெயானந்தன் *அவர்களின் அன்புத் தந்தை*
**வீரகத்தியார் சேனாதிராசா**
*அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும்*
*அவரது குடும்பத்தினருக்கு ஆழ்ந்த*
*அனுதாபங் களைத் தெரிவிப்பதுடன்,*
*அவரது ஆத்மா சாந்தியடைய*
*இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்*
(75315)

ஆசிரிய நலன்புரி ஒன்றியம்,
யா/கச்சாய் அ.த.க. பாடசாலை, கொடிகாமம்

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,
கல்விசாரா ஊழியர்கள்

### கண்ணீர் அஞ்சலி



*கிறின் பீல்ட் விளையாட்டுக்*
*கழகத்தின் ஸ்தாபகரும்*
*போஷகருமான*
**த.குமார்** *(மாஸ்ரர்)*
*அவர்களின் பிரிவால் துயருறும்*
*குடும்பத்தினருக்கு அனுதாபங்களைத்*
*தெரிவிப்பதோடு அவரின் ஆன்மா*
*சாந்தியடையப் பிரார்த்திக்கிறோம்.*
(75318)

குருசோ வீதி, யாழ்ப்பாணம். **கிறீன் பீட்ல் ச.ச.நிலையம்.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எமது நோயாளர்களுக்குத் தேவையான இரத்தம் முழுவதையும் இங்கேயே பெறவேண்டிய நிலை



உயிர்வாழ உயிர்நாடியாக இருப்பது உதிரமாகும். உதிரம் தந்தோர் உயிர்தந்தோர் ஆவார். உயிருக்கு உயிர்நாடியாக உதிரம் இருந்த போதிலும், அந்த உதிரத்தை திட்டமிட்ட ஒழுங்கில்

வைத்திய நிபுணர்
**இ. சிவசங்கர்,**
(இரத்த வங்கிப் பொறுப்பதிகாரி)

தானமாக வழங்கும் போது அதனால் கெடுதல் எதுவும் ஏற்ப டாது. சுகதேகியான ஒருவர் மருத்துவ பிரிசோதனைக்கு உட்பட்டு இரத்தம் வழங்கும் போது முற்று முழு தாக அது பாதுகாப்பானதும், பாதிப்பற்றதுமான செயற்பாடாகவே அமைகிறது.

இரத்ததானம் செய்வதால் உடனடிப் பாதிப்போ அன்றேல் நீண்டகால பாதிப்போ ஏற்படுவதில்லை. ஓய்வு எடுக்க வேண்டும் என்றோ, மேலதிகமாக சத்தான உணவு உட்கொள்ள வேண்டுமென்றோ ஒரு தேவை இல்லை. இரத்ததானம் இயல்பாகச் செய்யக் கூடிய ஒரு சுலபமான விடயமாகும். இரத்தம் வழங்குகின்ற நேரம் 15 நிமிடத்திற்கும் குறைவானதாகும்.

இத்தகைய சுலபமான, பாதிப்பற்ற ஆனால் உயிரைக் காக்கும் இந்த உயரிய சேவையைப் பொதுவாக சமூகத்தின் ஒரு சத வீதமானவர்களே செய்கின்றனர். இது சுலபமான செயற்

## இந்த உயிர்காக்கும் உன்னத சேவையைச் செய்வதற்கு ஏனையோருக்கும் அழைப்பு

பாடாக இருந்தாலும் இதை ஆற்றுவதற்கு சமூக உணர்வு தேவைப்படுகின்றது. சமூக உணர்வு மிக்கவர்களே இச் சேவையை தொடர்ந்து செய்து வருகின்றனர். தனது சமூக உணர்வின் நிமித்தம் ஒருவர் எடுக் கின்ற சொந்தத் தீர்மானமே ஒருவரை இப் புனிதமான சேவையைச் செய்யத் தூண்டுகின்றது. அதனைத் தொடர்ந்து செய்யவும் வைக்கின்றது. இத்தகைய சமூக உணர்வுடன் தீர்மானம் எடுத்து இரத்ததானம் செய்யும் பலர் எம்மத்தியில் இருந்தார்கள், இருக்கின்றார்கள், தொடர்ந்து உருவாகிக் கொண்டும் இருக்கின்றனர்.


இத்தகையவர்களின் அரும்பெரும் செயலினால் காப்பாற்றப்படுகின்ற உயிர்களின் எண்ணிக்கை எமக்குத்தான் தெரியும். முகம் தெரியா மனிதர்களின் உயிர்காக்க தமது உதிரம் தன்னை உவந்தளிக்கின்ற நல்லோர் எமது வைத்திய சேவைக்கு ஒத்துழைப்புத் தருகின்றனர். அகால நேரத்திலும் எமது அவசர அழைப்புக்கு செவிமடுத்து ஓடோடி வந்து இரத்ததானம் செய்வதனால் பல உயிர்கள் கடந்த காலத்தில் காக்கப்பட்டுள்ளன.

### தொடர்ந்து இரத்ததானம் செய்வோர் 90 சத வீதமாக உயர்வு

எமது மண்ணில் இரத்ததானம் செய்வோர்களின் விகிதாசாரத்தை எடுத்து நோக்கினால்,

## சமூக உணர்வுடன் தாமாகவே தீர்மானம் எடுத்து பல தடவைகள் இரத்ததானம் செய்வோர் அதிகரிப்பு

அது அதிகரித்துச் செல்வதை காணக்கூடியதாக உள்ளது. சமூக உணர்வுடன் தொடர் இரத்ததானம் செய்பவர்கள் 25 வீதத்திலிருந்து





90 வீதமாக உயர்ந்துள்ளனர். இரத்த வங்கியின் இரத்த தேவையை 100 வீதமாக இத்தகைய தன்னார்வக் குருதிக் கொடையாளர்களின் இரத்தத்தினால் பூர்த்தி செய்கின்ற நிலை விரைவில் உருவாகும் என்ற நம்பிக்கை எமக்குண்டு. சமூக உணர்வு அதிகரித்து செல்வதும், இரத்ததானம் சம்பந்தமான விழிப்புணர்வு விரிவடைந்து செல்வதும் இந்நிலைக்கு காரணங்களாகும்.

ஒரு விடயத்தை எம்மக்கள் புரிந்து கொள்ள வேண்டும் என விரும்புகின்றோம். தற்போதைய சூழ்நிலையில் இப்பிரதேச மக்களின் இரத்தத் தேவையை இப்பிரதேச மக்களே பூர்த்தி செய்யவேண்டிய நிலை உள்ளது. சமூகம் தனக்கான இரத்தத் தேவையை தானே வழங்கி, சேமித்துவைத்து மீண்டும் பாவித்துக் கொள்ளும் நிலையே இரத்த தானமும் இரத்தவங்கிச் செயற்பாடுமாகும்.

எமக்குத் தேவையான இரத்தத்தை நாமே வழங்கி எமக்கு தேவையான பொழுது பாவித்துக் கொள்கின்றோம். எமது சமூகம் இத் தாற்பரியத்தை நன்குணர்ந்து இரத்த தானம் செய்ய முன்வரவேண்டும். ஒருமுறை இரத்ததானம் செய்த பின்னர் இது ஆத்ம திருப்தி தருகின்ற உன்னத சேவையாகும். பயன்தூக்கார் செய்த உதவி நயன்தூக்கின் நன்மை கடலிற் பெரிது.

# இயற்கை வடிவாம் இறைவனை எமது இதயத்திற்குள் இணைய வைப்பது இசை

இறைவன், இயற்கை, இனிமை, இதயம், இன்பம் இவற்றின் இணைப்பே இந்த



உலகத்தில் இவ்வுடல் எடுத்ததன் பயனாகும்.

பஞ்ச பூதங்களில் முதன்மையான ஆகாயத்திலிருந்தே ஒளி தோன்றியது. அந்தக் கணமே 'ஸப்தம்' தோன்றியது. இறைவனுடைய அவதாரங்களில் முதன் மையானது, 'ஸப்தப் பிரம்மமயி' என்று பகவான் பாபா குறிப்பிடுகிறார். அசைவு ஏற்பட இசை தோன்றும். இதிலிருந்தே பஞ்ச பூதங்களும் படிப்படியாகத் தோன்றின. அசைவு தொடர இசை தொடர்ந்தது.

காற்றை ஒழுங்காக்கி கானம் என்றான். நெருப்பைச் சீராக்கி மந்திர ஒலியுடன் சேர்த்து யாகம் கண்டான். ஆற்றின் சல சலப்பை, அலைகடலின் ஓசையை தாளம் ஆக்கினான். மண்ணின் தன்மை, மனிதப் பண்பை பாடல் ஆக்கினான். அநாகத ஒலியை அனைவருக்கும் கேட்கும்படி செய்து ஆண்டவனை அடையாளம் காட்டினான் மனிதன். அதுவே இசையாகியது. இயற்கை வடிவாம் இறைவனை இதயத்திற்குள் இணைய வைத்தது. இதயம் இயங்குகிறது, இறைவன் இதயவாசி ஆகிறான். இயற்கையிலிருந்து இசை வந்தது. இசையினாலே இயற்கை வளர்ந்தது. அதுவே இசையெனும் நாதத்தை, உடுக்கையைக் கையிலேந்தி பஞ்சபூதங்களின் அசைவையும், இசைவையும் காட்டும் நடராஜப்பெருமானின் வடிவம் ஆகிறது.

மனித உடலில் தோல் மற்றும் நரம்புகள் நுண்ணிய அதிர்வுகளையும் உணரக் கூடிய ஆற்றல் பெற்றவை. நரம்புகள் எம்முடலைச் சுற்றிப் பின்னிப் பிணைத்து இருக்கின்றன. இவையே அதிர்வுகளைப் பெற்று உணர்வுகளை ஆக்குகின்றன. உணர்வுகளே குணங்களை ஆக்குகின்றன. ஆக இசையதிர்வுகளே குணங்களை ஆக்கும், ஊக்கும், தாக்கும், போக்கும் தன்மையுடையவை.

### "நரம்புவழி ஆசைகளுக்கு வரம்புகளை வை"

எனவேதான் இந்த 'நரம்புவழி ஆசைகளுக்கு வரம்புகளை வை' என்றார் நம் சாயி பகவான். அந்த வரம்புகளுக்கு இறைவன் தந்த வரம் இறைநாம இசை. இதனால் எண்ணம், சொல், செயல் என்பன தூய்மையடைய அவை எம்மை இறைத் தன்மைக்கு உயர்த்துகின்றன. அப்போது நித்தியமாகிய மனச் சாந்தி ஏற்பட்டு சாந்நித்தியமாகி, சத்தியத்தில் நிலைக்கிறது மனம்.

சத்ய சொரூபனாகிய சாயிநாதன் பஜனையின்போது தன்னையே மறந்து கண்களை மூடி ரசித்து, லயித்து இருப்பது சத்தியத்தில் மூழ்கியிருப்பதனாலோ! என்று எண்ணத் தோன்றுகிறது. ஆக, இசையினால் 'சத்யம்'

**பகவான் ஸ்ரீ சத்திய சாய் சேவா சமிதியினர் எதிர்வரும் சனிக்கிழமை (21.06.2008) பி.ப. 2.30 மணிக்கு நல்லூர் இளங்கலைஞர் மண்டபத்தில் 'சர்வமத இன்னிசை' நிகழ்வை நடத்தவுள்ளனர். அதனை முன்னிட்டு**

சாத்தியம். அது தருமே இறை ஐக்கியம். இது அருளாளர் அனுபவ வாக்கியம். உணர்ந்தால் உண்டு யோக்கியம். பிறப்பே பெரும் பாக்கியம்.

கர்ண கடூரமான இசையை நாம் கேட்க விரும்புவதில்லை. அதேபோல் நாமும் அவ்வாறே செய்யவும் கூடாது. நரம்புக ளின் மோசமான செயற்பாட்டைத் தூண்டும் இசையினை நாம் இசைத்தால், ரசித்தால் இதய நோயே வருவதாகவும், இயற்கைகூட மாறுபடுவதாகவும் விஞ்ஞானம் நிரூபித்திருக்கிறது. எனவே மனதிற்கு இதமான, மனிதனை மனிதனாக்கி, தெய்வீக நிலைக்கு உயர்த்தும் இசையையே நாம் கேட்க வேண்டும், இசைக்கவேண்டும், மிருக குணங்களைப் பொசுக்க வேண்டும், ஜாதி, மத மொழி பேதங்களை நசுக்கவேண்டும்.

சுருதி விலகாத ராகம்; லயம் பிசகாத தாளம்; நல்லுணர்வு காட்டும் பாவம்; இவையே இசையின் 'தர்மம்'. வாழ்வின் தர்மம்.

இந்தத் தர்மமே கர்வமானால் சர்வமும் போய்விடும். இதற்கு இராவணன் தூக்கிய கைலையே சாட்சி. அவன் தன்கையையும் தலையையும் கொய்து, அதனால் வீணை செய்து, இசையை மழையெனப் பெய்து, ஆணவத்தை அறுத்த பின்பே ஆண்டவன் அருள் கிடைத்தது. ஆணவம் நீங்கிய அறிவு எனும் தலை 'சத்யம்'. வன்முறையென்ற ஆயுதம் இல்லாத நல்ல செயல் என்ற கை, தர்மம், இரண்டையும் சேர்த்து, ஆத்ம சுருதியெனும் வீணையை மீட்டி தன்னை மீட்கப் பாடினான் இராவணன்.

ஆணவத்தோடு வரும் இசை ஆண்டவனுக்குச் செய்யும் வசை. அவனறிவான் அதன் திசை; மனதில் வேண்டும் நாம இசையெனும் பசை. ஆக இசை, வாத்தியம் என்பன அவனிடமிருந்தே வந்தன. துன்பத்தால் நெரிய நெரிய அவனுக்கே தெரிய வந்தது. இன்பம், துன்பம் இரண்டும் எமது செயலாலே வருகிறது. அதற்கு விடையும் எமக்குள்ளேயே இருப்பதென்றும் இதனால் வரும் அமைதியே சாந்தி என்றும்.

### சாந்தி உன்னுள்ளேயே இருக்கிறது

'சாந்தி' அது வெளியில் இல்லை. உன்னுள்ளேயே இருக்கிறது, என்கிறார் சாயிநாதன். அலைகடலின் ஆழத்தில் அமைதியிருக்கும். ஆனந்த இசையின் பின் அமைதியிருக்கும். சஞ்சலத்தின் பின் சாந்தியிருக்கும்.

வேற்றுமையில் ஒற்றுமை காண்பது இசை. பழமையிலும் இனிமை, இளமை

## ஸ்ரீ சத்திய சாயி பாபா சொல்லும் சத்யம் மற்றும் மனிதப் பண்புகளுக்கு உயர உதவுவதும் இசையே

யிலும் புதுமை, புதுமையிலும் வளமை என என்றும் இனிமையுள்ளது இசையே. சமய, சமூக, கலாசார பண்பை பிரதிபலித்து அனைத்தையும் இணைப்பது இசையே. அன்பு எப்படியோ அப்படியே இசையும். அன்பு என்ற ஆண்டவனுக்கு கீதம். அந்த ஆனந்தம் பேதத்தை போக்கும். இதுவே பக்தியிசை. இறைப்பண்பே நாமென ஆக்கும் பண்ணிசை. தேவாரஇசை, அருளிசை - இசையவைக்கும். இறைவனை அசைய வைக்கும். கல் மனதையும் உருகவைக்கு அன்பிசை நல்லிசை.

பத்தியிசை பாமரனைப் பரமனாக்கும். "இதய பாவனையுடன் பாடும் பாடலே இதயத்தில் வாசம் செய்யும் இறைவனை வெளிக் கொணரும்" என்கிறார் சாயிநாதன். இசை- அது இதய பாஷை. இறை - அது இதய ஓசை. இதுவே பக்தி வாழ்வின் பூசை. வாழ்வில் இவ்வாசை என்றும் வேண்டும். ஒலிக்கட்டும் அன்பின் ஓசை.

### உண்மைக் கலைஞன்

சாமகானம் இசைப்பவன் சாதுமனம் ஆனவன். அவனே உண்மைக் கலைஞன். இயற்கையின் ஒவ்வொரு அசைவையும் இசையாய் காணும் இறைத்தன்மை கொண்டவன். அழகெனும் அமுதத்தை இசையாய் பொழிபவன். வித்தையினாலே விளம்பரம் தேடும் விருப்பம் இல்லாதவன். அனைத்து உயிரினங்களையும் அழைத்து அரவணைக்கும் இசையைத் தருபவனே 'அஹிம்சை' என்ற சொல்லிற்கு அர்த்தமாகின்றான்.

பாடல் வரிகளிலே, பாடும் இசைதனிலே தன் அகத்திலிருந்து எழுந்துவரும் பாவத்தோடு பாடுபவனே பாடகன் . இத்தகைய இசையே பகவான் ஸ்ரீ சத்தியசாயி பாபா சொல்லும் சத்யம், தர்மம், சாந்தி, பிரேமை, அஹிம்சை என்ற மனித மேம்பாட்டுப் பண்புகளைத் தந்து மனிதனை இன, மத, மொழி வேற்றுமையற்ற உன்னத தெய்வீக நிலைக்கு உயர்த்தும்.

பூர்வ கர்மம்- இதுவே இசையின் தர்மம். கலைப்பிறப்பின் மர்மம். கலைஞன் பிறக்கிறான். அது மட்டுமல்ல பாடல்களின் கருத்துகள் பண்பாட்டுப் பண்பட்டு, நல்ல 'பண்' பட்டு இதயம் தொட்டு, இனிமை தந்தால் உழைப்பு உயரும், உயர்வு பிறக்கும். உண்மை நிலைக்கும். வாழ்வு சிறக்கும். இறையன்பு எம்மோடு கலக்கும்.

இனி சங்கீதச் சொற்களில், சங்கேதமாய் சாயியின் குரலைக் கேட்போம்:

மதங்களை இணைக்கும் பதம் - இதயங்களை இணைக்கும் ரிதம்

ஸ்வரங்கள் சேர்ந்தால் ராகங்கள் - கரங்கள் சேர்ந்தால் தாளங்கள்

இருக்கலாம் பலப்பல கிருதி - இருக்கவே வேண்டுமோர் சுருதி

அனைவர்க்கும் சிவப்பே குருதி - இசைப்போம் ஆனந்தம் பருகி

வாழ்க்கையே தனி ஆவர்த்தனம் - வளமை சேர்க்கும் சங்கீர்த்தனம்

இன்பம் ஏற ஆரோகணம்- துன்பம் இறங்க அவரோகணம்

இன்ப துன்பச் சங்கதிகள் - இணையும் வாழ்வே சங்கீதம்

ஆத்ம இசையே தருமநாதம் - ஆண்டவன் விரும்பும் ஒரு கீதம்

இறையின் இசையின் சாதகம் - இவற்றால் உண்டு மனோலயம்

இறைக்காய் இசைப்பதே உன் தர்மம் - உண்டு வாழ்வில் நல்வர்ணம்

ஏழை என்பவன் கீழ்ஸ்தாயி - இருப்பவனோ மத்திமஸ்தாயி

சேவை இசைந்தால் மேல்ஸ்தாயி- சேர்வார் உன்னுள் ஸ்ரீசாயி.

**சிவஞானம் சிவபாலன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை மாணவர்களுக்குப் பெரும் வரப்பிரசாதமாக அமையும் தமிழ் நாட்டுப் பல்கலைக்கழகங்களின் உயர்கல்வி வசதிகள்

இந்த கட்டுரையின் நோக்கமாவது இந்தியாவில் (குறிப்பாகத் தமிழ் நாட்டில்) உயர்கல்வி பற்றிய அடிப்படை அறிவினையும் ஒரு சமுதாய விழிப்புணர்வை மாணவர்களுக்கும் ஏனையோருக்கும் ஏற்படுத்துவதாகும்.

ஆண்டுதோறும் இலங்கையில் ஒரு லட்சத்து 20 ஆயிரம் மாணவர்கள் ஜீ.சீ.ஈ. உயர்தரப் பரீசைக்கு தோற்றுகிறார்கள். அவர்களில் 18,000 மாணவரே பல்கலைக்கழகங்களில் அனுமதி பெறுகின்றார்கள். ஏனையோரில் கணிசமான அளவினர் வெளிநாடுகளில் உயர்கல்வியைத் தொடர விரும்புகிறார்கள். பல மாணவர்கள் சித்தியடைந்தும், திறமை இருந்தும் பல்கலைக்கழக தரப்படுத்தலால் அனுமதி கிடைக்காமல் அல்லது விரும்பிய துறைகளில் இடம் கிடைக்காமல் மறுபடியும் பரீட்சை எடுக்க வேண்டிய நிர்ப்பந்தத்திற்கு உள்ளாகிறார்கள். ஆனால் இன்றைய சூழ்நிலையில் மேலும் ஒரு வருடத்தினை வீணடித்து, கால விரயம் செய்து மறுபடியும் பல்கலைக்கழக அனுமதிக்கான வெட்டுப்புள்ளிகளுக்காக காத்திருந்து இப்படியான குழப்ப நிலையில் உள்ளவர்களுக்கு இந்த கட்டுரை ஒரு தெளிவான முடிவெடுக்க உதவும்.

**தமிழ் நாட்டில் கல்வி கற்பதால் உள்ள சில நன்மைகள்**

* இங்கே பாடத்திட்டங்கள் உரிய காலத்தில் தொடங்கி உரிய நேரத்தில் முடிக்கப்பட்டு மாணவர்கள் குறிப்பிட்ட காலத்திலும் பட்டதாரி ஆகிவிடுகிறார்கள்.

**'கல்வி நலன் நாடி'**

* எந்த விதமான புறச்சூழலும் கல்வியை பாதிக்காத வகையில் அமையப் பெற்றுள்ளது.
* கட்டணங்கள் நியாயமானவையாகவும் வாழ்க்கைச் செலவு ஒப்பீட்டளவில் குறைவாகவும் உள்ளது.
* தமிழ்மொழி, கலாசாரம் என்பன ஒன்று என்பதால் இலகுவாக குறிப்பிட்ட சூழலில் மாணவரை உள்வாங்கக் கூடியதாக இருத்தல்.
* கல்வியின் தரமானது மேலைத்தேய நாடுகளுக்கு இணையாக மிகக்குறைந்த செலவுடன் பெற்றுக் கொள்ளக்கூடியதாக உள்ளது.

இன்றைய காலகட்டத்தில் உலகத்தில் வளர்ந்து வரும் சவால்களை சந்திப்பதற்கு ஒவ்வொரு மாணவரும் அவரவர்க்கு பொருத்தமான துறைகளில் பட்டம் பெற்றிருத்தல் அவசியமாகிறது. இதற்கு ஆகக்குறைந்தது ஜீ.சீ.ஈ. சாதாரணதரம் அல்லது உயர்தரச் சித்தி அடைந்திருத்தல் போதுமானது என்பது பலரும் அறிந்திராத ஒரு விடயம்.

**தமிழ்நாட்டில் உள்ள முக்கியமான பல்கலைக்கழகங்கள்**

இலங்கையை போன்றே தமிழ் நாட்டிலும் உள்ள பல்கலைக்கழகங்கள் அனைத்து பீடங்களையும் திறமையான மாணவர்களையும் உள்ளடக்கி நிர்வகிக்கப்படுகின்றன.

எல்லாப் பல்கலைக்கழகங்களும் ஒரே வகையான கல்வியை வழங்குவதில்லை. ஒவ்வொரு பல்கலைக்கழகங்களும் ஒவ்வொரு துறைகளில் சிறப்பு கவனம் செலுத்துகின்றன.

**பல்கலைக்கழகங்கள்**

1. அண்ணா பல்கலைக்கழகம்

இதுபொறியியல் (Engineering) துறையில் சிறப்பு கவனம் செலுத்துகின்றது.

தமிழ் நாட்டில் உள்ள பெரும்பான்மையான பொறியியல் கல்லூரிகள் எல்லாம் அண்ணா பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பட்டவையே. நிர்வாகத்தை சிறப்பாக செய்வதற்காக அண்ணா பல்கலைக்கழகம் நான்கு நிர்வாக அலகுகளாக பிரிக்கப்பட்டு நிர்வகிக்கப்படுகிறது.

1. அண்ணா பல்கலைக்கழகம் -சென்னை
2. அண்ணா பல்கலைக்கழகம்- கோயமுத்தூர்
3. அண்ணா பல்கலைக்கழகம்- திருச்சி
4. அண்ணா பல்கலைக்கழகம் - திருநெல்வேலி

இவை எல்லாவற்றிலும் ஏறத்தாழ 300 கல்லூரிகள் இணைந்து செயற்படுகின்றன.

2. DR.M.G.R பல்கலைக்கழகம்

இது மருத்துவம் சம்பந்தமான கல்வியினை வழங்குகின்றது.

3. DR. அம்போத்தகர் சட்டக்கல்லூரி

4. அண்ணாமலைப்பல்கலைக்கழகம்

* சென்னைப் பல்கலைக்கழகம்
* பெரியார் பல்கலைக்கழகம்
* மதுரை காமராஜர் பல்கலைக்கழகம்
* பாரதியார் பல்கலைக்கழகம்
* பாரதிதாசன் பல்கலைக்கழகம்

இவை இலங்கையில் உயர்தரத்தில் கலை, விஞ்ஞானம், வர்த்தகம் ஆகிய துறைகளில் படித்த மாணவர்களுக்கான உயர்கல்வியை வழங்குகின்றன.

## மேலைத்தேய நாடுகளுக்கு இணைவாக குறைந்த செலவுடன் கல்வி கற்க வாய்ப்புகள்

**கல்லூரிகள்**

இந்தியாவில் உள்ள மாணவர்களுடன் ஒப்பிடுகையில் பல்கலைக்கழகங்களில் உள்ள இடங்கள் பற்றாக்குறையாக உள்ளபடியால் பல்கலைக்கழகங்கள் தனியார் கல்லூரிகளின் உதவியுடன் தமது பாடத்திட்டத்தினை நடைமுறைப்படுத்துகின்றன.

கட்டணங்கள் யாவும் கல்லூரியினாலேயே அறவிடப்படுகின்றன. ஆகவே ஒரே தரத்திலான கல்வி (Syllabus) வழங்கப்பட்ட போதும் கல்லூரிகள் அறவிடும் கட்டணங்கள் ஒன்றிலிருந்து ஒன்று வேறுபடுகின்றன.

பொதுப் பரீட்சைகள் யாவும் பல்கலைக்கழகத்தினால் எல்லாக் கல்லூரிகளுக்கும் ஒரே நேரத்தில் நடத்தப்பட்டு கணிப்பீடுகள், முடிவுகள் என்பன பல்கலைக்கழகத்தினாலேயே வழங்கப்படுகின்றன.

குறிப்பிட்ட பல்கலைக்கழகத்தின் கீழ் உள்ள எந்தக் கல்லூரியில் படித்திருந்தாலும் பட்டமானது பல்கலைக்கழகத்தின் பெயராலேயே வழங்கப்படுகின்றன.

**கல்வித்துறைகளும் பாடப்பிரிவுகளும்**

**1.பொறியியல் ( Engineering)**

**காலம் :- 4 வருடம்**

பாடப்பிரிவுகள் :-

1. Civil Engineering
2. Electrical & Electronics Engineering
3. Mechanical Engineering
4. Fashion Technology
5. Computer Science & Engineering
6. Electronics & Communication Engineering
7. Information Technology
8. Aero nautical Engineering
9. Mechatronics

வழங்கப்படும் பட்டம் B.E (Bachlor Of Engineering)

**அடிப்படைத் தகுதி :-** உயர்தரத்தில் கணிதப்பிரிவில் 3 பாடங்களில் (Combined Maths, & Chemistry) சித்தியும் குறைந்த பட்சம் சாதாரணதரத்தில் ஆங்கிலப்பாடத்தில் சித்தி அல்லது வேறு ஏதாவது ஆங்கில கற்கை நெறியில் சித்தி.

2. மருத்துவத்துறை (medicine)

**1. MBBS**

**காலம்:- 5 1/2 ஆண்டுகள்**

**2. M.Pharmacy**

**3. Dental**

**4. Nursing**

போன்ற கல்வித்துறைகள்

**அடிப்படைத் தகுதி :-** உயர்தரத்தில் விஞ்ஞான பிரிவில் மூன்று பாடங்களிலும் (03) (Biology, Chemistry & physics) சித்தி மற்றும் குறைந்த பட்சம் சாதாரணதரத்தில் ஆங்கிலப் பாடத்தில் சித்தி அல்லது வேறு ஏதாவது ஆங்கில கற்கைநெறியில் சித்தி.

3. நிர்வாகத்துறை (Administration)

**MBA** (master of business admistration)

**அடிப்படைத் தகுதி :-**

ஏதாவது ஒரு Bachlor Degree ஆனால் அதில் கணிதம் அல்லது கணக்கீடு ஒரு பாடமாக இருத்தல் அவசியம்.

4. கலை மற்றும் விஞ்ஞான வர்த்தகத் துறை

**B.A** **Tamil**
**English**
**History**
**Music**

தகுதி :- ஏதாவது ஒரு துறையில் உயர்தரச்சித்தி

குறிப்பு :- இத்துறை நவீன தொழில்நுட்ப அறிவியலுடன் கூடியது.

B.C.A - Bachelor of Computer Application
B.B.A - Bachelor of Business Administration
B.B.A (ca) - B. B. A Computer Application
B. Com -Bachelor Commerce
B.Com(CA)-B.Com Computer Application
B.B.M(Bachelor of Business Manage ment)
B. Com (Coparate Seralary Ship)
B.Sc (Bachelor Science)

i. Computer Science
ii. Maths
iii. Physics
iv. Cateing & Hotel Management)
v. Chemistry
vi. Maths (Computer Application)
vii. Textile & Fashion design
viii. Microbiology
ix. Biochemistry
x. Bioinformatics
xi. Bio technology
xii. Visual Communication
xiii. Costume Design & Fashion
xiv. Computer Application

B.B.A, B.C.A, B.Sc. பட்டப்படிப்புகள் பற்றிய மேலதிக தகவல்களை WWW. COLLEGES INTAMILNADU.Com, WWW. KALVIMALAR.Com. ஆகிய இணையத் தளங்களில் இருந்துபெற்றுக் கொள்ளலாம்.

*(வளரும்).*

## சொற்சிலம்பம் - போட்டி இல: 14



அனுப்புபவர் பெயர்:......................................................

விலாசம்:......................................................

......................................................

கையொப்பம்:......................................................

**மேலிருந்து கீழ்**

1. மமதை/ செருக்கு.
2. கிரகங்களில் ஒன்று/ கிழமைகளில் ஒன்று.
3. அறிவீனன்/ சாதாரணமானவன்.
4. ரகம்.
5. இளைய உடன்பிறப்பு கடைசி எழுத்தை இழந்து நிற்கிறான்.
8. வேறுபடுவதைக் குறிக்கும்.
9. ஒரு பிரபந்த வகை இது.
10. கம்பன் மகன்/ அமராவதியின் மனம் கவர்ந்தவன்.
12. ஒரு திசையின் சுருக்கம்.
13. படர்க்கை, பன்மையைக் குறிக்கும் சொல்.
15. ஓட்டை/ துவாரம் போடு.
17. ஒரு அரிசி வகை.
19. ஒழுங்கில் அமைந்தது.
20. மத்தி/மையம்.

**இடமிருந்து வலம்**

1. நிகழக்கூடாத ஒன்று.
6. பழம்.
7. சமயம்/ சில வேளைகளில் யானைக்குப் பிடிப்பது.
9. கை.
10. சிங்கம்.
11. கவிஞன்/ புலவன்.
13. கிணற்றில் நீர் அள்ளப் பயன்படுத்தும் கயிறு.
14. இதுவும் கயிறே: ஆனால் பெரியது.
15. ஒருவகைப் பூச்சி.
16. உரம்.
18. தூக்கிச்செல்ல...
20. விரலின் பகுதி.
21. மிதமிஞ்சிய / மிகுதியான.
22. எரிக்கப்படும் உருவப் பொம்மை.
23. திக்கு.

### போட்டி விதிகள்

*1. வாசகர் எவரும் சொற்சிலம்பம் போட்டியில் கலந்து கொள்ளலாம்.*
*2. ஒருவர் எத்தனை கூப்பன்களையும் நிரப்பி அனுப்பலாம்*
*3. உதயனில் பிரசுரமாகும் கூப்பன்களே போட்டிக்கு ஏற்கப்படும்.*
*4. போட்டி தொடர்பாக ஆசிரியரின் தீர்ப்பே முடிவானதாகும்.*
*5. வெற்றி பெறும் முதல் மூன்று பேர்களுக்கு முறையே ரூபா 250/=, ரூபா 150/=, ரூபா 100/= பணப் பரிசில்கள் வழங்கப்படும்.*
*அத்துடன் பாராட்டுப்பெறும் ஐந்து அதிஷ்டசாலிகளது பெயர் விவரங்களும் உதயனில் பிரசுரிக்கப்படும்.*
*6. பூர்த்தி செய்யப்பட்ட கூப்பன்கள்,*

**சொற்சிலம்பம் போட்டி இல. 14**
**நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்டெட், இலக்கம் 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**

*என்ற முகவரிக்கு எதிர்வரும் புதன்கிழமைக்கு அடுத்துவரும் புதன் கிழமைக்கு (25.06.2008) முன்னர் கிடைக்கத்தக்கதாக அனுப்பி வைக்கப்படவேண்டும். தபாலட்டையிலும் ஒட்டி அனுப்பிவைக்கலாம்.*

*7. சொற்சிலம்பம் போட்டி இல.14 இல் வெற்றிபெற்றோர் விவரம் 29.06.2008 உதயனில் பிரசுரிக்கப்படும்.*

★ வாசகர்கள் மத்தியில் குறிப்பாக மாணவ மாணவியர் மத்தியில் பொது உளச்சார்பு மற்றும் மொழி அறிவை வளர்த்துவிடத் தூண்டுவதே இப்போட்டி நடத்தப்படுவதன் முக்கிய குறிக்கோள்.

★ ஒவ்வொரு போட்டியிலும் ஏராளமான வாசகர்கள் ஆர்வத்துடன் கலந்துகொள்வதுடன், அவர்களில் பெரும்பாலானோர் முற்றிலும் சரியான விடைகளை அனுப்பி வருவதால் பரிசுக்கும் பாராட்டுக்கும் உரிய அதிஷ்டசாலிகள் குலுக்கல் முறைமூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

★ **சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 12 இற்கான சரியான விடைகள் வருமாறு:**

**இடமிருந்து வலம்**

(1) சந்திரமதி. (6) திரௌபதி. (8) சிரசு. (10)லட்சம். (12) சோமன். (14) கமலம். (15) தடை. (16) மாடம். (17)வேதம். (18) கர. (19)வேள்வி. (20) படாம்.

**மேலிருந்து கீழ்**

(1)சத்தியசோதனை. (2)திசாபலன். (3) மனை. (4) கா. (5) வீர. (7) திட். (8) சிம்மம். (9) சுயம்வரம். (11) சகடம் (13) மடை. (16) மாதவி. (17) வேள். (18) கடா.

★ சொற்சிலம்பம் போட்டி தொடர்பான வாசகர்களது ஆலோசனைகளும் கருத்தில் எடுக்கப்படும்.

★ சொற்சிலம்பம் போட்டி இலக்கம் 12 இற்கான சரியான விடைகளை எழுதி அனுப்பியவர்களில் குலுக்கல் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் மூன்று அதிர்ஷ்டசாலிகளது பெயர் விவரங்கள் வருமாறு:-

**1 ஆம் பரிசு**
**கே.ஏ.வரன்**
*'யா/புத்தூர் மெதடிஸ்த மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலை, புத்தூர்.*

**2 ஆம் பரிசு**
**ம.தில்லைநாதன்**
*சிறுப்பிட்டி தெற்கு, நீர்வேலி.*

**3 ஆம் பரிசு**
**திருமதி S. நாகேஸ்வரன்**
*இல: 238, கோயில் வீதி, நல்லூர்.*

**பரிசில் பெறுவோருக்கான பணம் அவர்களது முகவரிக்கு காசோலையாகப் பதிவுத் தபாலில் அனுப்பிவைக்கப்படும்.**

### பாராட்டுப் பெறுவோர்

(1) **திருமதி ச.லிங்கமூர்த்தி**
அமெரிக்கமிஷன் பாடசாலை ஒழுங்கை, வல்வெட்டித்துறை.

(2) **A. கபிர்த்தன்,**
இல: 620, நாவலர் வீதி, அரியாலை.

(3) **மா.மகாலிங்கம்,**
லிங்கவாசா, கைதடி மேற்கு, கைதடி.

(4) **சி.சிந்துஜா,**
இல: 237, காங்கேசன்துறை வீதி, கொக்குவில் மேற்கு, கொக்குவில்.

(5) **க.கிருஷாந்தி,**
வேலணை கிழக்கு, 4 ஆம் வட்டாரம், வேலணை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்களால் எதுவும் இயலும்..., முடியும்...
# ...புதிய உலகைக் கட்டி எழுப்புவோம்!

**கோண்டாவில் சிவபூமி பாடசாலையில்** நுண்மதி ஈ.வு குறைந்த 155 மாண வர்கள் நிகழ்த்திக்காட்டிய கண்காட்சி, எங்களாலும் புதிய உலகை சிருஷ்டிக்க முடியும் என்பதை நிரூபித்தது.

நாளாந்தம் இம் மண்ணில் நிகழும் துன்பங்கள், துயரங்கள் எங்களின் நெஞ்சை அடைக்க, எதுவும் எப் போதும் நிகழலாம் என்ற சூழலில் சிவபூமி மாணவர்கள் கைவண்ணத் தில் உருவான கண்காட்சியைப் பார்த் துக் கொண்டிருந்த வேளையில் எம்மை யெல்லாம் மகிழ்ச்சியில் ஆழ்த்தியது மட்டுமல்லாது, மெய்யுருகவும் வைத் தது.

கடந்த 09, 10, 11 ஆம் திகதிகளில் இந்தக் கண்காட்சி ஒழுங்கு செய்யப் பட்டுச் சிறப்பாக நிறைவடைந்துள் ளது.

அளவுக்குச் சிறப்பை வெளிப்படுத் தியதைக் காணமுடிந்தது.



கண்காட்சியைப் பார்வையிட வந்த பாடசாலை மாணவ மாணவியர்


நின்றுவிடாது உற்சாகமூட்டி யதைக் கண்டேன்.

மூன்று நாள்கள் இடம்பெற்ற கண் காட்சி. இதற் குப் புலம்பெயர் நாடுகளில் சமய சொற்பொழி வாற்றச் சென்று, அங்கிருந்து நிதி வளங்களைப் பெற்று வந்து சிவபூமியை ஸ்தாபித்து "எங் களாலும் முடி யும்" என்ற வார்த் தைகளை சிவ பூமி மாணவர் களின் செயலில் காட்ட வைத் திருக்கிறார் செஞ்சொற் செல்வர் ஆறு திருமுருகன்.



கண்காட்சியின் ஊற்றுக்கண்ணாகச் செயற்பட்ட திருமதி கலைவாணி குகதாசன்

கண்காட்சி ஏற்பாட்டாளராகச் சிவ பூமி அறக் கட்டளையின் உபதலைவர் திருமதி கலைவாணி குகதாசனின் ஆற்



பனை ஓலையாலும் ஊமலினாலும் செய்யப்பட்ட பொருள்களுடன் மாணவி

அழகான மூன்றடுக்கு மாடிகளில் கண்காட்சிக்குரிய கைவினைப் பொருள் கள், சித்திரங்கள் காட்சிப்படுத்தப் பட்டிருந்தன.

வீசப்படும் கழிவுப் பொருள்களை யும் இயற்கையாகக் கிடைக்கும் கட

**கைவினைப் பொருள்களில்...**

சுரக்காயில் செய்யப்பட்ட தாரா, கொக்குப் போன்றவையும், தேங்காய்ச்

உடுவில் ஆர்க் பாடசாலை, மரு தனார் மடத்தில் உள்ள வாழ்வகம் போன்றவற்றில் கல்வி பயிலும் மாண

## தங்களது கைவண்ணத்தால் நிரூபித்து காட்டியுள்ளனர் 'சிவபூமி' மாணவர்கள்

சிரட்டையைப் பயன்படுத்தி ஆமை உருவம், பிளாஸ்டிக் சோடாப் போத்தல் களைக் கொண்டு பூக்கள், தோகை மயில்கள், புளியம் விதைகள் அற்புத மான சிலந்தி, மிளகாய்க் காம்பு ஆகிய வற்றைப் பயன்படுத்தி மட்டத்தேள் (தொட்டால் கடித்து விடும்போல் இருந் தது), பழைய சீ.டி. (C.D) யைப் பயன் படுத்தி வாழ்த்து அட்டைகள், உரப் பையை நூலாக வேறாக்கி அழகான தொரு சிறிய துடைப்பம், பழைய கட தாசிகளைப் பயன்படுத்திக் குறிப்புப் புத்தகம் (Note Book) வைக்கோலில் நடுங்க வைக்கும் நாகபாம்பு - அப் பப்பா இப்படிப் பலப் பல கைவினைப்

வர்கள், கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை, தேசிய கல்வியியற் கல் லூரி ஆசிரிய மாணவர்கள், மாணவர் கள் இக் கண்காட்சியைக் கண்டு களித்து சிவபூமி மாணவர்களைத் தட்


**ஆழ்வார்**
*படங்கள்:* **நேசன்**

டிக் கொடுத்துப் பாராட்டிச் சென்றனர்.

**சமூகப் பயனுள்ளவர்களாக்கிய பெருமை 'சிவபூமிக்கு...'**

வீடுகளில் சில உறவினர்களால் பரிதாபத்துடன் அல்லது கீழ்நிலையில்

றுப் படுத்தலில் ஆசிரியர்களும், பெற் றோர்களும் பங்காற்றியிருக்கின்றார்கள்.




நீற்றுப் பூசணிக்காயில் மனித உருவம்

## மூன்று நாள் கண்காட்சியில் அவர்களின் கைவண்ணமும் மதிநுட்பமும் பளிச்சிட்டன

தாசி, பிளாஸ்டிக் வெற்றுப் போத்தல் கள், கமுகு மர இலைகள் மற்றும் இதரப் பொருள்களைக் கொண்டு கைவினைப் பொருள்கள் உருவாக்கப் பட்டிருந்தன.

**சிந்தாமல் சிதறாமல்...**

நுண்மதி ஈ.வு குறைந்த மாற்றுவலு வுள்ள மாணவர்களால் தான் கண்காட் சிப் பொருள்கள் உருவாக்கப்பட்டதா? கண்காட்சியைப் பார்த்து மகிழ்ந்த பலர் அதிசயித்துக் கேட்ட கேள்வி இது. ஏனெனில் அனைத்துமே அற்புதம். ஓவியத்தில் கூட தனித்துவம் தெரிந் தது. வரையப்பட்டிருந்த ஓவியங்களில் பலவித வர்ணக் கலப்பு. மற்றும் வர்



சிரட்டையில் உருவாக்கப்பட்ட ஆமைகள்

ணங்களைச் சிந்தாமல், சிதறாமல் அலங் கோலப்படுத்தாமல் கவனமாய் கையாண் டிருக்கிறார்கள். இவற்றைப் பார்க்கும் போது சிவபூமி பாடசாலை ஆசிரியர் களால் இந்தச் சிறார்களுக்குத் தனித் துவம்மிக்க பயிற்சி வழங்கப்பட்டிருப் பது புலனாகிறது. அதைவிடக் காட் சிக்கு வைக்கப்பட்டிருந்த புடைவை அலங்காரங்கள் (இலைகள், பூக்கள் போன்றவை) வர்ணிக்கத் தெரியாத

பொருள்கள் கண்காட்சியில் காட்சிப் படுத்தப்பட்டன. பார்ப்பவர்களை



உற்பத்திப் பொருள்களுடன் மாணவர்களும் ஆசிரியர்களும்

மெய் மறக்கச் செய்தது.


விவேகமுள்ள மனிதர்களால் சாதிக்க முடியாத அல்லது முயற்சிக்காத விட யங்களைச் சிவபூமிப் பாடசாலைச் சிறுவர்கள் சாதித்துக் காட்டியமை கண் காட்சியைப் பார்த்தோரைச் சிந்திக்கத் தூண்டியுள்ளன.

மூன்று நாள்கள் நடைபெற்ற இக் கண்காட்சியை நாலாயிரத்துக்கும் மேற்பட்டோர் பார்வையிட்டு மகிழ்ந்துள் ளதாக அறிய முடிந்தது.

தெல்லிப்பழை மனநல வைத்தியப் பிரிவினர் உட்பட யாழ்.பல்கலைக்கழக மருத்துவத்துறை சார்ந்த மாணவர் களும் இக் கண்காட்சியை மிகுந்த ஆர்வத்துடன் பார்வையிட்டனர். சிவ பூமி மாணவர்களைப் பாராட்டியதோடு

வைத்துப் பார்க்கப்பட்ட நிலையில் இருந்த மனவளர்ச்சி குன்றிய பிள்

ளைகளைச் சமூகப்பயனுடைய மனிதர்க ளாக்கும் முயற்சியில், பெரும் எழுச்சி



தேங்காயத்தோலில் செய்யப்பட்ட சேவல்

[illegible] சிவபூமி. இதன் வெளிப்பாடுதான் கடந்த வாரத்தில்

மாணவர்களுக்கு அன்னையாக நின்று, பக்கத்துணையாகப் பணியாற்றிய கலை வாணி அமையாரின் தாயுள்ளம் தாராள மாக மிளிர்ந்தது.

முன்னதாகக் கண்காட்சியை வலி காமம் கல்விவலயக் கல்விப் பணிப் பாளர் ப.விக்னேஸ்வரன் ஆரம்பித்து



உள்ளித்தோலில் செய்யப்பட்ட கொக்கு

வைத்து சிறுவர்களை வாழ்த்திச் சென் றுள்ளார்.

இந்தக் கட்டுரையைப் படிக்கும் போது உங்களுக்குள்ளே நாங்கள் இக் கண்காட்சியைப் பார்க்கவில்லையே என்ற கவலை இளையோடியிருப்பது புரிகிறது என்ன செய்வது? இத்தகை யதொரு கண்காட்சிக்காகப் பொறுத் திருங்கள். சிவபூமி மாணவர் இன்னும் பல ஆக்கச் செயற்பாட்டுக் கலை களோடு உங்களைச் சந்திப்பார்கள் என நம்புகிறேன். ✱✱✱✱✱✱✱✱✱✱✱✱

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாதிப்புற்றோருக்கு பல்துறைசார் பன்முக சேவைகளைப் பலவருடங்களாக தளர்வின்றிச் செய்துவரும் கியூடெக் - கரித்தாஸ் தொண்டு நிறுவனம்

மனித முன்னேற்ற நிலையம் (கியூடெக் - கரித்தாஸ் நிறுவனம்) யாழ். கத்தோலிக்க திருச்சபையின் கீழ் சமூக சேவைத் தொண்டுப் பணியை மேற்கொண்டு வருகிறது. இந்த நிறுவனம் 35 வருடங்களுக்குப் முன் ஆரம்பிக்கப்பட்டது. ஆரம்பகாலம் தொட்டு யாழ். ஆயரின் மேற்பார்வையில் சமூக, பொருளாதார, கல்வி மேம்பாட்டுப் பணிகளை முன்னெடுத்து வருகிறது.

தொடர்ந்து நிகழும் மனித அவலம் நிறைந்த இடப் பெயர்வுகள், அகதிமுகாம்கள், வைத்திய சுகாதாரசேவையின் அவசியத்தை

## அருட்தந்தை சி.ஜி.ஜெயக்குமாருடன் ஒரு சந்திப்பு

உணர்த்தின. அடிப்படைத் தேவைகள், அத்தியவசியத் தேவைகள், மீள்குடியமர்வு, புனர்நிர்மாணம் மற்றும் சமூக பொருளாதார கல்வி தொடர்பான பிரச்சினைகளை எதிர்கொள்ளும் வேலைத்திட்டங்களை நிறைவு செய்யும் தேவையும் எமது நிறுவனத்தின் பணியாகியது. முடிந்தளவில் இயலுமானவரை திறம்பட நடத்தி வருகிறோம். கிறிஸ்துவின் நற்செய்தியின் விழுமியங்களான சமாதானம்,

சகோதரத்துவம், சமத்துவம் என்ற பண்பு நிலை சார்ந்து சாதி, இனம், மதம் என்ற பேதங்களற்ற - அந்த வரையறைகளைக் கடந்த ஓர் இலங்கையை கட்டிஎழுப்புவதே நிறுவனத்தின் நோக்கமும் இலக்குமாகும்.

இந்த உயர்ந்த விழுமியங்கள் தொலை நோக்கானவை. இலட்சியங்களை நிறைவுறுத்த பல பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. பணிகளூடாக மக்களை பலப்படுத்துவதே பிரதானமானதும் தலையாயதுமாகும்.

வேலைத்திட்டங்களை நிறைவுபடுத்த நடைமுறைச் சாத்தியமான தந்திரோபாயங்கள் நிறைந்த குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. தலைமைத்துவப் பயிற்சி மனித உரிமை தொடர்பானவிழிப்புணர்வை ஏற்படுத்தும்

திட்டம், கல்வி உதவி, நடமாடும் மருத்துவ சேவை, சமூக விழிப்புணர்வு நிகழ்ச்சிகள், நிரந்தர வீடுகள் அமைத்தல், நிதியுதவித் திட்டங்கள், வாழ்வாதார செயற் றிட்டங்கள் என பல்வேறு திட்டங்கள்

| பிரதேசம் | திட்டமிடப் பட்டவை | நிறைவேற்றப் பட்டவை | அமைக்கப்பட்டு வருபவை |
|---|---|---|---|
| முல்லைத்தீவு + வன்னி | 715 | 185 | 347 |
| பருத்தித்துறை+ யாழ்ப்பாணம் | 154 | 24 | 96 |
| வடமராட்சி கிழக்கு | 594 | 101 | 248 |
| மொத்தம் | 1463 | 310 | 691 |

செயற்படுத்தப்படு கின்றன.

குடாநாட்டிலும், முல்லைத்தீவு, கிளிநொச்சி, மன்னார் மாவட்டங்களிலும் இப்பணிகள் சமகாலத்தில் மேற்கொள்ளப்படுகின்றன. யாழ் குருமுதல்வரின் வழிகாட்டுதலில் பணிகள் தொடர்ந்து நடைபெறுகின்றன.

மண் டைதீவில் இருந்து இடம் பெயர்ந்து நாவாந்துறை நீக்கிலாஸ் ஆலய வளா கத்தில் தங்கி இருந்த வர்களுள் 33 குடும்பங்களுக்கு 21 லட்சம் (20, 79000.00) செலவில் தற்காலிக வீடுகளை அமைத்துக் கொடுக்கப்பட்டன. (63 லட்சம் பெறுமதியான வீடுகள்).

உள்நாட்டில் இடம்பெயர்ந்தவர்களுக்கு தற்காலிக 18x12 அடி கொட்டகைகள் அமைப்பதற்கு பொருள் கொள்வனவிற்காக 12 லட்சத்து 60 ஆயிரம் செலவிடப்பட்டது.

முல்லைத்தீவு செல்வபுரத்தில் இருந்து

கியூடெக் இவர்களது கல்விச்செலவை வசதியைப் பொறுத்து முழுமையாகவோ, பகுதியாகவோ பொறுப்பேற்றுள்ளது.

பாடசாலை மாணவர்களுக்குப் பலவகை எழுதுகருவிகள்,பயிற்சிப்புத்தகங்கள் வழங்கி வருகிறோம்.

இந்த வருடம் இதுவரை யாழ்ப்பாணத்தில் 685 சோடி சப்பாத்துகள் மாணவ மாணவியருக்கு வழங்கப்பட்டுள்ளன. ஆனைக்கோட்டை, யாழ்ப்பாணம், கோப்பாய், மட்டுவில், அல்லைப்பிட்டி மாணவர்கள் பயனடைந்துள்ளனர்.

வன்னிப்பகுதியிலும் இத்தகைய திட்டங்களும், புலமைப்பரிசில் திட்டங்களும் மேற்கொள்ளப்படுகின்றன. தொண்டராசிரியர்கள், முன்பள்ளி ஆசிரியர்கள், மாலை வகுப்புகளில் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கும் உதவு தொகைகள் அளிக்கப்படுகின்றன.

### வைத்திய உதவித்திட்டங்கள்

நடமாடும் மருத்துவ சேவை திருச்சிலுவை மருத்துவக்குழுவினர் ஈடுபடுகின்

# புனர்நிர்மாணம் தொடக்கம் வைத்திய உதவிவரை கல்வி மற்றும் விவசாயத்துறைகளில் நலிவுற்றோர் சேவை

### புனர் நிர்மாணமும் வேலைவாய்ப்பும்

வடமராட்சி, முல்லைத்தீவு பகுதிகளில் சுனாமியால் வீடுகளை இழந்தவர்களுக்கு


கடற்றொழிலாளருக்கு உதவி

வீடு அமைத்துக் கொடுக்கும் திட்டங்கள் நடைமுறையில் உள்ளன.

2007 ஜனவரி - ஜூன் வரை2007 யூலை - டிசம்பர் காலத்தில் யாழ்ப்பாணத்தில் பருத்தித்துறையில் 50 வீடுகளும் சக்கோட்டையில் 47 வீடுகளும் அமைத்து வழங்கப்பட்டன. மேலும் 20உம், 10 வீடுகளும் முறையே கட்டப்பட்டு வருகின்றன.

முல்லைத்தீவில் செல்வபுரம் (100), அலம்பில் வடக்கு (99), அமைத்து வழங்கப்பட்டதுடன், செல்வபுரத்தில் 128 வீடுகளும் அலம்பிலில் ஒரு வீடும் அமைக்கப்பட்டு வருகின்றன.

உப்புவெளியில் 6 வீடுகளும், முள்ளிவாய்க்காலில் சுனாமியால் இடம்பெயர்ந்து முள்ளிவாய்க்காலுக்கு சுனாமி பாதிப்பால் இடம்பெயர்ந்த 47 குடும்பத்தவர்களுக்கு 10 தற்காலிக மலசலகூடங்களும் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளன.

அச்சுவேலி, கரவெட்டிப்பகுதிகளில் குழந்தை யேசு சிறுவர் பாடசாலைகள் அமைக்கப்பட்டு புனித கன்னியர் சபையினரால் நடைமுறைப்படுத்தப்படுகின்றன. யாழ்ப்பாணத்தில் 51 பாலர் பாடசாலைகளும் வன்னியில் 32 உம் இவ்வாறு கியூடெக் நிறுவனத்தால் ஆரம்பித்து நடைமுறைப்படுத்தப்படுகின்றன.

### சிறுவர் இல்லங்கள்

சுனாமியாலும் யுத்தத்தாலும் பெற்றோர் உறவினரை இழந்த சிறுவர் சிறுமியருக்காக இல்லங்கள் அமைக்கப்பட்டுள்ளன. யாழ்ப்பாணத்தில் எட்டும் முல்லைத்தீவில் நான்கும் அமைக்கப்பட்டுள்ளன. யாழ்ப்பாணத்தில் 260 சிறாரும் (112 பெண்கள், 148 ஆண்கள்) வன்னிமுல்லையில் 217 சிறுவர்களும் (135 ஆண்கள் 82 பெண்கள்) உள்ளனர்.

இவை யாழ்ப்பாணத்தில் ஊர்காவற்றுறை, கரம்பன் சென்பற்றிக்ஸ், யாழ்.கன்னியர் மடம் இளவாலை, சில்லாலை, கோப்பாய் (பாசச் சோலை) பகுதிகளில் இயங்குகின்றன.

### கல்வி உதவித் திட்டம்

யாழ்ப்பாணத்தில் தற்போதைய யுத்த சூழ்நிலையால் மரணமடைந்த, காணாமல் போனவர்களுடைய குடும்பங்களைச் சேர்ந்த 40 மாணவர்களுக்கு ஹெஸ்பனேகன் (டென் மார்க்) றோட்டரி கழகத்தின் நிதி அனுசரணையுடன் மாதாந்தம் 3000/= மூவாயிரம் ரூபா வழங்கப்படுகிறது. தரம் ஒன்றில் இருந்து உயர்தரம் வரையான மாணவர்கள் உதவி

றனர். இச் சேவை பின்தங்கிய தனிமைப்படுத்தப்பட்ட பிரதேச மக்களிற்குரியதாகும். யாழ். மாவட்டத்தில் 12 இடங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

முல்லைத்தீவு, கிளிநொச்சி மாவட்டங்களில் தொடர்ந்து நடைபெறும் உள்நாட்டு யுத்தத்தால் பளை, வடமராட்சி கிழக்கு, வவுனியா வடக்கு , பூநகரி, மன்னார் மக்கள் இடம் பெயர்ந்துள்ளனர்.

பாடசாலைகள், தேவாலயங்கள், மரங்களின் ஒதுக்கிடங்களில் தங்கி இருக்கும் இவர்களுக்கு ஆபத்தின் மத்தியில் சேவை செய்து வருகிறார்கள். விமானத்தாக்குதல், எறிகணை வீச்சு, கிளைமோர் வெடிகுண்டுத்தாக்குதலுக்கு மத்தியில் வைத்திய சேவைத்திட்டம் செயற்படுத்தப்படுவது குறிப்பிடத்தக்கதாகும்.

வைத்தியர்களும் புனித சிலுவை கன்னி


சேதனப் பசளை தயாரிக்கும் தொட்டிகள்

யர்களும் பல ஆயிரக்கணக்காணவர்களுக்கு பணி புரிகின்றனர். கர்ப்பிணிப்பெண்கள், சிறுவர்கள், வயோதிபர்கள் ஆகியோர் கூடுதல் பயனை பெறுகின்றனர்.

மேலும் இந்த மனிதாபிமான பணியினரால் கடும் நோய் பாதிப்புள்ளவர்களின் வைத்தியச் செலவும் கியுடெக்கால் பெறுப்பேற்கப் படுகிறது. யாழ் மாவட்டத்தில் வசதிகுறைந்த 42 நோயாளிகளுக்கு கடந்த ஆண்டின் கடைசி ஆறு மாதங்களில் மட்டும் ஒரு லட்சத்துக்கு மேலும் (102655ரூபா)-

வன்னி மாவட்டத்தில் 3508 நோயாளருக்கும், மேலதிக சிகிச்சைக்காக குறித்த இந்தக் காலப்பகுதியில் வவுனியா, கொழும்பு வைத்தியசாலைகளுக்கு சென்றவர்களுக்கும் இரண்டு லட்சத்து அறுபத்து இரண்டாயிரத்து எண்ணூற்று எண்பத்தேழு ரூபா செலவிடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

2006 ஆவணியில் பின் ஏற்பட்ட

# மரங்களின் கீழ் ஒதுக்கிடங்களில் வாழ்வோருக்கு ஆபத்தின் மத்தியிலும் மனிதாபிமானப் பணிகள்

நிகழ்ச்சித் திட்டங்களை மேற்கொண்டு வருகிறோம்.

புனர்நிர்மாணம் - வீடுகள், கட்டடங்களை


வாழ்வாதாரத் திட்ட உதவி

அமைத்தல், வறுமைக்கோட்டின் கீழான வருமானம் உள்ளவர்களுக்கு உலர் உணவு நிவாரணம் வழங்குதல், மீள்குடியமர்த்தும்

தங்கியிருப்பவர்களுக்கு 172 வீடுகளும் அமைக்கப்பட்டு வருகின்றன.

நிரந்தரமான வீடுகள் ஒவ்வொன்றும் 8 1/2 இலட்சம் பெறுமதியானவை. இரண்டு அறை, மண்டபம், சமயலறை என்பன உள்ளடக்கப்பட்டுள்ளன. மேலதிகமாக ஒரு லட்சம் செலவில் கழிவறைகளும் 75000 ரூபாவில் கிணறுகளும் அமைக்கப்பட்டுள்ளன.

கட்டடப் பொருள்களின் விலை அதிகரித்துள்ள (இரண்டு மடங்காக) நிலையிலும் நிர்மாணப்பணி தொடர்கிறது. பருத்தித்துறை கிழக்கில் சின்னத் தோட்டம், முனை, தும்பளை பகுதிகள் அடங்குகின்றன.

### தற்காலிக வீடுகளும் [illegible]

2006 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதத்தின் பின்னான நிலைமைகளால் அல்லைப்பிட்டி

பெறுகிறார்கள்.

மொன்றியல் கத்தோலிக்க நிதியத்தில் இருந்து சுனாமியால் பெற்றோரை இழந்த மூன்று பல்கலைக்கழக மாணவருக்கு மாதாந்தம் தலா (3000/=) மூவாயிரம் ரூபா உதவு தொகை கொடுக்கப்படுகிறது.

இதே நிதியத்தில் இருந்து சுனாமியால் பாதிப்புற்ற 15 மாணவருக்கு மொத்தம் 90 ஆயிரம் ரூபாவும் சுனாமியால் பெற்றோரை இழந்து உறவினர்களுடன் தங்கி இருக்கும் மாணவர்களுக்கு தலா 9 ஆயிரம் ரூபாவும், வழங்கப்படுகிறது.

கியூடெக் நிறுவனத்திற்கு கிடைத்த நன்கொடையில் இருந்து ஏழை மாணவர் 59 பேருக்கு மாதாந்தம் மொத்தமாக 225, 690 ரூபா உதவி வழங்கப்படுகிறது. இந்த வகையில் 124 மாணவருக்கு 5 இலட்சத்து 56 ஆயிரத்து 690 ரூபா மாதாந்தம் உதவித் தொகையாக வழங்கப்படுகிறது.

### தொழிற் கல்வி

சாதாரண மற்றும் உயர்தரக் கல்வியை பூர்த்தி செய்த இளைஞர்களுக்கு பற்றீசியன் நிறுவனத்திலும் வேறு தொழில் நிறுவனங்களிலும் கம்பியூட்டர், ஓட்டுவேலை, தச்சுவேலை, மின் இணைப்புப் பயில ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

**சந்திப்பு:- கை. பேரின்பநாயகம்.**

மருந்துவகைக்கான தட்டுப்பாட்டுக் காலத்தில் சி.ஆர்.எஸ் நிறுவனத்தின் அனுசரணையுடன் புற்று நோயாளருக்கு தேவையான 17 லட்சம் பெறுமதியான மருந்துப் பொருள்கள் வைத்தியக் கலாநிதி ஜெயக்குமாரிடம் கையளிக்கப்பட்டன.

### இளம் தாய்மாருக்குப் புனர்வாழ்வு

நம்பியவர்களால் கைவிடப்பட்டதால் திருமணமாகமுன் தாய்மையடைந்த இளம் தாய்மாரும், அவர்களது குழந்தைகளும் இணுவிலில் உள்ள 'நல்லாயன்' இல்லத்தில் பராமரிக் கப்பட்டு வருகிறார்கள்.

சபைக்கன்னியாஸ்திரிகளால் தையல், பின்னல் வேலைகள், கை வேலைப்பாட்டு சுயதொழில் பயிற்சிகளும் வழங்கப்படுகின்றன. (14 ஆம் பக்கம் பார்க்க...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழத்துத் தமிழ்ச் சிறுகதை வரலாற்றில் பெண் எழுத்தாளர்கள் என விரல்விட்டு எண்ணக்கூடிய எண்ணிக்கையினரே பங்களிப்பு வழங்கியுள்ளனர். அத்தகைய சூழ்நிலையிலும் 1959 - 1965 ஆண்டு காலப்பகுதியில் ஈழத்தின் பல சஞ்சிகைகள், பத்திரிகைகளில் சிறுகதைகளை எழுதிவந்த 'பவானி' யையும் குறிப்பிட்டுக் கூறலாம்.

பெண்ணியத்தை வலியுறுத்தும் வகையிலான இவரது சிறுகதைகள் அந்த வேளையில் பெரிதும் வரவேற்பைப் பெற்றிருந்தன.

பேராதனைப் பல்கலைக்கழகக் கலைப் பட்டதாரியான 'பவானி' கொழும்பைப் பிறப்பிடமாகக் கொண்டவர்.

இவர் எழுதிய சிறுகதைகள் வீரகேசரி, சுதந்திரன், தினகரன், ஈழநாடு போன்ற பத்திரிகைகளிலும் கலைச்செல்வி, மரகதம், சங்கம், தேனருவி போன்ற சஞ்சிகைகளிலும் பிரசுரமாகின.

'கடவுளரும் மனிதரும்' என்ற தலைப்பில் இவரது முதலாவது சிறுகதைத் தொகுதி 1962 ஆம் ஆண்டில் வெளியானது. ஒரு சில மாற்றங்களுடன் 1994 ஆம் ஆண்டில் அது இரண்டாவது பதிப்பாக வெளிவந்தது.

ஈழத்துத் தமிழ்ப் பெண் சிறுகதை எழுத்தாளர்களின் இரண்டாவது தலைமுறையைச் சேர்ந்த பவானியின் சிறுகதைத் தொகுதியில் அடங்கியுள்ள சிறுகதைகளுள் ஒன்றான சிறுகதை 'கனவு' இங்கு பிரசுரமாகிறது.

"பவானியின் சிறுகதைகளைத் தொகுத்துக் கணித்தால் அவற்றில் இழையோடும் முக்கியமான கருத்தோட்டம், சமுதாய அவலங்களும் அர்த்தமற்ற சில பண்பாட்டுக் கொள்கைகளும் எப்படி ஆணையும் பெண்ணையும் அலைக்கழிக்கின்றன; அவர்கள் எப்படி அவற்றின் பாரிய தாக்கத்துக்குட்படுகிறார்கள் என்பதே. அவர் கதை கூறும் பாணியும் கதையை முடிக்கும் பாணியும் கதாபாத்திரங்களைப் பரிதாபத்துக்கு ஆளாக்கவில்லை. அவர்கள் பண்பாட்டிலிருந்து இறங்கிய நிலையிலும் தங்கள் உரிமைகளைப் பேசுவதுபோலவே அக் கதாபாத்திரங்கள் படைக்கப்பட்டிருக்கின்றன. முடிவுகள் வாசகர்களைச் சிந்திக்க வைக்கின்றன" என்று விமர்சகர்கள் சிலாகித்துக் கூறியிருக்கிறார்கள்.

பவானியின் சிறுகதைகளில் மன்னிப்பாரா? என்ற சிறுகதை பெண்ணியக் கருத்தை வலியுறுத்தும் வகையில் சிறப்பாகச் பின்னப்பட்டதென்பது விமர்சகர்களின் கருத்தாகும். கொழும்பைச் சேர்ந்த எழுத்தாளர் ஆழ்வாப்பிள்ளை பவானி தற்போது லண்டனில் வசித்து வருகிறார்.

# கனவு

**பவானி**

மணி ஒன்பதரை இருக்கும். மலையாளத்தானுடைய தேனீர் கடையில் வேலை வெட்டியென்று தேடி அலுத்தவர்களும், வேலைவெட்டியென்ற ஒன்றின் தேவையற்றவர்களும், வேலை வெட்டியில்லாது பிழைக்கத் தெரிந்தவர்களுமாக, வழக்கமாய்க் கூடிப் பொழுது பொழுதாய் அமர்ந்து தேநீர் உறிஞ்சும் ஏழெட்டுப் பேரும் ஊர் வம்பு பரிமாறிக் கொண்டு இருந்தனர். நாற்பது நிமிஷத்துக்கு ஒருமுறை தொலைவில் பாடசாலை மணியடிக்கும் ஓசை சோம்பும் காற்றில் மிதந்து வந்தது. இடைக்கிடையே தெருப்புழுதியைக் கடைந்தெழுப்பி எறிந்து கொண்டு 'கார்' கள் கீரிமலையை நோக்கி விரைந்தன. எங்கோ அருகில் மீன்காரக் கிழவி ஆதிக்கத்தின் நடுங்கின குரல் அபஸ்வரக் கேரலாய் எழுந்தது. முற்றின மொந்தன் தார் ஒன்றைச் சுமக்க மாட்டாமல் சுமந்தபடி முத்து தெருவில் தாண்டித் தாண்டி நடந்து கொண்டிருந்தான். நாயர்கடை வாசலில் உட்கார்ந்திருந்த பாலசிங்கம் முத்துவைக் கண்டதும் குரல் கொடுத்தான்.

'முத்து, எங்கையடா அப்பா இவ்வளவு அவசரமாய்? காலம்பற தேத்தண்ணிக்குக் கூட வரேல்லை?' முத்து வாசலடிக்கு வந்தாலும் வாழத்தாரை இறக்கி வைக்க முயலவில்லை. அவன் முகம் அதன் இயல்பான சிரிப்பில் மலர்ந்தது. அந்த முகம் சிரிப்பதற்கென்றே ஆக்கப்பட்டதுபோல் தோன்றியது. அவனுடைய மெல்லிய உதடுகள் மலர்ந்து விரியும் அந்த அகன்ற சிரிப்பில் குழந்தைச் சிரிப்பின் கவர்ச்சியும் கபடற்ற தன்மையும் பொலிந்தன.

'நாளைக்குப் 'பிரக்கிராசி' வீட்டிலை பொன்னுருக்கல்லே. இண்டைக்கு விடியவே வரச் சொல்லீட்டினம். அது தான் தேத்தண்ணிக்கும் வரக் கிடைக்கேல்லை'' பாலசிங்கம் சிரித்தான்.

'அதுதானே ஆளின்டை அசுமாத்தத்தையே காணேல்லை எண்டு நினைச்சன். ஏண்டா முத்து இவ்வளவு நாளைக்கும் எத்தினை ஊர்க்கலியாணங்களுக்கு உழைச்சுக் கொட்டியிருப்பாய்? நீ மட்டும் தனிமரமாய் நிண்டுவிட்டாய், நீயும் ஒரு கலியாணத்தை எப்ப கட்டப்போறாய்? உன்டை கண்ணுக்கு முன்னாலை வளந்த பெடியன்கள் கூடத் தகப்பனாய் விட்டுதுகள்' என்று கண்களைச் சிமிட்டிக் கேலிக்குரலில் இ[?]த்தான் பாலசிங்கம். முத்துவின் இதயம் படபடக்கத் தொடங்கியது. அவன் உதடுகளில் விளையாடிய புன் முறுவல் துடைத்து விட்டாற் போல் மறைந் தது. அங்குமிங்குமாகத் தவித்துத் தவித்து அலை பாய்ந்த அவன் கண்கள் தாழ்ந்து விட்ட இமைகளின் பின்னால் தஞ்சம் புகுந்தன. கலவரம் படிந்த முத்துவின் முகத்தைப் பார்க்கப்பார்க்கப் பாலசிங்கத்துக்கு வேடிக்கையாக இருந்தது.

'எனக்கு..... எனக்கு என்னத்துக்கு தம்பி .... கலி......கலியாணம்? என்டை ஒரு வயித்தைக் கழுவிறதே திண்டாட்டமாயிருக்கு...... அம்மா இருக்குமட்டும் இருந்தா....... அவ அவ செத்து இருவத்தி மூண்டு வருஷமாகுது....... நானும் தனிய இருந்திட்டன். மிச்ச நாளைக்கும் இப்படியே, தடுமாறினான் முத்து. அவன் குரலில் ஆத்திரத்தின் மெல்லிய இழையோடியது. மேலும் அங்கு நிற்க விரும்பாதவன்போல் முத்து 'வாறன் தம்பி' என்று சுருக்கமாகச சொல்லிவிட்டு எட்டி நடக்கலானான்.

'முத்துவைப் போலை வெக்கறையை நான் எங்கையும் கண்டதில்லை' பாலசிங்கம் பக்கத்தில் பூனைத்தூக்கம் தூங்கிக் கொண்டிருந்த பரமுவிடம் அலுத்துக் கொண்டான்.

பாலசிங்கத்தின் சொற்கள் முத்துவின் மனதைக் கலங்கிய குட்டையாக்கி விட்டன. சதுப்பு நிலம்போன்று அவன் மனம் பாலசிங்கத்தின் வார்த்தைகளை உறிஞ்சி விழுங்கிக் கொண்டது. அவன் மனதிலே நினைவுக் குமிழிகள் வெடித்தன. அவனிடம் பட்டம் விடக்கற்றுக் கொண்ட பெடியன்கள் இன்று ஆண் பிள்ளையாகிக் கலியாணம் செய்து குடும்பமாகிவிட்டார்கள். இப்படியொரு வாழ்வை முத்து வெறுத்தான் என்றல்ல..... ஆனால்....... முத்து நெட்டுயிர்த்தான். முத்துவுக்கு வயது முப்பத்தெட்டு என்றால் எவரும் நம்பமாட்டார்கள். (10 ஆம் பக்கம் பார்க்க...)

# சோதனைகளை வெல்வதற்குத் தேவை தளராத துணிவும் முயற்சியுமே!

டெ ரெக்லின் என்ற தாவோ அறிஞர் அடிக்கடி ஒரு கழுதையின் கதையைக் கூறுவதுண்டு.

பண்டைய சீனதேசத்தில் ஒரு கிராமத்தில் சக்கரவர்த்திக்கு கோயில் எழுப்ப தீர்மானிக்கப்பட்டது. அப்பகுதியின் கவர்னர் மிகக் குறுகிய காலத்தில் கோயிலைக் கட்டிமுடிக்க கிராமத்தினருக்குக் கட்டளையிட்டார்.

கோயில் கட்ட தேர்ந்தெடுக்கப்பட்ட இடத்தில் தடுப்புச் சுவர் இல்லாத கிணறு ஒன்று இருந்தது. எனவே கட்டடப்பணி துவங்கும் முன் அக் கிணற்றை மூட வேண்டிவந்தது.

மண்ணைப்போட்டுமூட முடிவெடுத்த கிராம மக்கள், மண்ணைச் சுமக்க ஒரு கழுதையைப் பயன்படுத்தினர். சிறிது பணி கழிந்தபின் ஒரு முறை கழுதை கிணற்றின் விளிம்புவரை சென்று, சறுக்கி கிணற்றில் விழுந்துவிட்டது.

கிணற்றில் விழுந்த கழுதையை மீட்க சில முறை முயற்சித்த மக்கள் அது முடியாமல் போகவே, அப்படியே கிணற்றை மூட முடிவு செய்தனர். கழுதையைக் காப்பாற்ற நேரம் எடுத்துக் கொண்டால் கவர்னர் தந்த காலக் கெடுவக்குள் கோயில் பூர்த்தி அடையாது என்று அவர்கள் எண்ணினர்.

கிராம மக்களே மண்ணைச் சுமந்து வந்து கிணற்றுக்குள் கொட்ட ஆரம்பித்தனர். கழுதை பரிதாபமாகக் கத்தியது. அதைக் கண்டு கொள்ளாமல் மக்கள் மண்ணைக் கொண்டு வந்து கிணற்றில் கொட்டியபடி இருந்தனர். சிறிது நேரத்தில் கழுதை யின் சத்தம் நின்றுவிட்டது.

கழுதை இறந்திருக்கும் என எண்ணி அவர்கள் கிணற்றில் எட்டிப் பார்த்தனர். கழுதை உயிரோடு தானிருந்தது. தன்மீது விழுந்த மண்ணை உதறிக் கீழே தள்ளி, அந்த மண் இறுகிக் கெட்டியாகும் வரை கால்களால் வேகமாக மிதித்தபடி இருந்தது.

அப்படி மண்ணால் உறுதியாகி, கிணற்றில் அடித்தளம் ஏற்பட ஏற்பட கழுதையும் மேலே வந்து கொண்டிருந்தது. கடைசியில் ஒரே எட்டாகக் குதித்து அது கிணற்றுக்கு வெளியே வந்து தப்பித்ததைக் கிராம மக்கள் வியப்புடன் பார்த்தனர்.

இந்தக் கழுதை தப்பித்தது தனது கூக்குரலால் அல்ல; செயல்திறனால்தான்.

மேலே விழுந்த மண் மழையை உதறித் தள்ளி, காலால் தொ[?]ர்ந்து மிதித்து உறுதியாக்கித் தான் உயர உபயோகித்த கழுதை காட்டிய வழி சிந் திக்கத்தக்கது.

கழுதையின்மேல் மணலைக் கொட்டியவர்களுக்குக் கழுதை மீது தனிப்பட்ட விரோதம் எதுவும் இல்லை. அவர்களது சூழ் நிலையும், கட்டாயமும் அவர்களை அப்படிச் செய்ய வைத்தது.

சோதனைகள் வரும்போது உலகம் நமக்கு எதிராகச் செயல்படுகிறது என்ற தீர்மானத்திற்கு வருவது தவறு. குற்றம் சொல்லி சுட்டிக் காட்டிக் கொண்டு நிற்கும்போது நாம் காப்பாற்றப் படுவதில்லை.

எலிஸபெத் குப்ளர் ரோஸ் கூறுவது போல "ஆனது ஆகிவிட்டது; இதற்குத் தீர்வ என்ன?" என்று சிந்தித்துச் செயற்படத் தொடங்கும் போதுதான் சோதனையிலிருந்து விடுபடுவது சாத்திய மாகிறது.

பயன்படுத்தும் வித்தை தெரிந்தால் வாழ்க்கையில் எதுவுமே வீண் அல்ல. எல்லாவற்றிலிருந்தும் நாம் கற்க முடியும். சோதனைகளிலும் நம் சாதனைகளுக்கான விதைகளை நாம் காணமுடியும். ஒவ்வொன்றின் மூலமாக வும் நாம் உயரக் கற்றுக் கொண்டால் வானம் கூட நமக்கு எட்டிவிடும் தூரம்தான்.

**என். கணேசன்**

# ஈசனைக் காண வாரீர்!

ஞாயிறு சிறப்புக் கவிதை

பண்ணுடன் வேதம் ஓதி
பலவகை தீபம் காட்டி
மண் மிசை விழுந்தெழுந்து
மலர்கொண்டு பூசை செய்து
முள் கொண்டு முதுகில் குத்தி
முகத்தினில் வேலைப் பாய்ச்சி
தலையதும் மொட்டை தட்டி
தக்கதோர் காவி கட்டி
உண்டியை ஒதுக்கித் தள்ளி
உடலையும் ஒடுங்கப் பண்ணி
ஆலய வாசல் தன்னில் நாளும்
அயராது விழித்திருந்து விட்டால்
எண்ணரும் தொண்டன் என்று
ஈசனார் ஏற்பாரோ! சொல்

உண்டியும் உணவும் அல்ல
உடுத்திடும் காவியல்ல
கொண்டபேர் விரதமல்ல
குறிதரும் நீறுமல்ல
கம்பியை முதுகில் பாய்ச்சும்
காவடி நடனமல்ல
மண்மிசை புரண்டெழவே
மனம்தரு நிறைவுமல்ல
அன்பது ஊறா நெஞ்சில்
ஆண்டவன் உறைய மாட்டான்!

அன்பொடு பேசும் வார்த்தை
அறிவிலார்க்கு ஊட்டும் கல்வி
பசித்தோர்க்கு இட்ட அன்னம்
பசுவிற்குத் தந்த தீனி
ஏழைக்கு உதவும் செல்வம்
எளியவர்க்கு உதவும் தொண்டு
பஞ்சத்தில் உழருவோர்க்கு
பரிவுடன் உதவும் சேவை
அழுக்காறு அவா வெகுளி
அறிந்திடா புனித உள்ளம்
இனிய நல்வார்த்தை பேசி
இன்முகம் மலர்ந்திருந்து
வ●விருந்தோம்பும் பண்பு
வறியவர்க்கிரங்கும் நெஞ்சம்
இவையெல்லாம் குணமாய்க் கொண்டு
ஈதலோடு இசைபெற வாழ்வீராகில்
இறைவனைத் தேடி நீவிர்
இறைஞ்சிட வேண்டாம் கண்டீர்,
அருள்தர ஈசனாரும் உங்கள்
அருகினில் வருதல் காண்பீர்!

வட்டிக்கு வட்டி வாங்கி
வாரமோர் கிடாய் அடித்து
கட்டிப் பொன் தங்கம் வாங்கி
கழுத்திலோர் மாலை போட்டு
முட்டியே அடி வயிறு தன்னில்
மோதிட மாட்டிக்கொண்டு
குட்டிக் குட்டிக் கும்பிட்டவாறு
குமரனுக்குத் தேர் செய்தால் மட்டும்
கிட்டுமோ மோட்சம் என்று
கேட்டிடத் தோன்றுதன்றோ?
அன்பதே ஈசன் தன்னை
அடைந்திடும் மார்க்கமென்று
செப்பிடும் சைவ நீதி தன்னை
சிந்தையில் கொள்ள வாரீர்!

**- விகடகவி -**

# தமிழ் அணங்குக்கு முன்னோர் அளித்த முதுசொம் நாலடியாரும் திருக்குறளும்

**இலக்கியப் பொழில்**

**மட்டுவில் நா.நல்லதம்பி**

"ஆலும் வேலும் பல்லுக்குறுதி; நாலும் இரண்டும் சொல்லுக்குறுதி" இது ஔவை சொன்ன பொன்மொழி. அதாவது, ஆலங்குச்சி யினாலும் வேலங்குச்சியினாலும் பல் துலக்கினால் பல் உறுதியாகும்; அதுபோல நாலடியார் என்னும் நாலும், திருக்குறள் என்னும் இரண்டும் கற்றால் எமது சொல்லுக்கு உறுதிதரும் என்பது பொருளாகும்.

சொல்லுக்குப் பல்லை உவமானமாகக் கையாண்டதிலும் ஒரு நயமுண்டு "பல்லுப் போனால் சொல்லுப் போகும்" என்ற பழமொழியை எண்ணி இன்புறலாம். இனி, நாலும் இரண்டும் என உள்ள நாலடியாரும் திருக்குறளும் கூறும் அறிவுரைகள் நமது வாழ்க்கைக்கு நல்வழியாக, எவ்வாறு வழிகாட்டிகளாக அமைகின்றன எனப் பார்ப்போம்.

நாலடியாரைப் பாடியவர்கள் சமணத் துறவிகள். இதிலே நானூறு பாடல்கள் உள்ளன. நாலடிகளைக் கொண்ட பாடல்களாலான எத்தனையோ நூல்கள் இருக்கின்றபோதும் சிறப்பு நோக்கி இந்நூலை "நாலடியார்" என அழைக்கின்றனர்.

அதுபோல, ஈரடியாலான ஆயிரத்து முந்நூற்று முப்பது குறள் வெண்பாக்களைக் கொண்ட இந்நூலைத் "திருக்குறள்" என்று அழைக்கின்றனர். திருக்குறளை இயற்றியவர் திருவள்ளுவர்.

## நாலடியார்

நாலடியார் என்ற நூலைத் தொகுத்தவன் பாண்டியன் உக்கிரப் பெருவழுதி ஆவான். இவன் ஆதரித்த சமண முனிவர்கள் எண்ணாயிரவரும் ஒவ்வொரு பாடலாகப் பாடிய எண்ணாயிரம் பாடல்களையும் வைகையாற்றில் எறிந்து விடும்படி செய்தானாம். அப்போது அப்பாடல் களில் நானூறு பாடல்கள் ஆற்றுக்கு எதிரே சென்றனவாம். அந்த அதிசயத்தைக் கண்ட மன்னன் அப்பாடல்களைத் தொகுத்து நூலாக்கினானாம்.

*இதனை*

*மன்னன் வழுதியர்கோன் வையைப் பேராற்றின்*
*என்ணி யிருநான்கோ டாயிரவர்-உன்னி*
*எழுதியிடும் ஏட்டில் எதிரே நடந்த*
*பழுதிலா நாலடியைப் பார்.*

என்னும் வெண்பாவால் அறியலாம்.

நாலடியாரில், நால்வகைப் புருஷார்த்தங்கள் அறம், பொருள், இன்பம் ஆகிய மூன்றையும் கூறி, நாலாவதாகிய வீடு பேற்றை அடையும் வழியைக் காட்டியுள்ளார்கள். வீடு பேற்றைப் பற்றி யாரும் மனத்தாலும் வாக்காலும் இதுதான் என்று எதனையும் குறிப்பிட்டுக் கூறமுடியாதாயினும், "அற்றது பற்றெனில் உற்றது வீடு" என்பதிலும் "பரனை நினைத்து இம் மூன்றும் விட்டதே பேரின்ப வீடு" என்பதிலும் தாம் அனுபவ வாயிலாக அறிந்த உண்மைகளை ஏனையோரும் உணர வைத்துள்ளனர்.

மேலும், சமணத் துறவிகள் தமது நிலைக்கேற்ப, இளமை நிலையாது, யாக்கை நிலையாது, செல்வம் நிலையாது என்று நிலையாமையை மேம்படுத்திக் கூறியுள்ளனர்.

ஆயினும் இல்லற தர்மத்தைப் பற்றியும் பொறையுடைமை, பிறர்மனை நயவாமை, ஈகை, பழவினை, மெய்ம்மை, தீவினையச்சம் என்னும் ஆறு அதிகாரங்களில் கூறியுள்ளனர்.

பொருட்பாலிலே கல்வி முதற் கற்புடை மகளிர்வரை இருப்பத்தாறு அதிகாரங்களில், கல்வியறிவின் அவசியம், பெரியோர் நட்பு, அறியாமை, ஈயாமை முதலிய வாழ்க்கை விடயங் கள் பற்றிக் கூறியிருக்கின்றனர்.

காமத்துப் பாலில் காமநுதலியல் என ஓர் அதிகாரத்தை மாத்திரம் துறவிகள் பாடியுள்ளனர்.

## திருக்குறள்

திருக்குறள் பாடிய திருவள்ளுவர் ஏனையோருக்கு வழிகாட்டியாக வாழ்ந்து காட்டியவர்; துறவியல்லர் என்பது வெளிப்படையாகத் தெரிகிறது. இவருக்குத் தெய்வப் புலவர், செந்நாப் போதார், பொய்யில் புலவர், தேவர், முதற் பாவலர், பெருநாவலர் என்று பல பெயர்கள் இருப் பது அவரது புலமையை வெளிப்படுத்துகின்றது.

"வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான் புகழ் கொண்ட தமிழ்நாடு" என்று பாரதியார் பாடியதிலிருந்து திருக்குறளால் தமிழும் தமிழ் நாடும் சிறப்புப் பெறுகின்றன. திருக்குறள் உலகப் பொது மறையாக இருப்பது ஒவ்வொரு தமிழ்மகனும் பெருமையடையக் கூடிய விடயம்.

திருக்குறளிலும் நாலடியாரைப் போலவே, அறம், பொருள், இன்பம், ஆகிய மூன்றையும் விளக்கிக் கூறி அதனால் வீடு பேற்றை உணர வைத்துள்ளார். வள்ளுவனார். முப்பொருள்களையும் விளக்கிய சிறப்பினால் "முப்பானூல்" என்ற சிறப்புப் பெயரும் இதற்கு உண்டு.

திருக்குறளிலே, கடவுள் வாழ்த்துப் பாடும்போது, உலகிலுள்ள எல்லா மதத்தினருக்கும் ஏற்புடையதாகப் பாடியும், பொருளடக்கம் உலக முழுமைக்கும் ஏற்றதாகக் கூறியும் திருக்குறளை உலகப் பொது நூலாக்கிய திருவள்ளுவர் தெய்வப் புலவரன்றோ!

திருக்குறளில் கடவுள் வாழ்த்து, வான்சிறப்பு, நீத்தார் பெருமை, அறன் வலியுறுத்தல் முதலி நான்கு அதிகாரங்களைப் பாயிரமாகப் பாடியுள்ளார்

(12 பக்கம் பார்க்க...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உண்ணிக் காய்ச்சல் பரவுவதைத் தடுப்பதற்கு அதனைக் காவும் பாலுண்ணியை அழிப்பது அவசியம்

நோய் பரவாது தடுத்தல்

உண்ணிக் காய்ச்சலை மருந்துகளால் முற்றாகக் கட்டுப்படுத்தக்கூடியதாக உள்ளபோதிலும், நோய்வரும் முன் நம்மை நாமே காப்பாற்றிக் கொள்வது சிறந்ததல்லவா? இந்நோயானது நமது உடல் நலத்திற்குப் பங்கம் விளைவிக்க முன்பே அதிலிருந்து தப்பிக்கொள்வோம். அதற்கு இந்நோயின் பரவலைக் கட்டுப்படுத்துவது இன்றியமையாததாகும்.

பரவலைக் கட்டுப்படுத்துவதற்கு முதலில் நோய் காவியான பாலுண்ணிகளை அழிப்பதும், அடுத்ததாக பாலுண்ணிக் கடியிலிருந்து மனிதர்களைப் பாதுகாப்பதும் இரண்டு முக்கியமான உபாயங்களாகும்.

பாலுண்ணிகளை அழிப்பதற்கு முன் அவற்றின் வாழ்விடங்களை அடையாளங்காண வேண்டும். அவையாவன வயல்வெளிகளை அண்டிய சிறிய காடுகள் (Scrub jungle), புீள்காடுகள் உருவாகும் இடங்கள் மற்றும் இரு பெரிய காடுகளைப் பிரிக்கும் சிறு காட்டுப் பகுதிகள் என்பனவாகும். இவற்றை அழிப்பது நன்மை தரும். எனினும் பாலுண்ணிகளின் வாழ்விடங்களாகப் பொருளாதார நன்மை பயக்கும் தாவரங்கள் அமையும் போது, அவற்றை அழிப்பது சாத்தியமற்றது. இவ்வாறான சந்தர்ப்பத்தில் பாலுண்ணிகளை மட்டும் கொல்லும் இரசாயனங்களை விசிறி விடலாம் உதாரணங்களாக பெந்தியோன் (Fenthion) மற்றும் பேகோன் (Baygon) என்பவற்றைக் குறிப பிடலாம்.

இவ்வாறு விவசாய நிலங்களில் மேற்குறிப்பிட்ட இரசாயனங்களை பாவிக்கும்போது, அங்கு விளையும் மரக்கறி மற்றும் தானியங்களால் மனிதனுக்கு தீங்குவராதிருக்குமாறு கவனித்தல் வேண்டும்.

அடுத்த முறையாக, பாலுண்ணிகளின் கடியிலிருந்து எவ்வாறு தப்பலாம் என்று பார்ப்போம்.

பாலுண்ணிகள் காணப்படும் இடங்கள் என்று சந்தேகப்படும் இடங்களிற்குச் செல்லும் போது, பாலுண்ணிகளிற்கு எதிர்ப்புத் தன்மையைக் காட்டும் இரசாயனப் பதார்த்தங்களை (Mite Repellants) உடலிலும் உடைகளிலும் பூசிக் கொண்டு சென்றால், அவை நம்மை அணுகாது. இவ்வாறான பதார்த்தங்களாக டைமீதைல்(f) தலேற் (Dimethyphthalate), பென்சைல் பென்சோயேற் (Benzyl benzoate), டீட் [DEET-N,N-diethyl-meta-toluamide] என்பவற்றைக் குறிப்பிடலாம். வெளியே தெரியும் உடலின் தோல்பகுதிகளுக்கு 20%-50% DEET ஐப் பூசலாம். அதை கண், உதடு, மற்றும் காயங்களில் பூசுவதைத் தவிர்க்க வேண்டும். உடைகளுக்கு பேமெத்திறினை (Pernethrin) கொண்ட இரசாயனங்களைப் பூசலாம், இதை ஒருபோதும் உடலுக்கு பூசக்கூடாது. ஏப்பொழுதும் இரசாயன பதார்த்தங்களுடன் வழங்கப்படும் ஆலோசனைகளை கவனமாகப் பின்பற்ற வேண்டும்.

**உண்ணிக் காய்ச்சல் குறித்து அறிந்துகொள்ளுங்கள் 04**

இதைத்தவிர உடைகளை முழு உடலையும் மூடும்படியாக அணிவதால், பாலுண்ணிக் கடியிலிருந்து தப்பிக்கலாம். இதற்கு உதாரணமாக காற்சட்டைகளைச் சப்பாத்தினுள் செருகிவிடுதல், முழுக்கை சட்டை அணிதல் என்பவற்றைக குறிப்பிடலாம். வெறும் தரையில் இருப்பதோ படுப்பதோ தவிர்க்கப்படல் வேண்டும். இதன் போது தரைவிரிப்புகளைப் பயன்படுத்தலாம்.

உண்ணிக்காய்ச்சலை (ஸ்கிரப் டை(f)பஸ்) வருமுன் தடுப்பதற்கு ஸ்கிரப் டை(f)பஸ்றகான தடுப்பூசிகள் (vaccine) எதுவும் இதுவரை கண்டறியப்படவில்லை.

இறுதியாக, உண்ணிக் காய்ச்சலைப் பற்றி அனைவரும் நன்கு அறிந்திருப்பது, அதனை இலகுவில் கட்டுப்படுத்தி, நாள்தோறும் நோயாளர்கள் பெரும் எண்ணிக்கையில் வைத்திய சாலைகளை நாடி வருவதைக் குறைக்க உதவும் என்பது எமது நம்பிக்கையாகும்.

எனவே பாலுண்ணிகள் காணப்படும் இடங்களிற்குச் சென்று வந்தபின் ஏற்படும் காய்ச்சல்களிற்குக் காலம் தாழ்த்தாமல் மருத்துவ உதவிகளை நாடுங்கள். உங்கள் அயலில் காணப்படும் கைவிடப்பட்ட தோட்டங்கள், பற்றைகள் போன்றவற்றை அழித்து சூழலை சுத்தமாக வைத்திருப்பதன் மூலம் உங்களுடன் சேர்த்து அயலவரையும் நோயிலிருந்து பாதுகாத்துக் கொள்ளுங்கள்.

இதைத்தவிர, உங்கள் கால்நடைகள் மற்றும நாய் போன்ற செல்லப்பிராணிகளில் உண்ணிகள் (Ticks) காணப்படுமாயின் அருகிலுள்ள விலங்கு மருத்துவரை நாடுங்கள். இவ் உண்ணிகள் (Ticks) உண்ணிக் காய்ச்சலுக்கான (ஸ்கிரப்டை(f)ஸ்) காவிகளாக இல்லாதபோதும் இன்னொரு வகை றிக்கெட்சிய நோயான 'ஸ்பொட்டட்' காய்ச சலுக்குரிய காவிகளாகும். இவற்றால் உண்ணிக் காய்ச்சல் ஏற்படுவதில்லை. இவை 'ஸ்பொட்டட்' காய்ச்சலையே ஏற்படுத்தும் இலங்கையின் மத்திய, ஊவா, மற்றும் சப்ரமுவா மாகாணங்களில் பரவியுள்ள 'ஸ்பொட்டட்' காய்ச்சல், எதிர் காலத்தில் யாழ்ப்பாணத்திற்கும் பரவக்கூடும். எனவே இவ் உண்ணிகளை அழிப்பதன் மூலம் 'ஸ்பொட்டட்' காய்ச்சலை வரும் முன் தடுப்போம்.

**உண்ணிக் காய்ச்சல் இல்லாத ஒரு சமூகத்தை உருவாக்க அனைவரும் ஒன்று சேர்ந்து உழைப்போம்!!.** *(முற்றும்)*

யாழினி கனகரத்தினம்
நான்காம் வருடம், யாழ்.மருத்துவபீடம்.

# களவு......

(09 பக்கத் தொடர்ச்சி)

அவனது ஒல்லியான வாலிப உருவம் இளமை மாறா முக வெட்டும் இருபது வயது இளைஞனுடையது. முத்துவின் அடக்கமான சுபாவத்தையும் நாண இயல்பையும் கண்டு அவன் நண்பர்கள் அவனைப் 'பெட்டைக் குருநாதி' என்று பட்சத்துடன் கிண்டல் செய்தனர். அப் போதெல்லாம் முத்துவும் அவர்களுடன் சேர்ந்து லஜ்ஜையோடு சிரிப்பான். ஆனால் அவன் மனதிலோ எரிச்சல் குமுறும். பெண் ணினத்தையே குழிதோண்டிப் புதைக்க வேண்டும்போல் அவனுக்குத் தோன்றும். ஆனால் மேலுக்குச் சிரித்துக் கொள்வான். எப்போதும் சிரித்துக் கொள்வான். முத்து வுக்கு ஐந்து வயதாய் இருக்கும்போது அவன் தந்தை யாரோ ஒருத்தியோடு ஓடிப்போய் விட்டாராம். எவ்வளவோ காலத்துக்குப் பிறகு தான் இவ்விஷயம் அவனுக்குத் தெரியவந்தது. ஆனால் அந்தச் சம்பவம் ஒருவிதத்தில் அவன் மனதில் பதிந்துவிட்டது. சதா அழுத கோலமாய் இருந்த அவன் தாயின் முகம் மங்கிய குழந்தைப் பருவ நினைவாய் முத்துவின் மனத்திரையில் இன்றும் நிழலாடியது. அதுதான் அவன் தந்தை ஓடிப்போன சமயமாயிருக்க வேண்டும். முத்துவுக்குத் தன் தாயைப் பற்றிய முதல் நினைவே அந்த அழுத முகம்தான். கணவன் ஓடிப்போன பின் முத்துவின் தாய்க்கு இருந்ததெல்லாம் முத்துதான். அவனையும் இழந்து விடுவோமோ என்ற பயம் அவளுக்கு. தன் அரவணைப்புக்கு வெளியே அகலவிடாது அவனைக் கட்டிக் காத்து வளர்த்தாள். முத்து தாயின் உரிமைப் பிணைப்பிலே கட்டுண்டு கிடந்தான். இன்று கூட அந்தத் தாயை நினைக்கையில் அவன் கண்களில் நீர் நிறைந்தது. ஏன், அவள் செத்த அன்று கூட முத்துவின் தேவை தானே அவ ளுக்குப் பெரிதாய்ப்பட்டது. அப்பொழுது முத்துவுக்கு வயது பதினைந்து. அன்று சிநேகிதரோடு அரட்டை அடித்து விட்டு வீட்டிற்கு வரும்போது இரவு மணி ஏழு. அவன் தாய் நெஞ்சுவலி என்று படுத்திருந்தாள். அந்த நெஞ்சு வலியோடும் அவள் எழுந்து வந்து முத்துவுக்கு சோறு போட்டுத் திரணை திரணையாகக் குழைத்துக் கொடுத்துவிட்டுத் தான் மீண்டும் படுத்துக் கொண்டாள். அவன் தாய் இறந்த பிறகு அந்த ஊரே முத்துவை சுவீகரித்துக் கொண்டது. ஒவ்வொருத்தர் வீட்டில் ஏதாவது சில்லறை வேலை செய்து சாப்பாட்டுக்குப் பிழை இல்லாமல் வாழ்ந்துவந்தான். போதாதற்கு வீட்டில் ஆடு, கோழி என்று வளர்த்தான். இட்டவேலை எதுவாயினும் முகங்கோணாது அந்த இயல்பான வெள்ளைப் புன்னகையோடு செய்து முடித்து விடுவான். முத்து என்றால் எல்லோருக்கும் ஒருபட்சம். எதிரே வரும் வாத்தியார் ராமலிங்கத்தைக் கண்டதும் முத்துவின் நடையின் வேகம் தானே குறைந்தது.

'என்ன முத்தம்மா, வாழைத்தாரும் கையுமாக அன்னை நடை போடுகிறாய்? துலைக்கே?' முத்து அசட்டுச் சிரிப்புச் சிரித்தான். வாத்தியார் எப்போதும் அவனை முத்தம்மா என்றுதான் அழைப்பார். அது ஏதோ பெரிய ஹாஸ்யம் என்பது அவர் நினைப்பு. ஆனால் முத்துவின் காதுகளிலோ நாராசமாய் பாய்ந்தது அச்சொல்! முத்து வாத்தியாரை வெறுத்தான் என்று சொன்னால் சாதாரணமாய்ப் போய் விடும். அவரிடம் முகங்கொடுத்து பேசவே அவனுக்கு மனமில்லை.

'இல்லை உப்பிடி 'பிரக்கிராசி' யார் வீட்டை வரைக்கும்.......''..... என்று இழுத்தான்.

'உன்னைவீட்டுப்பக்கமாவும்காணேல்லை... விறகும் கொத்தாமக் கிடக்கு..... 'உங்கடை விறகைக் கொத்துறதுக்கு வேறை ஆள் பார்த்துக்கொள்ளுங்கோ' என்று மறுத்துவிட முத்துவின் நா துடித்தது. தனது வெறுப்பையெல்லாம் வார்த்தைகளில் உமிழ்ந்து விடத்துடித்தான். ஆனால், வாத்தியாருடைய கைத்தடியின் வெள்ளிப் பூணைப் பார்த்து முறுவலிக்க மட்டுமே அவனால் முடிந்தது.

'அதுக்கென்ன, நாளைக்கு மத்தியானமாய் வந்து கொத்திப் போடுறன்' என்றான் பணிவாக. வாத்தியார் தன்னுடைய அலுவல் முடிந்த திருப்தியிலே மேலே நடந்தார். தலைப் பாரத்தைச் சற்று நகர்த்திக் கொடுத்த முத்து மனக் கசப்பைச் சுவைத்தவாறு நடக்கலானான்.

மணி பன்னிரண்டரை இருக்கும்போது முத்து 'பிரக்கிராசி' யாருடைய மனைவி பொன்னம்மாவை அணுகினான். பொன்னம்மா கவனித்து விசாரிக்கும் மட்டும் சுவரோடு சுவராய் நின்றான் முத்து.

'ஆட்டுக்குக் கஞ்சித் தண்ணி வைக்க வேணும், ஒருக்கா வீட்டே போட்டு வரட்டே?' என்று முணுமுணுத்தான்.

'பந்தி போடுற நேரத்திலே போக நிற்கிறாய்! ஆடென்ன சாகப்போகுதே, கொஞ்சம் செல்லப் போவேன்' என்றாள் பொன்னம்மா. முத்துவின் முகத்தில் கவலை தொட்டது.

'இல்லையக்கா, அது குட்டித் தாச்சி ஆடு, பாவம். நான் இரண்டு எட்டிலை போட்டு வாறன். இப்ப போனதும் வந்ததுமாய் வந்திடுவேன்' அவன் குரலில் வற்புறுத்தல் தொனித்தது.

'சரி, சரி போட்டு ஓடியா' முத்து ஓட்டமும் நடையுமாகத் தன் இரண்டறை மண் வீட்டை அடைந்தான், தாய்மைப் பூரிப் போடு குலுங்கிக் கொண்டு நின்ற ஆட்டுக்குக் கஞ்சியைக் கொண்டுபோய் வைத்தவன் நேரே வீட்டு வேலியோடு வளர்ந்த மாமரத்தில் மளமள வென்று ஏறினான். மேல் மரத்துக்கு ஏறி மாவின் சடைத்த கிளைகளில் மறைந்து கொண்டான். முத்துவின் வேலிக்கும், பக்கத்தில் செல்லப்பருடைய வளவு வேலிக் கும் இடையில் ஒரு குச்சொழுங்கை ஓடி யது. செல்லப்பருடைய வளவையும், வள விலிருந்த சின்னக் கல் வீட்டையும் பெந்த கொஸ்த சபையினர் வாடகைக்கு எடுத் திருந்தனர். செல்லப்பர் வளவில் கிணறு ஒழுங்கைப் பக்கத்து வேலியோடு இருந் தது. கிணற்றைச் சுற்றி கிடுகுகளால் அடைப்புக் கட்டியிருந்தது. முத்துவுக்கு மாமரத்தில் இருந்து பார்க்க செல்லப்பரின் வளவு முழுவதும் தெரிந்தது. முத்து மாமரத்தில் ஏறிச் சிறிது நேரத்தில் பென்டிகொஸ்ட் பெண்ணொருத்தி குளிப்பதற்கென்று குறுக்குக் கட்டோடு கிணற்றடிக்கு வந்தாள். முத்துவின் இதயம் படபடக்கத் தொடங்கியது. உடலெங்கும் புல்லரித்தது. அந்தப் பெண் வாளி வாளியாகத் தண்ணீரை அள்ளி ஊற்றிக் கொண்டாள். அவளுடைய ஈரச் சேலை அவள் உடலோடு ஒட்டிக் கொண்டது. அவளுடைய வெறுமையான தோள்களும் கைகளும் நீரில் நனைந்து மினு மினுத்தன. முத்து விழுங்கும் கண்களால் அவளையே பார்த்துக் கொண்டிருந்தான். ஒரு நாள் முத்து மாங்காய் பறிப்பதற்கென்று மரத்தில் ஏறியிருந்த போதுதான் முதன் முதல் தற்செயலாக இப்படியொரு காட்சியைக் கண்டான். அன்று முதல் இது இவனுக்கு நித்திய நடவடிக்கை ஆகிவிட்டது...... அந்தப் பெண் குளித்து முடித்தாள். அவள் உருவம் பார்வையிலிருந்து மறைந்ததும் முத்து மரத்திலிருந்து இறங்கிப் பிரக்கிராசி' வீட்டை நோக்கி நடந்தான்.

வேலியோரமாக, ஒடித்து விழுத்திய முருக்கம் இலைகளை முத்து பொறுக்கிக் கொண்டிருந்தான். பள்ளிக்கூடத்தின் கடைசி மணி தொலைவில் கேட்டது. சற்று நேரத்துக்கெல்லாம் ஒழுங்[illegible] குரல் கேட்டது. சத்தம் [illegible] நகர்ந்த முத்து வேலிக்கிடுகின் நீக்கலில் கண் வைத்துப் பார்த்தான். ஆறுமுகத்தின் மகள் மீனாவும் அந்த வறுத்தலைவிளான் பெடியன் யோகேஸ்வரனும் சல்லாபித்துக் கொண்டு நின்றனர். அந்த ஒழுங்கை கிட்டத்தட்ட சன நடமாட்டமே அற்றது. முத்து கிடுகு நீக்கல் வழியே வைத்த கண் வாங்காமல் பார்த்தான். சைக்கிளில் சாய்ந்தபடி நின்ற யோகேஸ் வரன் குனிந்து மீனாவின் காதுக்குள் என்னவோ ரகசியம் பேசினான். மீனா சிணுங்கலும் சிரிப்புமாய் அவன் முகத்தைத் தள்ளிவிட்டாள்.

'என்ன பெரிய விலை வைக்கிறாய் மீனா' யோகேஸ்வரன் அவள் கன்னத்தைக் கிள்ளினான்.

'உமக்கு வரவரக் கை நீளுது.' மீனா செல்லமாய்க் கோபித்தாள், முத்துவின் இதயத்தில் கூரிய வேதனை குடைந்து கிளறியது. நிராசையின் கைப்பு நெஞ்சில் கரித்தது. சீச்சீ. நாமும் ஒரு பிறவியா' என்று அவன் மனம் அலுத்துக் கொண்டது. பள்ளியாலை இன்னும் வெளிக்கிடாத பெடியன். அவனுக்குக் கூடினது வயசு பதினெட்டு இருக்கும். அதுக்கிடையிலை அவனுக்கு ஒரு பெட்டை. நானும் இருக்கிறனே ஆம்பிளைச் சிங்கம்! உப்பிடி ஒரு நாளாவது சீவியத் திலை........ நான் தானே உதுக்கெல்லாம் வகையற்றவன்; உதவாதவன் என்று முத்து வின் மனதில் எண்ணங்கள் மின்வெட்டின. யோகேஸ்வரன் கைக் கடிகாரத்தைப் பார்த்தான்.

''நேரமாகுது. நாளைக்கும் இந்த நேரத்துக்கு வாறன், சரியே?'' மீனாவின் தோள்களை ஒரு கணம் வளைத்து அணைத் தவன் சைக்கிளில் ஏறி மறைந்தான். மீனாவும் அவனைத் தொடர்ந்தாள். திடீரெனத் தெளிவாகச் சுந்தரனின் கேலிக்குரல் முத்து வின் காதுகளில் சவ்வு பிரிவதுபோல் ஒலித்தது...... 'ஒரு பெட்டையைப் பார்த்துக் கண்ணடிக்கத் தெரியாத பெட்டைக் குருநாதியாய் இருக்கிறாய் முத்து. இதை எப்பொழுது சொன்னான்.?... ஓ.... அன்று சுந்தரனும் மற்றப் பெடியன்களும் திருவிழாவுக்குப் புறப்படும்போதே முத்து தானும் அவர்களோடு வருவதாகச் சொன்னான். அப்பொழுது தான் சுந்தரன் இப்படிக் கேலி செய்து 'உனக்கேன் திருவிழா' என்று கேட்டான். முத்துவின் மனதில் ஆழப் பதிந்து விட்டது அந்தச் சம்பவம். முத்து நெடுநேரமாக வேலியடியில் குந்தியபடி இருந்தான்.

அடுத்த நாள் முத்து வேளைக்கே வேலியடிக்கு வந்துவிட்டான். சிறிது நேரத்தில் மீனா வந்தாள். முத்து வேலிப்பொட்டு வழியே பார்த்தான். மீனா புத்தகக்கட்டை மார்போடு அணைத்தவாறு பென்ஸிலின் வால் கட்டையைச் சப்பியபடி நின்றாள். முத்துவுக்கு தன் நெஞ்சத்தின் ஆற்றாமை தன் மீதே வெறுப்பாக உருவெடுத்தது. அந்த வெறுப்பின் வேகத்தை, உந்தலை அவனால் தாங்கமுடியவில்லை. யோகேஸ்வரனை இன்னும் காணவில்லை. சருகுகள் சரசரக்காமல் மெல்ல வேலியை விட்டகன்ற முத்து தன்னுடைய படலையால் வெளிக் கிட்டுத் தெருவால் சுத்திக்கொண்டு குச்சொழுங்கைக்குள் புகுந்தான். அவனைக் கண்டதும் ஒருகணம் திகைத்த மீனா சுதாகரித்துக் கொண்டு அவனை நோக்கி விறு விறென்று நடக்கத் தொடங்கினாள். அவள் அருகே வந்ததும் முத்து வழியை மறித்துக் கொண்டு நின்றான்.

'எப்பிடிச் சுகமே முத்து?. நான் ராசமணி அக்காவைப் பாத்திட்டு வாறன் மீனா சிரித்தாள். முத்து அவளையே வெறித்துப் பார்த்தான்.

'மீனா.......' அவன் உதடு காய்ந்து நா மேலண்ணத்தோடு ஒட்டிக் கொண்டு மரத், துக் கிடந்தது' உதட்டில் நாவை ஒட்டினான்.

'மீனா.....' முத்துவின் தொண்டை முறுகி வார்த்தைகள் பிரயாசையோடு நிறுத்தி [illegible]...... 'யோகேஸ்வரன் இன்[illegible]காணேல்லை மீனா...... பரவாயில்லை......' முத்துவின் இமையாத வெறிநோக்கு மீனாவின் அடிவயிற்றைக் கலக்கியது. அவள் முகத்தில் பீதி படர்ந்தது. 'அவன் வராட்டில் என்ன? நான் இருக்கிறன் இப்பிடிக் கிட்ட வாவன் மீனா..... அவனிட்டைப் போகலாம்..... என்னட்டை வரக் கூடாதே?........ வாவன்'. முத்து எட்டி அவள் கையைப் பிடித்திழுத்தான்.

'ஐயோ! ஐயோ!' மீனா கிறீச் சென்று கத்தினாள்.அவன் பிடியில் திமிறித் திமிறிக் கத்தினாள். கிட்டவா, கிட்டவா, என்று முணுமுணுத்தபடி முத்து அவளை அணைத்துப் பிடிக்க முயன்றான். மீனாவின் கூப்பாட்டைக் கேட்டு ஓடிவந்த பென்டி கோஸ்ட் பெண்கள் வேலியால் கத்த முத்து திடுக்கிட்டுத் திரும்பினான். அந்த ஒரு கணத்தைப் பயன்படுத்திக் கொண்டு மீனா அவன் பிடியிலிருந்து நழுவி ஓட்டம் பிடித்தாள். முத்து சிலைபோல் நின்றான். அவன் முகத்தில் பட்ட நகக் காயங்களிலிருந்து ரத்தம் கசிந்தது. குழப்பம் தோய்ந்த முகத்தோடு கண் கலங்க நின்றான். பிறகு மெல்லத் தன் இரு கைகளையும் தூக்கிப் பிடித்துப் பார்த்தான்.

நாயரின் கடையில் சுருட்டுப் பற்ற வைத்துக் கொண்டு நின்ற பாலசிங்கம் தூரத்தில் ஐந்தாறு பேர் கூட்டமாய் வருவதை உன்னிப்பாய்க் கவனித்தான். ஆறுமுகம், அவனுடைய தம்பி கந்தையா வேறு சரவணை, சின்னையா, தம்பித்துரை, சிதம்பரம் என்று கணக்கெடுத்த பாலசிங்கம் 'பொல்லுத்தடியளோடை எங்கை படையெடுக்கிறாங்களோ' என்று முணுமுணுத்தான். கடையை விட்டுத் தெருவில் இறங்கிய பாலசிங்கம் குரல் கொடுத்தான்.

'என்ன ஆறுமுக அண்ணை, எந்தச் சண்டைக்கு இவ்வளவு ஆரவாரமா.....' ஆறுமுகம் தொண்டை கிழியக் கத்தினான்.

'எல்லாம் உன்டை முத்தான் முத்து இருக்கிறானே, நாசமாப்போவான் அவனை ஒரு கை பார்க்கத்தான், அவனை எலும்பு எலும்பா முறிச்சுப் போடாட்டில் என்டை பேர் ஆறுமுகம் இல்லை'....

'ஏன் இப்ப முத்துப் பெடியன் என்ன செய்திட்டான்?''

'என்ன செய்திட்டானோ? ஒழுங்கைக்குள்ளை என்டை மகளில கை வைக்கப் பார்த்தவனல்லே! நல்ல வேளை அந்தப் பென்டிகொஸ்ட் மனிசியள் வந்து குளறினதாலை அவள் இண்டைக்குத் தப்பினாள். அவனை விட்டு வைச்சால் ஊரிலை ஒரு குமர் உலவேலாது. நான் அவனுக்கு வேலை பார்க்கிறன்'. ஆறுமுகம் காறித் துப்பிவிட்டுத் தன்னுடைய ஆள்களோடு நடந்தான். சுருட்டைக் கொடுப்புக்குள் சொருகியபடி, 'உவன்ட மேள் பெரிய பத்தினிப்பெண் தான்' என்று முணு முணுத்த பாலசிங்கம் சற்றுத் தூரத்தில் அவர்களைப் பின்தொடர்ந்தான். முத்துவின் படலையைத் தள்ளும் போது குட்டித்தாச்சி ஆட்டின் பரிதாப ஓலம் தான் அவர்களை வரவேற்றது. பாவம் பிரசவ வேதனை போலும்.

'டேய் முத்து, வாடா வெளியிலை?' ஆறுமுகம் கத்தினான். பதிலில்லை. மீண்டும் மீண்டும் கத்தினான் ஆறுமுகம். கொதிப்பேறிய ஆறுமுகம் வாசல் கதவை ஓங்கி உதைத்தான். கதவு படாரென்று திறந்து கொண்டது. உத்தரத்திலிருந்து தொங்கிய கயிற்றின் நுனியிலே முத்துவின் உடல் ஊசலாடிக் கொண்டிருந்தது. ஊசலாடும் அந்த உடலைப் பார்த்தவாறு எல்லோரும் மரம் போல் நின்றார்கள். குட்டித்தாச்சி ஆட்டின் வதையுண்ட வேதனையோலம் கிறீச்சிட்டு எழுந்தது. ஒரு கணம் எங்கும் நிறைந்து தங்கிய அந்த ஓலம் மெல்ல மெல்ல தேய்ந்து அடங்கி ஓய்ந்தது.*************

*நன்றி- 'கடவுளரும் மனிதரும்' சிறுகதைத்தொகுதி - 1994*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இடிபாடுகளில் சிக்கியவர்களை கண்டறிய நவீன ராடர்



மீட்புப் பணிக்கு உதவும் அதிநவீன ராடர் கருவியை இஸ்ரேலிய நிறுவனம் கண்டுபிடித்துள்ளது. இதன்மூலம் இடிபாடுகளில் சிக்கியுள்ளவர்களை எளிதில் மீட்க முடியும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த நவீன தொழில்நுட்பம் இராணுவம் மற்றும் மீட்புப் பணியில் ஈடுபடும் சிறப்புப் படைப்பிரிவினருக்குப் பேருதவியாக இருக்கும் என அந்நிறுவனம் தெரிவித்துள்ளது.

இந்நிறுவனம் ஏற்கனவே தயாரித்து அறிமுகப்படுத்தியுள்ள ராடர் கருவிகளைத்தான் பொலிஸாரும், இராணுவமும் பயன்படுத்தி வருகின்றனர்.

இந்நிலையில் தற்போது முற்றிலும் நவீன தொழில்நுட்பத்தில் வடிவமைக்கப்பட்டுள்ள இக்கருவி பல்வேறு வகையான சுவரினையும் எளிதில் ஊடுருவி பார்க்கும் தன்மையுடையதாகும். இதன் துணைக்கொண்டு, கட்டட இடிபாடுகள் மற்றும் தீ விபத்தால் சேதமடையும் கட்டடங்களில் யாரேனும் சிக்கியிருந்தால், அவர்களை விரைவாக மீட்க இக்கருவி உதவும்.

இது குறித்து கருத்து தெரிவித்த அந்நிறுவன இயக்குநர் அமீர் பெரி, ''சுவரில் எளிதில் ஊடுருவும் கருவியைத் தயாரிக்கும் திட்ட யோசனை 1960 ஆம் ஆண்டிலிருந்தே கூறப்பட்டு வந்த போதிலும், நவீன தொழில்நுட்பத்தின் மூலம் தற்போதே இது சாத்தியமாகியுள்ளது' என்றார்.

# கடற்பாசியில் இருந்து 'பயோ' எரிபொருள்

வானிலை மாற்றத்துக்கு மட்டும் காரணமாக இல்லாமல், சுற்றுச்சூழலை பாதிக்காத ''பயோ'' எரிபொருள் உற்பத்தி செய்யவும் கடற்பாசி பயன்பட உள்ளது! காட்டாமணக்கு உட்பட, பல தாவரங்கள் மூலம் சுற்றுச்சூழலை பாதிக்காத வகையில் உள்ள இயற்கையான மாற்று எரிபொருள் உருவாக்கும் முயற்சியில் பல நாடுகள் இறங்கி உள்ளன. இந்தியாவும் இது போன்ற திட்டங்களில் இறங்கியுள் ளன. கோஸ்டாரிகா பல்கலைக்கழக விஞ்ஞானிகள் இப்போது, கடற்பாசியில் இருந்து மாற்று எரிபொருளை உற்பத்தி செய்ய முடியும் என்று கண்டுபிடித்துள்ளனர். கடற்பாசி உற்பத்தி, கடந்த 1950 இல் இருந்து 60 மடங்கு பெருகியுள்ளது. ஆசிய, பசிபிக் கடலில் இருந்து தான் இதன் 91 சதவீத உற்பத்தி கிடைக்கிறது. ஆண்டுக்கு எட்டு கோடி தொண் கடற்பாசி ஆண்டுதோறும் உற்பத்தி செய்யப்படுகிறது.





கடற்பாசியில் இருந்து மின்சாரம் தயாரிக்க முடியும் என்று ஏற்கெனவே கண்டுபிடிக்கப்பட்டுள்ள நிலையில், ''பயோ' எரிபொருள் தயாரிக்கலாம் என்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது புது திருப்பத்தை ஏற்படுத்தும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. கடற்பாசி இப்போது உணவாகப் பயன்படுத்தப்பட்டு வருகிறது. பிராணிகளுக்கு இரையாகவும், விவசாயத்துக்கு உரமாகவும் கூட பயன்படுத்தப்பட்டு வருகிறது.

இது குறித்து நிபுணர்கள் கூறுகையில், ''பல நாடுகளில் கடலில் கழிவு நீர் கலக்கப்படுகிறது. இதனால், சுற்றுச்சூழல் பாதிக்கப்பட்டு, கடல் வளம் குறைவதுடன் அதன் பயன்பாடும் பாதிக்கப்படுகிறது. அந்த வகையில் கடல் வளம் பாதிக் காத நிலையில் கடற்பாசியை வளர்த்து அதன் மூலம் எரிபொருளை உற்பத்தி செய்தால் எதிர்காலத்தில் எரி பொருள் பற்றாக்குறையை தீர்க்க முடியும். உலக வெப்பமயமாதலை குறைக்க முடியும்' என்று தெரிவித்தனர்.

# உலகின் சிறந்த நகரமாக கோபன்கேஹன் தேர்வு

மக்கள் வாழ்வதற்குரிய சிறந்த இடமாக டென்மார்க் தலைநகர் கோபன்கேஹன் விளங்குவதாக ஆய்வொன்று தெரிவிக்கின்றது.



நியூயோர்க், லண்டன் போன்ற நகரங்களே சிறந்த இடம் என்று நம்மில் பலர் நினைத்துக் கொண்டிருப்பதைப் பொய்யாக்கி விட்டது சமீபத்தில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வு.

மக்கள் வாழ்வதற்கு, உலகில் சிறந்த இடம் கோபன்கேஹன் நகரம் என்பது அந்த ஆய்வில் தெரியவந்துள்ளது. வடக்கு ஐரோப்பாவில் உள்ள டொன்மார்க் நாட்டின் தலைநகரான கோபன்கேஹனில்தான் மக்கள் ஆரோக்கியமாக வாழ்வதற்கான அனைத்துச் சூழ்நிலைகளும் உள்ளன. அதிகம் மாசுபடாத சுற்றுப்புறச் சூழல், சிறந்த போக்குவரத்து வசதி, வாழ்க்கைத் தரம், சிறந்த நகரக் கட்டமைப்பு உள்ளிட்ட காரணங்களால் சிறந்த நகரமாக கோபன்கேஹன் தேர்வு செய்யப்பட்டுள்ளது.

சிறந்த 20 நகரங்கள் பட்டியலில் கூட லண்டன், நியூயோர்க் நகரங்களால் இடம் பெற முடியவில்லை. முனிச் நகரம் இரண்டாம் இடம் பிடித்துள்ளது. டோக்கியோ, சூரிச், ஹெல்சிங்கி ஆகிய நகரங்கள் முதல் 5 இடங்களுக்குள் வந்துள்ளன.

# பூமியதிர்ச்சியை முன்னறிவிக்க முடியும்

பூமியதிர்ச்சியை முன்னறிவிக்கக் கூடிய தொழில்நுட்பத்தை கண்டறிவதில் தாங்கள் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தை எட்டியுள்ளதாக நாசா விஞ்ஞானிகள் அறிவித்துள்ளனர். விண்ணில் சஞ்சரிக்கும் செயற்கைக் கோள்களின் துணையுடன் பூமியின் வளிமண்டலத்தில் உள்ள அயன் அடிப்படையில் (Ionosphere) நிகழும் குழப்பங்களை அவதானிப்பதன் அடிப்படையில் பூமி அதிர்ச்சியை எதிர்வு கூற முடியும் என்று விஞ்ஞானிகள் கருத்து வெளியிட்டுள்ளனர்.



பூமி அதிர்ச்சி ஏற்படுவதற்கு முன்னர் வளிமண்டலத்தில் உள்ள அயன் படையில் பாரிய குழப்பங்கள் நிகழ்வது தொடர்ச்சியாக நாசா விஞ்ஞானிகளால் அவதானிக்கப்பட்டு வந்திருக்கிறது. கடந்த மே 12 இல் சீனாவில் நிகழ்ந்த பூமியதிர்ச்சிக்கு முன்னரும் கூட வளிமண்டல அயன்படையில் முன்னர் அவதானிக்கப்பட்டது போன்ற குழப்பங்கள் நிகழ்ந்திருந்தன என்று அவர்கள் தாங்கள் திரட்டிய தரவுகளை ஆதாரம் காட்டி செய்தி வெளியிட்டுள்ளனர்.

புவியோட்டில் உள்ள பாறைப்படைகளில் ஏற்படும் மின் அழுத்த மாற்றங்கள். வளிமண்டல அயன்படையில் தூண்டும் குழப்பங்களுக்கும் அவற்றைத் தொடர்ந்து ஏற்படும் பூமி அதிர்ச்சிகளுக்கும் இடையே தொடர்புகள் இருப்பது அவதானிக்கப்பட்டதன் அடிப்படையிலேயே நாசா விஞ்ஞானிகள் இந்த நம்பிக்கையை வெளியிட்டுள்ளனர். எது எப்படியோ பூமி அதிர்ச்சியை எதிர்வு கூறும் தொழில்நுட்பம் வளரின் பூமியதிர்ச்சியால் ஏற்படும் மனிதப் பேரவலங்கள் தடுக்கப்படும் வாய்ப்புகள் அதிகரிக்கும் என்பதை நிச்சயமாகக் கூறலாம்.

# பல மில்லியன் டொலர்களை முதலீடு செய்து சர்வதேச ரீதியில் நடத்தத் திட்டமிடப்படும் 'ருவென்ரி' - 20 சம்பியன்ஸ் லீக் போட்டிகள்!

இந்திய பிரிமியர் லீக் 'ருவென்ரி - 20' தொடரின் வெற்றியை அடுத்து சர்வதேச அளவில் கிரிக்கெட் சம்பியன்ஸ் லீக் போட்டிகளை நடத்த திட்டமிடப்பட்டுள்ளது.





இங்கிலாந்து கிரிக்கெட் சபை, ஆஸ்திரேலிய கிரிக்கெட் சபை, தென்னாபிரிக்கக் கிரிக்கெட் சபை மற்றும் ஐ.பி.எல். ஐ நடத்திய இந்திய கிரிக்கெட் சபை ஆகியன இணைந்தே இந்த தொடரை நடத்தவுள்ளன. இதில் மேற்படி நான்கு நாடுகளினதும் முதல்தர 'ருவென்ரி - 20' தொடரின் இறுதிப்போட்டிக்கு தெரிவான 2 அணிகள் வீதம் மொத்தமாக் 8 அணிகள் பங்கு பெறவுள்ளன.

இதன்படி ஐ.பி.எல். தொடரின் இறுதிப் போட்டிக்கு முன்னேறிய ராஜஸ்தான் ரோயல்ஸ் மற்றும் சென்னை சுப்பர் கிங்ஸ் ஆகிய அணிகள் இந்தியாவில் இருந்து தகுதிபெற்றுள்ளன. அதேபோன்று ஆஸ்திரேலியாவில் இருந்து வெஸ்டன் அவுஸ்திரேலிய அணியும் விக்டோரியா அணியும் பங்குபெறவுள்ளன. இதில் தென்னாபிரிக்க முதல்தர 'ருவென்ரி - 20' தொடரின் இறுதிப்போட்டிக்கு முன்னேறிய டைடன்ஸ் மற்றும் டொல்பின்ஸ் அணிகள் பங்குபெறவுள்ளன.

இந்த பருவகாலத்துக்கான இங்கிலாந்து முதல்தர 'ருவென்ரி - 20'தொடர் வரும் வியாழக்கிழமை ஆரம்பமாகவுள்ளது. இதன் இறுதிப் போட்டிக்கு முன்னேறும் அணிகள் கிரிக்கெட் சாம்பியன்ஸ் லீக் தொடரில் விளையாட தகுதி பெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. எனவே இம்முறை இங்கிலாந்து முதல் தர போட்டிகள் சூடு பிடிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

ஆரம்பிக்கப்படவுள்ள கிரிக்கெட் சம்பியன்ஸ் லீக் போட்டியில் வெற்றிபெறும் அணிக்கு 5 மில்லியன் அமெரிக்க டொலர்கள் பரிசாக வழங்க திட்டமிடப்பட்டுள்ளதாக தெரியவருகிறது. இந்த போட்டி தொடர் செப்ரெம்பர் மாத இறுதியில் அல்லது ஒக்ரோபர் மாத ஆரம்பத்தில் இந்தியா அல்லது டுபாயில் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது. மொத்தம் 10 நாள்களைக் கொண்ட இந்த தொடரில் 15 போட்டிகளை நடத்த முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுவருகிறன.

எனினும் இந்த தொடர் குறித்த இறுதி முடிவு இன்னும் எடுக்கப்படவில்லை. இந்திய, இங்கிலாந்து, ஆஸ்திரேலிய மற்றும் தென்னாபிரிக்க கிரிக்கெட் சபைகள் கூடி இது குறித்த பேச்சுவார்த்தையில் ஈடுபடவுள்ளன.

இதன்போது பல சிக்கல்களுக்கு அனைத்து நாட்டு கிரிக்கெட் சபைகளும் தீர்வுகாணவேண்டி ஏற்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. குறிப்பாக இரண்டு அணிகளில் விளையாடும் வீரர்கள் எந்த அணிக்காக சம்பியன்ஸ் லீக் போட்டியில் அனுமதி அளிப்பது என்ற கேள்விக்கு தீர்வு காணவேண்டி ஏற்படும். உதாரணத்துக்கு ஆஸி. மத்திய வரிசை துடுப்பாட்ட வீரர் மைக்கல் ஹஸே சம்பியன்ஸ் லீக்குக்கு தெரிவாகியுள்ள வெஸ்டன் ஆஸ்திரேலியா மற்றும் சென்னை சுப்பர் கிங்ஸ் ஆகிய இரண்டு அணிகளுக்கும் ஒப்பந்தமாகியுள்ளார். அதேபோன்று மோர்னி மோர்கல் சென்னை சுப்பர் கிங்ஸ் அணிக்கும் தென்னாபிரிக்காவில் இருந்து தெரிவாகியுள்ள டைடன்ஸ் அணிக்கும் ஒப்பந்தமாகியுள்ளார்.

இதனிடையே இந்திய கிரிக்கெட் சபையால் தடை விதிக்கப்பட்ட இந்தியன் கிரிக்கெட் லீக் போட்டிகளில் விளையாடிவரும் விக்ரம் சொலங்கி, ஸ்டுவட் லோ, நில் ஓபிரைன் மற்றும் போல் நிக்ஸன் போன்ற வீரர்கள் சம்பியன்ஸ் லீக் போட்டியில் பங்குபெற தகுதிபெறும் பட்சத்தில் அது குறித்து இந்திய கிரிக்கெட் சபை என்ன தீர்மானம் எடுக்கும் என்ற சிக்கலும் ஏற்பட்டுள்ளது.

இதுமட்டுமல்லாது கிரிக்கெட் விளையாடும் மற்றைய முன்னணி நாடுகளான மேற்கிந்திய தீவுகள், நியூஸிலாந்து, இலங்கை மற்றும் பாகிஸ்தான் போன்ற நாடுகள் குறித்து என்ன தீர்வு காணப்படப்போகிறது என்ற கேள்வியும் எழுப்பப்படலாம் என நம்பப்படுகிறது.

எனவே, கிரிக்கெட் சம்பியன்ஸ் லீக் ஆரம்பமாவதற்கு முன்னரே அது குறித்த பேச்சுவார்த்தை சூடுபிடிக்கும் என நம்பப்படுகிறது.

### கிரிக்கெட்டில் கொட்டும் பண மழை

பிரபல அமெரிக்க கோடீஸ்வரரான சர் அலன் ஸ்டான்போர்ட் கிரிக்கெட் பக்கம் தமது பார்வையை திருப்பியுள்ளார். இதன்படி இங்கிலாந்து அணிக்கும், மேற்கிந்திய வீரர்களை உள்ளடக்கிய கரீபியன் ஓல் ஸ்டார் அணிக்கும் இடையிலா 'ருவென்ரி - 20' கிரிக்கெட் தொடர் ஒன்றை நடத்த திட்டமிட்டுள்ளார். 5 போட்டிகளை கொண்ட இந்த தொடர் அன்டிகுவாவில் நவம்பர் 1 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது.

### ஐ.பி.எல். போட்டிகளில் பங்கேற்க இங்கிலாந்து வீரர்களுக்கு அனுமதி

இந்தியன் பிரிமியர் லீக் 'ருவென்ரி - 20' கிரிக்கெட் தொடரில் பங்கேற்க இங்கிலாந்து வீரர்களுக்கு இங்கிலாந்து மற்றும் வேல்ஸ் கிரிக்கெட் சபை அனுமதியளித்துள்ளது.

2009 ஆம் ஆண்டு ஐ.பி.எல். போட்டிகளில் 10 நாள்கள் விளையாட இங்கிலாந்து கிரிக்கெட் சபை அனுமதியளித்துள்ளது.

இருப்பினும் தற்போதைய இங்கிலாந்து கிரிக்கெட் அணிப் பயிற்சியாளர் மூர்ஸிடம் கலந்தாலோசித்த பிறகே இந்த அனுமதி வழங்கப்படுமென்று தெரிகிறது.

முன்னதாக ஆஷன் தொடர் போன்ற முக்கிய தொடர்களின் போது வீரர்கள் காயத்தினால் விளையாட முடியாமல் போகலாம் என்ற காரணத்தினால் இங்கிலாந்து வீரர்களுக்கு ஐ.பி.எல்.இல் பங்கேற்க அனுமதி வழங்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

### ஐ.பி.எல் போட்டிகளில் ஏலத்தொகை மாற்றப்படாது

ஐ.பி.எல்.போட்டிகளில் வீரர்களைத் தேர்வு செய்வதற்கு அணிகள் செலவு செய்யக்கூடிய ஆகக் கூடிய சம்பளத் தொகைக்கான வரம்பு எல்லை தொடருமென்று ஐ.பி.எல்.தலைவர் லலித் மோடி கூறியுள்ளார்.

இந்திய கிரிக்கெட் சபை ஏற்படுத்தியுள்ள ஐ.பி.எல். சார்பில் 20 ஓவர் போட்டிகள் நடத்தப்பட்டு பெரும் வெற்றி பெற்றுள்ளன.

இந்தப் போட்டிகளில் 8 நகரங்களை சேர்ந்த அணிகள் பங்கேற்றன. ஒவ்வொரு அணியும் தங்களுக்கான வீரர்களை ஏல முறையில் தேர்வு செய்தன. ஒவ்வொரு அணியும் வீரர்களை ஏலமெடுக்க 5 மில்லியன் டொலர்களை மட்டுமே பயன்படுத்தலாமெனக் கட்டுப்பாடு விதிக்கப்பட்டது. அடுத்த ஆண்டு நடைபெறவுள்ள போட்டியின் போது இந்தக் கட்டுப்பாடு நீக்கப்படலாமெனக் கூறப்பட்டது.

இதன் காரணமாக ஒரு அணி தான் விரும்பும் வீரர்களை எவ்வளவு சம்பளம் கொடுத்து வேண்டுமானாலும், அமர்த்திக் கொள்ளும் நிலை ஏற்படுமெனக் கருதப்பட்டது.

இதனால், மோசமான விளைவுகள் ஏற்படலாமென்றும் அஞ்சப்பட்டது. இந்த நிலையில் ஐ.பி.எல்.தலைவர் லலித் மோடி, சம்பள வரம்பு எல்லை தொடருமென்று கூறியுள்ளார்.

வீரர்கள் மூன்றாண்டுக்கு ஒப்பந்தம் செய்யப்பட்டிருப்பதாகவும், அதில் எந்தவித மாற்றமுமில்லையென்றும் லலித் மோடி கூறியுள்ளார்.

## கோடீஸ்வரர்களின் பார்வை இப்போது கிரிக்கெட் பக்கம் திரும்புகின்றது

இதில் என்ன ஆச்சரியம் என்கிறீர்களா? இதன் பரிசுத்தொகையை கேட்டால் வாயடைத்துப் போவீர்கள். இந்த போட்டிக்கான மொத்த பரிசுத் தொகை 20 மில்லியன் அமெரிக்க டொலர்களாகும்.

(இலங்கை நாணயப்படி 200 கோடி ரூபா) கிரிக்கெட்டில் யாரும் இந்த அளவு பரிசுத் தொகை வழங்கியதில்லை. இதில் ஒரு அணி வெற்றிபெற்றால் அந்த அணியில் ஆடும் 11 வீரர்களுக்கும் தலா ஒரு மில்லியன் டொலர்கள் வீதம் உறுதியாக கிடைக்கும். அணியில் இடம் பெறாத வீரர்களுக்கு ஒரு மில்லியன், அணி நிர்வாகத்துக்கு ஒரு மில்லியன் மற்றவை இங்கிலாந்து, மேற்கிந்திய கிரிக்கெட் சபைகள் பகிர்ந்துகொள்ளும். ஆனால் தோற்கும் அணிக்கு பரிசு கிடையாது. வெறுங்கையோடு திரும்பவேண்டியதுதான்.

லண்டன் லோட்ஸ் மைதானத்தில் கடந்த 11 ஆம் திகதி நடந்த விழாவில் போட்டியில் வழங்கப்படும் பரிசுத்தொகை நிருபர்கள் மத்தியில் காட்டப்பட்டது. நிகழ்ச்சியில் அலன் ஸ்டான்போர்ட், மேற்கிந்திய முன்னாள் விவ் ரிசசட்ஸ் உட்பட பலர் கலந்துகொண்டனர். இந்த கிரிக்கெட் தொடர் தொடர்ந்து 5 ஆண்டுகளுக்கு நடத்தப்படும் என்று இந்த விழாவின்போது ஸ்டான்போர்ட் அறிவித்தார். இதற்காக அவர் மொத்தமாக முதலீடு செய்த தொகை 100 மில்லியன் அமெரிக்க டொர்கலாகும்.

டிலான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வேதாகமக் கல்லூரி

புரொட்டஸ்தாந்து சீர்திருத்த மூப்பராட்சி சபையின் கல்லூரி 2008 இற்கு A/L படித்த புதிய மாணவர்களைக் கிறிஸ்தவ சுவிஷேச பணிக்கு எம்மோடு படிக்க அழைக்கின்றோம். உங்களைப் பற்றிய விவரத்துடன் உங்கள் திருச்சபை போதகரின் கடிதத்துடன் தொடர்புகொள்ளவும்.

**The Director:-**
**Geneva Institute, Boswell Place, Colombo - 6. Tell 011- 2723878**

(சி-553190)



## Singapore Immigration இல் தெரிவு செய்யப்படும் மாணவர்கட்கு குறைந்த செலவில் சிங்கப்பூரில் உயர்கல்வி

நீங்கள் சிங்கப்பூரில் உயர்கல்வி கற்க விரும்புகிறீர்களா? 30.06.2008 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்கவும். விண்ணப்பத்தின் போது எந்தப் பணமும் செலுத்த வேண்டியதில்லை.

தொடர்பு: Study in India (0779905694)
*பொன்னாலை வீதி,*
*சீரணி சண்டிலிப்பாய்.*



## திருமண சேவை

'தரமான திருமணங்களே' வேல்அமுதனின் தாரக மந்திரம்! இலட்சியம் நிறைவேறத் தங்களின் ஒத்துழைப்பை வேல் அமுதன் எதிர்பார்க்கின்றார்! மேலதிக விவரங்களுக்கு திங்கள், புதன், வெள்ளி மாலைவேளைகளில் சுயதெரிவு முறை முன்னோடி தனிநபர் நிறுவுநர், [illegible]த்த புகழ்பூத்த சர்வதேச தரத்திலான திருமண ஆற்றுப்படுத்துநர் குரும்பசிட்டியூர், மாயெழு வேல் அமுதனுடன் தொடர்புகொள்க! (சி/553180)

*தொ.பே.: 2360488, 2360694, 4873929.*


## தமிழ் அணங்குக்கு....

(09 பக்கத் தொடர்ச்சி)

அறத்துப்பாலில், இல்லறம் பற்றி இல்வாழ்க்கை தொடக்கம் புகழ் வரை இருபது அதிகாரங்களும், துறவறத்தில் அருளுடைமை தொடக்கம் அவா அறுத்தல்வரை பதின்மூன்று அதிகாரங்களும், பொருட்பாலில் எழுபது அதிகாரங்களும், காமத்துப் பாலில் இருபத்தைந்து அதிகாரங்களும், ஊழ் என ஓர் அதிகாரமும் அணு ஆற்றல் மிக்க குறட்பாக்களால் பாடியுள்ளார்.

வையகத்தில் வாழ்வாங்கு வாழ்வதற்கும் இன்பம் அனுபவிப்பதற்கும் பொருள் தேவை. அதனால் பொருட்பாலில் பொருள் தேடுவதற்கு உதவும் கல்வி அறிவு, நட்பு, நல்லொழுக்கம், செம்மையான அரசு என்பவற்றைப் பற்றி விளக்கினார்.

அவ்விதம் பொருள் தேடுவது அறவழியிலே நடைபெறவேண்டுமென்பதையும் அப்பொருள் தனக்கு மாத்திரமன்றி தென்புலத்தார், தெய்வம், விருந்து, சுற்றம் என்ற மற்றைய நால்வருக்கும் பயன்படவேண்டும் என்றும் சொல்லியுள்ளார்.

மேலும் பிரம்மச்சாரி, வானப் பிரஸ்தான், சந்நியாசி ஆகியவர்களுக்கும் இல்வாழ்வான் துணையாக நிற்க வேண்டும் என்று கூறினார். மற்றும் துறந்தார்க்கும் துறவாதவர்க்கும் இரந்தார்க்கும் இல்வாழ்வான் என்பான் துணை என்றார். எல்லாவற்றிற்கும் மேலாக நன்மக்களைப் பெற்று வளர்த்து நல்ல சமுதாயத்தைக் கட்டியெழுப்பும் பணியும் இல்லறத்தானையே சேருகிறது. அதனாலே இல்லறத்தை நல்ல முறையில் கைக்கொண்டால் துறவறத்தில் நின்று தேடக்கூடிய மறுமை இன்பத்தையும் பெறலாம் என்ற விதமாகப் பாடியுள்ளார்.

*"அறத்தாற்றின் இல்வாழ்க்கை ஆற்றின் புறத்தாற்றிற்*
*போஒய்ப் பெறுவ தெவன்"*

என்பது அவர் வாக்கு.

இவ்விதமாக, நாலடியாரும் திருக்குறளும் மக்கள் வாழ்க்கை முறையில் அறவழியிலே பொருள் தேடவும், அப்பொருளை தமக்கும் பிறர்க்கும் பயனுடையதாக்கவும் அறிவுரைகூறி வழிகாட்டுகின்றன.

ஆதலால் நாலும் இரண்டும் சொல்லுக்கு உறுதி மாத்திரமின்றி வாழ்க்கைக்கும் ஆற்றுப்படுத்துகிறது. எனவே நாலும் இரண்டும் ஆறு என்று கூறுவதிலும் ஓர் அழகு, நயம் இருக்கின்றது எனக் கூறலாம். நாலு இரண்டு, ஆறு என்பன எண்ணுமாகி எழுத்துமாகி நிற்பது மிகவும் பொருத்தமானதே. ✱


# STUDY IN EASTERN EUROPE
# MEDICINE & ENGINEERING




Group of Sri Lanka Students at Vitebsk State Medical University (Belarus)

**Belarus இல் உள்ள மாநில பல்கலைக்கழகங்களில் அனுமதி உத்தரவாதம்**

- இலங்கை மருத்துவசபை, உலகசுகாதார ஸ்தாபனம், ஜி.எம்.சி.பிரித்தானியா, அமெரிக்கா மற்றும் 150 நாடுகளில் அங்கீகாரம் பெற்றது.
- உலக சுகாதார ஸ்தாபனத்தால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகங்களில் இருந்தும் இடமாற்றம் பெற ஆவணம் செய்யப்படும்.
- 200 மாணவர்களுக்கு மேற்பட்டவர்களின் பட்டியலைப் பார்வையிடலாம். அவர்கள் கூறும் கருத்துக்களைப் பரிசீலிக்கலாம்.
- மருத்துவத்துறையில் PhD/ சிறப்பு கற்கை.
- ஜூன் 15ஆம் திகதி முதல் குழு புறப்படும்.

**விஸா - 100% உத்தரவாதம்**

பதிவுகளுக்கும் தகவல்களுக்கும் 0773017883

**PATHE ACADEMY**
PEOPLE'S ACADEMY FOR TERTIARY AND HIGHER EDUCATION

**Head Office**
37, School Lane (Entrance from Duplication Rd.) Colombo 03.
Tel:5377752, 2502012, 2591271

**Overseas Student Placement Department**
111-1/2, Maya Avenue, Colombo-6.
Tel:0112586418

www.patheacademy.org


## சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம், ஜூன்15

உடுப்பிட்டி சந்திரசேகர வீரபத்திர சுவாமி ஆலய வருடாந்த பெருந்திருவிழா கடந்த 3ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது.

நாளைமறுதினம் செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்குத் தேர்த்திருவிழாவும் மறுநாள் தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும். (203)


✱ ✱ ✱

மிருசுவில் கொட்டிகைப்பதி கோயிற்குளம் கண்ணகை அம்பாள் ஆலய வருடாந்தப் பெருந்திருவிழா கடந்த 9ஆம் திகதி தொடக்கம் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெற்று வருகிறது.

நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை தேர்த்திருவிழாவும் மறுநாள் தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும். (203-131)


# IELTS

Essential English Language examination for higher studies, work or migration purposes in uk, Australia, New Zealand, Canada, USA, etc.



**COURSE SCHEDULE**

| | Saturday & Sunday |
|---|---|
| Duration | 10 weeks |
| Time | 08.00am - 11.00 am |
| Commencement | 21st June 2008 |

Latest IELTS material from UK
Guaranteed results
Best Lecturers
Convenient Location

- வகுப்பிலே சேர்ந்து Course முடிவடைந்தாலும் பரீட்சை எடுக்கும் வரை கல்லூரியில் வந்து Listening Practice செய்ய முடியும். அத்தோடு Past Papers பயிற்சியும் செய்து அதி உயர் தரம் வந்த பின் பரீட்சையை எழுதலாம்.
- IELTS பரீட்சைகள் ஒவ்வொருமாதமும் இரண்டு திகதிகளில் BRITISH COUNCIL, COLOMBO இல் நடைபெறும். எமது நிலையத்தின் மூலம் பரீட்சைக்கு விண்ணப்பிக்க முடியும். இங்கிருந்தே Admission Card மற்றும் ஆவணங்களை எடுத்துச் செல்லலாம்.

**வகுப்புக்கள் 21.06.2008 இல் ஆரம்பம்.**

**BRITISH COLLEGE OF ENGLISH**
143,Adiyapatham Road, Thirunelvely.
T.P: 0602216027



## உடன் தேவை

கொழும்பில் இயங்கும் தனியார் நிறுவனம் ஒன்றுக்கு கொழும்பு வீதிகளில் நன்கு பரிச்சயமுள்ள ஓட்டோ சாரதி தேவை. சாரதி அனுமதிப்பத்திரம் மற்றும் சுய விவரக்கோவையுடன் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி

83D,ஹம்டன் ஒழுங்கை,
கொழும்பு - 6
011 2366042 (சி-553311)



## STUDY IN INDIA @ Brindavan College

affiliated to **Bangalore University**

B.Sc.
B.B.M.
B.C.A.
B.Com

Join with 2 A/L Passes
Courses to commence in July

Free Seminar & Spot Admission
ஜூன் 21 ஆம் திகதி மு.ப.10 மணி - கொழும்பு ஹில்ரன்
**For Details Contact : 0777-317043**
Company Secretarial Services (Pvt) Ltd.



## வீடு வாடகைக்கு

நாயன்மார் வீதி, நல்லூரில் இரண்டு படுக்கை அறைகள் கொண்ட சகல வசதிகளுடன் கூடிய வீடு வாடகைக்கு உண்டு.

தொடர்பு: A.பிரதீபன்,
*141/1, பிரதான வீதி,*
*(பஸ்ரியன் சந்திக்கு அருகில்)*
*யாழ்ப்பாணம்.* (75241)



## எம்புறோடிங் ரை



69.00 ரூபாய்

எஸ் . எஸ். யசோதரன் ஆட்ஸ்
[illegible] கோவில் வீதி, நல்லூர்



# ZOA REFUGEE CARE

## Can you meet the challenges of working in conflict-affected areas?

Since commencing operations in Sri Lanka in 1995, ZOA Refugee Care continues to be a field-based rehabilitation and emergency response organisation. The Mission of ZOA Refugee Care Sri Lanka is to support refugees, internally displaced people, returnees and other Sri Lankans affected by conflict or natural disaster in their transition from conflict to peace, from insecurity to stability, from relief to development and from dependence to self-reliance. Currently ZOA operates in the districts of Anuradhapura, Mannar, Trincomalee, Jaffna, Batticaloa, Kilinochchi, Mullaitheevu and Ampara.

### Deputy Programme Manager (National), Vanni Programme

(Based in the Vanni - reporting to the Programme Manager)

**Main Responsibilities**

Assist the Program Manager in the following areas of operation:

- Management of the ZOA Programme in the Vanni.
- Formulation and implementation of the Programme Plan.
- Supervision and coaching of the administrative, financial and programme staff.
- Any other tasks assigned by the Program Manager.

**Qualifications**

- 3 years experience at Programme Level, 2 years of which should have been in Management & Coordination.
- Preferably a degree / diploma in Social Science / Project Management.
- Knowledge of the humanitarian situation in the North and East and humanitarian standards.
- Fluency in English and Tamil. Knowledge of Sinhala is a plus.
- Computer literacy with skills in Microsoft Office packages.

**ZOA offers a competitive package in line with International NGO Standards.**

Please send in your applications including an explanation of your suitability and motivation for the post, with complete bio-data and the names and contact numbers of two non related referees on or before 1st July 2008 to the following addresses on the right (indicate the position on the top left hand corner of the envelope or the e-mail)

**Only short listed candidates will be notified.**

Human Resources Officer
**ZOA Refugee Care Sri Lanka**
136/2, Isipathana Mawatha, Colombo 05.
Tel : (011) 4513091 E mail: jobs@zoasrilanka.org


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறிவுசார் சமூகம் எம்மத்தியில் தோன்றுவதற்கு வாசிப்புக் கலாசாரம் தோற்றம் பெறவேண்டும்

## இளைய சமுதாயத்தை ஆக்கபூர்வமான வாசிப்புக்கு வழிப்படுத்திய நூல்வேனில் புத்தகக் கண்காட்சி

**தகவல்** தொடர்பாடல் தொழில்நுட்பத்தின் உச்ச வளர்ச்சி காரணமாக அதன் ஆதிக்கத்துக்குள் உள்ளமிழ்ந்ததாக உலகச்



சூழல் மாறிவிட்டது. ஒலி, ஒளிச் சேர்க்கையினால் உருவான காண்பிய ஊடகங்களே இவ்வகையில் அதிகம் முக்கியத்துவம் பெற்றுள்ளன.

அபிவிருத்தி அடைந்த நாடுகளில் காண்பிய ஊடக ஆதிக்கம் ஓரளவு ஆக்கபூர்வமானதாகத் திசைப்படுத்தப்படும்போதும், அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளில் அவ்வாறான நிலை இருக்கவில்லை.

புராண படனமும் செவிவழிக் கதைகளுகமாகக் கடத்தப்பட்டு வழி வந்த நமது அறிவுக் கையளிப்பு அச்சுரூபமாக ஆரோக்கியமான நிலையை எய்தும் சூழலில்தான் காண்பிய ஊடகங்களின் புழக்கம் ஏற்பட்டது.

செய்மதித் தொடர்பாடலின் வளர்ச்சி தமிழ்நாட்டில் எண்ணற்ற செய்மதித் தொலைக்காட்சி சேவைகளை உருவாக்கிவிட்டது. கட்சிக்கொன்று, வியாபார நிறுவனத்துக்கொன்று, நடிகருக்கொன்று எனத் தெருவோர வியாபாரமாக மலினப்படுமளவுக்கு தொலைக்காட்சிகள் உருவாகி மக்களை, அவர்களது சிந்தனைகளை அலைக்கழிக்கத் தொடங்கிவிட்டன. இதன் தாக்கம் இங்கும் அதிகளவில் எதிரொலிக்கின்றன.

**நேரடி வாசிப்பின்மீது தாக்கம்**

மக்கள் சிந்தனைகளைத் தடம் மாற்றும் மெகா சீரியல், சினிமா விடயங்களே இத் தொலைக்காட்சிகளில் அதிகம் இடம்பெறுகின்றன. இந்நிலைமையானது நேரடியாக வாசிப்பின் மீது தாக்கத்தைச் செலுத்துகின்றது. வாசிப்புப் பழக்கமின்மை இன்று பிரதான பிரச்சினை யாக உருவெடுத்துள்ளது. 1992 ஆம் ஆண்டு கல்விச் சேவை ஆணைக்குழுவின் துரித நடவடிக்கைச் செயலணி கல்விப் பிரச்சினைகள் தொடர்பாக ஆராய்ந்து வெளியிட்ட அறிக்கையிலும் இவ்விடயம் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

''கல்வித் துறையின் எல்லா மட்டங்களிலும் கல்வியின் மதிப்பளவிலும் தரத்திலும் பாரிய வீழ்ச்சி காணப்படுகின்றது. எமது கல்விக் கலாசாரத்தில் நூல் நிலையங்களின் பாவனை, வாசிப்புப் பழக்கம் என்பன முற்றாக அருகிவரும் நிலை காணப் படுகின்றது'' என அவ்வறிக்கையில் குறிப் பிடப்பட்டிருந்தது.

**அறிவுசார் சமூகம் உருவாகுமா?**

கல்விச் சமூகத்திலும் ஏனைய தொழில்களிலும் பரவலாக அவதானிக்கப்பட்டு வரும் விடயமிது. இது நேரடியாக எமது சமூகத்தின் ஒட்டுமொத்த அறிவாற்றல் தொடர்பில் கேள்வியெழுப்பப்படவேண்டிய விடயமாகும். எம்மிடமிருந்து ஓர் அறிவுசார் சமுதாயம் இனி உருவாகுமா? என்ற நியாயமான வினாவை மேலுள்ள ஆய்வறிக்கையிலிருந்து நாம் கேட்டுக்கொள்ளலாம்.

பாடசாலை நூலகங்களைக் கற்றல் வள நிலையங்களாக வளர்த்தெடுக்கும் முயற்சிகள் முன்மொழியப்பட்டு ஓரளவு நடைமுறைப்படுத்தப்பட்டும் வருகின்றன. பிரதேச நூலகங்களும் இது தொடர்பில் கவனம் செலுத்தி வருகின்றன.

ஆயினும் நுகர்வேன் - பயன் கொள்வோன் - காட்டும் அக்கறையிலேயே எல்லாம் தங்கியுள்ளது. தமது கல்வி மற்றும் தொழிற் தேவைக்கமையக் கற்பதோடு பலரது வாசிப்பு முற்றுப்பெற்று விடும் பரிதாபனமான சூழல் இங்குள்ளது.

இந்நிலையில் நாம் ஒரு புத்தகப் பண்பாட்டைக் கட்டியெழுப்ப வேண்டியது அவசியமாகும். ஒவ்வொருவரும் மாதாந்தம் அறிவுபூர்வமான, தேர்ந்த நூல்களைச் சொந்தமாக்கிக் கொள்ளவேண்டும். நூல்கள்

### நூல்கள் நிறைந்த சிறுகுடிசை எப்போதும் மாளிகை போன்றது

நிறைந்த சிறுகுடிசை மாளிகை போன்றது என்றொரு மேற்குலகப் பழமொழியுள்ளது. நூல்களால் நாம் எமது வீட்டை நிரப்பும்போது வீட்டிலுள்ளோர் இயல்பாகவே வாசிப்பின்பால் நாட்டம் கொள்வர். எனவே ஒரு வாசிப்புக் கலாசாரம் தோற்றம் பெறும். அது ஒரு அறிவுசார் குடும்ப உருவாக்கத்துக்கும் அதன் வழியாக அறிவுசார் சமூக உருவாக்கத்துக்கும் அடித்தளமிடும்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நுண்கலைத் துறையினர் மற்றும் அதன் அங்கமான கலை வட்டம் ஆகியவற்றின் அனுசரணையுடன் கடந்த இரு வாரங்களாக நூல்வேனில் என்ற பெயரில் புத்தகக் கண்காட்சியொன்று பல்கலைக்கழக நூலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. இதில் திருநெல்வேலி 'புக்லாப்' புத்தகக் கூடத்தினர் தமது நூல்களைக் காட்சிப்படுத்தியதுடன் விற்பனையும்

**எஸ்.ஸ்ரீகுமரன்**

இடம்பெற்றது.

**சமூகப் பெறுமதிமிக்க பணிகள்**

யாழ்.பல்கலைக்கழகத்தின் சமூகப் பயன்மிகுந்த, சமூக மயப்பாடான செயற்பாடுகள் பலவற்றில் நுண்கலைத் துறையும், கலை வட்டமும் அதிகம் பங்களித்துள்ளன. உலக நாடகவிழா, நுண்கலைத்துறைக் கண்காட்சி, கலைத்துவ படக்காட்சி, கலைவட்டக் கருத்தரங்குகள், வரலாற்று முக்கியத்துவமும் பண்பாட்டுப் பெருமையும் மிக்க அடையாளங்களைக் கண்டறிந்து ஆவணப்படுத்தல் எனப் பதிவு செய்யப்படவேண்டிய பல சமூகப் பெறுமதிமிக்க பணிகளை அவை ஆற்றிவருகின்றன.

'புக்லாப்' நிறுவனம் நீண்டகாலமாக தேர்ந்த நூல்களை இறக்குமதி செய்து விநியோகித்து வருகின்றது. அறிவுசார் சமூக உருவாக்கத்துக்கு உதவும் கலைத்தரமும் அறிவுசார் விடயங்களும் கொண்ட நூல்களைத் தேர்ந்து எடுத்துவந்து அளிக்கும் பணியில் ஈடுபட்டுள்ளது. குறிப்பாக, சிறு சஞ்சிகைகள், அருந்தலான நூல்கள், தேர்ந்த இலக்கியப் படைப்புகள் ஆகியவற்றை இறக்குமதி செய்து விநியோகிப்பதிலும் இங்குள்ள படைப்பாளிகளது நூல்களை ஏனைய பிரதேசங்களுக்கு விநியோகிப்பதிலும் இந்நிறுவனம் ஈடுபட்டுள்ளது.

அவ்வகையில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நூலகத்தில் நடைபெற்ற இக்கண்காட்சி முக்கியமானதாகும். பாடசாலைகள், பொதுநூலகங்கள் ஆகியவற்றுக்கும் இக்கண்காட்சி பற்றி அறிவிக்கப்பட்டு அந்நிறுவனங்களும் இதனைப் பார்வையிட்டன. இக்கண்காட்சியில் இலகு வாசிப்புக்கு உதவும் சனரஞ்சக சஞ்சிகைகளோ, நூல்களோ இடம்பெறாமை மிக முக்கியமானதாகும். ஆக்கபூர்வமான வாசிப்பின்பால் இளைய சமூகத்தை வழிப்படுத்துவதற்கு இத்தகைய பொறுப்புணர்வு மிக அவசியமாகும்.

அவ்வகையில் நுண்கலைத் துறையினர் மற்றும் கலைவட்டத்தினரையும் புக்லாப் நிறுவனத்தினரையும் பாராட்டலாம். இது போன்ற கண்காட்சிகள் பரவலாக இடம்பெறுவது எமது மாணவருக்கு மட்டுமன்றி ஏனையோருக்கும் அதிகம் பயனுள்ளதாகும். ✱

---

# யுத்தத்தை எமது எதிர்காலச் சந்ததிக்கும்...

(3 ஆம் பக்கத் தொடர்ச்சி)

அரசின் யுத்த முன்னெடுப்புக்கள் மற்றும் அவ்விடயம் தொடர்பான பிரசார உத்தி கள் காரணமாக சமூகங்கள் மத்தியில் யுத்தத்தின் மீது நம்பிக்கை கொள்ளும் மனநிலை விரிவடைந்து வருகின்றது. இது விடுதலைப் புலிகள் தரப்பு மற்றும் தென்பகுதி சிங்கள சமூகம் ஆகிய இரு தரப்புக்களதும் தவறான போக்காகும். யுத்தத்தின் மூலமே கடைசி முடிவை எட்ட இயலும் என்ற நம்பிக்கையை இவ்விரு தரப்புக்களும் தம் மத்தியில் வளர்த்துக் கொண்டுள்ளதாகத் தென்படுகிறது. அத்தகைய மனப்போக்கை வளர்த்து விடும் விதத்தில் தூண்டிவிடும் நோக்கில் சில தரப்புக்கள் செயற்பட்டு வருவதை நாம் மறந்துவிடக்கூடாது. கடுங்கோட்பாட்டுப் போக்குடைய பௌத்த பிக்குகள் அணியொன்று, சந்தர்ப்பவாத முனைப்பில் கடுங்கோட்பாட்டு நிலைப்பாட்டைப் பேணும் அரசியல் வாதிகள் மற்றும் அரசியல் கட்சிகள் இத்தகைய போக்கைக் கையாள்வதை அவதானிக்க முடிகிறது. அது மட்டுமன்றி யுத்தத்தின் மூலம் வயிறு வளர்க்கும்-தத்தமது வசதி வாய்ப்புக்களை உயர்த்திக் கொள்ள விழையும் தரப்பினரும் நாட்டின் பொதுமக்கள் மத்தியில் யுத்த உணர்வைத்தூண்டி விட திட்டமிட்டுச் செயற்பட்டு வருகின்றனர்.

இத்தகைய தரப்புக்களது எதிர்பார்ப்புக்கு அமைவாக - சாதகமாக செயற்பாடுகள் நடந்தேறுவதில்லை என்பதே உண்மையான யதார்த்தமாகும்.

**தீவிரவாதியாக எவரும் பிறப்பதில்லை**

விடுதலைப் புலிகள் அமைப்பில் இணைவதற்கோ-தற்கொலைப் போராளியாகச் செயற்படுவதற்கோ தமிழ் இளைஞர்கள் முன்வருவதேன்? என்பது குறித்து இவர்களிலெவரும் சிந்தித்துப் பார்ப்பதில்லை. எந்தவொரு நாட்டிலும் இயங்கும் தீவிரவாதத் தரப்பெதனையும் யுத்தத்தின் மூலம் முற்று முழுதாக அழித்தொழிக்க முடிவதில்லை. வேண்டுமானால் தீவிரவா தத்துக்கு எதிரான யுத்தத்தில் தற்காலிக வெற்றிகளைத் தேடிக் கொள்ள இயலும். அது முற்றுமுழுதானதொரு வெற்றியாக ஆகமாட்டாது. அத்தகைய தீவிரவாத அமைப்பொன்றின் தோற்றத்துக்குக் காரணமாகும் அடிப்படைக் காரணங்களைக் கண்டறிய முயலும் விருப்பு இச்சமூகங்களுக்கும் கிடையாது. இன்று தீவிரவாதத் தரப்புக்களின் உறுப்பினர் களை எந்த அளவுக்குத் தான் அழித்தொழித்து வர முடிந்தாலும், அவர்களது நடவடிக்கைகள் தொடர்ந்தும் இடம் பெறுவதற்கான காரணம் இவையேயாகும். வரலாற்றில் தீவிரவாதச் செயற்பாடுகளுக்கு முகம் கொடுக்க நேர்ந்த எந்தவொரு நாட்டிலும் தீவிரவாதத் தரப்புக்களை யுத்தத்தின் மூலம் நலிவடையச் செய்து முடக்கி வைக்க முடிந்ததேயன்றி, முற்று முழுதாகத் தீவிரவாதத்தை அழித்தொழிக்க முடிந்ததில்லை. ஆனால், தீவிரவாதத் தரப்பினரை அவர்களது நடவடிக்கைகளைக் கைவிட்டு சாதாரண நிலைக்கு மாற வைக்கும் விதத்தில் பிரச்சினையைக் கையாள்வதே பொருத்தமான செயற்பாடாக -வெற்றியளிக்கும் முயற்சியாக அமையும். பிறக்கும் போதே எவரும் தீவிரவாதியாகப் பிறப்பதில்லை என்ற உண்மையைச் சமூகங்கள் உணர்ந்து செயற்பட முன்வர வேண்டியது அவசியமாகும்.

சமூகத்தில் என்ன தவறு நேர்ந்துள்ளது என்பதைத் தேடியறிய எவரும் முன்வந்ததில்லை. இன்று நாட்டில் நிலவும் சிக்கலான-பயங்கரம் மிக்க நிலையால் முற்று முழுதாகப் பாதிப்புக்கு உள்ளாகுபவர்கள் இரு இனங்களையும் சேர்ந்த அப்பாவி வறிய பொதுமக்களே ஆவர். அல்லல்களுக்கும் துன்பங்களுக்கும் உட்பட்டுள்ள இவ்விரு இனங்களின் அப்பாவி-வறிய பொதுமக்கள் தரப்புக்களது துன்பங்கள் துயரங்கள் குறித்து அக்கறை செலுத்திச் செயற்படும் அரசியல் கட்சிகளோ-அரசியல் வாதிகளோ இவ்விரு இனங்களிலும் கிடையாது. இந்த அளவுக்கு தென்பகுதி சிங்கள அரசியல் கட்சிகளும் சரி, வட பகுதி தமிழ் அரசியல் கட்சிகளும் சரி இனவாதக் கோட்பாட்டில் மூழ்கிப்போய் விட்டுள்ளன. அதுவே இன்று இந்நாட்டின் கடும் சிக்கலுக்குக் காரணமாகி விட்டுள்ளது.

தீவிரவாதத்துக்குப் பல முகங்கள் உள்ளன. இவை வெவ்வேறு சந்தர்ப்பங்களில் வெவ்வேறான தோற்றங்களை வெளிப்படுத்துவன. தமக்கு அநியாயம் இழைக்கப்பட்டுள்ளது என்ற கருத்து தமிழ்ச் சமுதாயத்தின் மத்தியில் நிலைபெற்றுள்ளது. அத்தகைய உணர்வின் கடைசி வெளிப்பாடு விடுதலைப் புலிகள் அமைப்பினூடாக பூதாகரமாக உருவெடுத்துள்ளது. சிலவேளை இந்த யுத்தத்தில் விடுதலைப் புலிகள் அமைப்பை அழித்துவிடச் சந்தர்ப்பம் வாய்க்கக்கூடும். ஆனாலும் அது குறித்து இன்றும் நிச்சயமற்ற தன்மையே நிலவுகின்றது. ஆனால் ஒருவேளை விடுதலைப் புலிகளை அழித்தொழித்து விட முடிந்தாலும் கூட, சிங்கள சமூகத்தால் மீண்டும் தமிழ்ச் சமூகத்தின் நம்பிக்கையை ஈட்டிக் கொள்ள இயலுமா? என்பதே பிரச்சினைக்கு உரியதொன்றாகிறது. தமிழ்ச் சமுதாயம் தமது அரசியல் தலை வர்களாகச் சிங்கள சமூகத்து அரசியல் தலைவர்களை ஏற்றுக் கொள்வார்களா? என்ற வினாவுக்கு விடை காணும் வரையிலும், தீவிரவாதம் எதிர் காலத்திலும் வெவ்வேறு முகங்களில் தலைகாட்டவே கூடும்.

**யுத்தத்துக்கு எதிரானவர்களுக்கு தேசத்துரோக முத்திரை**

இந்த நிலை தொடர்ச்சியாக நீளுமானால் அதனால் எழும் சவால்களுக்கும் நாம் முகம் கொடுத்தாக வேண்டியே நேரும். ஆதலால், எமது சிங்கள சமூகம் முதலில் இந்நாட்டின் தமிழ் மக்கள் யாவருமே தீவிரவாதிகள் எனக் கருதும் மன நிலையிலிருந்து விடுபட்டாக வேண்டும். அது மட்டுமல்லாமல் நாட் டின் எந்தவொரு சமூகத் தரப்புக்கும் அநி யாயம் இழைக்கப்பட்டிருக்குமானால் அவற்றை நிவர்த்தி செய்து நேர்சீர் செய்ய முன்வர வேண்டும். நாட்டின் சகல சமூங் களையும் சமமாகப் பேணிக்காக்கும் விதத் திலான நிர்வாகக் கட்டமைப்பொன்றை நடைமுறைப் படுத்த முன்வரவேண்டும். உண்மையான ஜனநாயகவாத நடைமுறை உரிய முறையில் செயற்படுத்தப்படும் ஒரு நிலை நாட்டில் உருவாக்கப் படுதல் அவசியமாகும்.

யுத்தத்தின் மூலம் நாட்டின் இன்றைய பிரச்சினைக்குத் தீர்வுகாண இயலாது என்ற கருத்தை வலியுறுத்த முயலும் தரப்பினர் இன்று உயிர் அச்சுறுத்தல்களுக்கு உள்ளாகும் நிலையே நிலவி வருகின்றது. சமூக மாற்றமொன்று ஏற்படுத்தப்பட இயலாது போயுள்ளமைக்கான முக்கிய காரணம் இதுவே ஆகும். யுத்தத்துக்கு எதிரான கருத்தை மனதில் கொண்டிருந்தும் அதனைப் பகிரங்கமாக வெளிப்படுத்திச் செயற்பட இத் தரப்பினர் முன்வராதிருப்பதற்கான காரணம் அவர்களுக்குத்தமது உயிர்மேலுள்ள ஆசையே ஆகும். கடந்த காலத்தில் கூட, யுத்தத்தின் மூலம் பிரச்சினைக்குத் தீர்வு காண இயலாதெனக் கருத்து வெளியிட்டு வந்த தரப்பினர்கள் தேசத்துரோகிகளாக முத்திரை குத்தப்பட்டுள்ளனர். யுத்தமே பிரச்சினைக்குத் தீர்வு எனக் கூறிவரும் தரப்பினர் மட்டுமே நாட்டை நேசிப்போராக அடையாளப் படுத்தப்பட்டு வருகின்றனர். இது தென் பகுதியில் மட்டுமல்லாது வடபகுதியிலும் கூட வழக்கிலுண்டு. யுத்தத்துக்கு எதிராகக் குரல் எழுப்பியோர், புத்திஜீவிகள், ஊகவியலாளர்கள். இரு தரப்புக்களாலும் படுகொலையுற நேர்ந்தது. யுத்தம் ஆரம்பித்த வேளைமுதல் இன்று வரை மற்றொரு தரப்பினர் அதனைத் தமது வசதிவாய்ப்புக்களைப் பெருக்கிக் கொள்ள -வாழ்க்கையை உயர்த்திக் கொள்ளக் கிட்டிய வாய்ப்பாகப் பயன்படுத்தி வருகின்றனர். இத்தகைய பின்னணி காரணமாக நாட்டின் சகல சமூகங்களும் சிக்கல்களுக்கும் சிரமங்களுக்கும் உள்ளாக நேர்ந்ததுள்ளது.

தீவிரவாதத்தை ஒழிப்பதற்காக யுத்தத்தைப் பயன்படுத்த முயன்றாலும், நாட்டின் ஏனைய துறைகளில் அதனைப் பயன்படுத்த முயலக் கூடாதல்லவா? யுத்தம் இடம்பெறும் சூழல் நிலவும் நிலையில் அங்கு ஜனநாயக விழுமியங்களை உரிய முறையில் பாதுகாக்க இயலாது என்றதொரு கருத்து ஒரு சில தரப்புக்களால் நாட்டின் சமூகங்கள் மத்தியில் புகுத்தப்பட்டுள்ளது. இது ஒரு தவறான நிலைப்பாடாகும். யுத்தம் இடம்பெறும் சூழலொன்றிலேயே, ஜனநாயக நிர்வாக நடைமுறைகள் கட்டிப் பாதுகாக்கப்பட வேண்டியது முக்கியமாகும். அரசு கூறுவது போன்று மனோ ரீதியில் தீவிரவாதத் தரப்புக்களை நலிவடைய வைக்க முயல்வதானால், அவற்றை ஜனநாயக ரீதியில் மேற்கொண்டாக வேண்டும். ஆனால் இன்றோ நாட்டின் சகல தமிழ் மக்களையும் சிங்கள சமூகத்தின் எதிரிகள் ஆக்கி விடும் விதத்திலான செயற்பாடுகளே முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. நாட்டின் இரு இனத்தவர்களது மனங்களையும் வென்றெடுக்கும் வகையிலான அணுகுமுறை இன்று கைக்கொள்ளப்படவில்லை. இப்போக்குக் காரணமாக இந்த யுத்தம் எமது அடுத்த தலைமுறையிடம் கையளிக்கப்படும் அபாய நிலையே உருவாகி வருகிறது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பாதிப்புற்றோருக்கு பல்துறைசார்.......

(08 ஆம் பக்கத் தொடர்ச்சி)

### வாழ்வாதார திட்டமும் விழிப்புணர்வும்

வடமராட்சி கிழக்கு மற்றும் முல்லைத் தீவு பகுதிகளில் சுனாமியால் தொழில் உபகரணங்களை இழந்துள்ள கடல் தொழிலாளருக்கு மீன்பிடித் தொழிலை மேம்படுத்த பிளாஸ்ரிக் வள்ளங்கள், வலைகள் , இயந்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன. அல்லைப்பிட்டியில் இருந்து நாவாந் துறைக்கு இடம் பெயர்ந்தவர்களுக்கு இடம் பெயர்ந்த இடத்தில் தொழில் செய்ய 2007 இல் 17 கட்டுமரங்கள் திருத்திக் கொடுக்கப்பட் டுள்ளன.

தற்பொழுது அல்லைப்பிட்டியில் மீளக் குடியமர்ந்தவர்கள் 20 தொழிலாளருக்கு தலா முப்பதாயிரம் ரூபா பெறுமதியான வள்ளங்கள் வழங்கப்பட்டுள்ளன. இவர்களுக்கும் ஏனைய தொழிலாளருக்கும் வலைகள், உப கரணங்கள் உதவப்பட்டுள்ளன.

உப உணவு உற்பத்தியை அபிவிருத்தி செய்ய விவசாயிகளுக்கு உள்ளீடுகள் வழங்கப்படுகின்றன. இந்த வருடத்தில் மட்டும் தென்மராட்சியில் 25 கமக்காரருக்கு 43182 ரூபா பெறுமதியான விதைகள் வழங்கப்பட் டுள்ளன.

நீர் முகாமைத்துவம் , சேதனக்கூட்டுப் பசளை தயாரிக்கும் சிமெந்துக் கிடங்குகள் கட்டி வழங்கப்பட்டுள்ளன. பயிற்சிகள் நடத் தப்பட்டுள்ளன.இந்த நிகழ்ச்சித் திட்டங்கள் விவசாயத்திணைக்களம், கமநல சேவைத் திணைக்களத்துடன் இணைந்து மேற்கொள்ளப்படுகின்றன. பெண்களிடையே சிறுசேமிப்பு முயற்சி களும் ஊக்குவிக்கப்படுகின்றன.

வீட்டுத் தோட்டம் , சிறு வியாபாரம் ஆடு, கோழி, பசு போன்ற கால்நடை வளர்பு சுய தொழில் முயற்சிகள் ஊக்குவிக்கப்படுகின்றன. வாழ்வாதார முயற்சிக்கான சுழற்சி முறைக்கடனும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. கடந்த வருடம் 108 பெண்கள் சங் கத்தால் ஆறு லட்சத்து 87 ஆயிரத்து 500 ரூபா கடன் மீள செலுத்தப்பட்டுள்ளது.

### காணாமல் போனவர்களின் குடும்பங்களுக்கு

குடும்பத்தலைவர்கள், இளைஞர்கள் காணாமல் போன (101) குடும்பங்களுக்கு 5000 ரூபா வீதம் சிறு உதவிகள் வழங்கப் படுகின்றன. உயிர் அச்சுறுத்தலால் 100இற்கு மேற்பட்டவர்கள் சரணடைந்து சிறைசாலைகளில் உள்ளனர். இவர்களது வசதி கருதி யாழ். சிறைச்சாலைக்கு மின் விசிறிகளும் இணைப்புகளும் வழங்கப்பட்டுள்ளன. அங்குள்ள 10 வயது 6 வயதுக்குட்பட்ட சிறுவர்களுக்கும் குழந்தைகளுக்கும் விளை யாட்டு உபகரணங்கள் அன்பளிப்புச் செய்யப்பட்டுள்ளன.

### உளவியல் சீராக்கம்

கோப்பாயில் முதியோர் அட்டை வழங்க 3000 படிவங்கள் கொடுக்கப்பட்டன. SIYB திட்டத்தின் கீழ் ஆண்கள், பெண்களுக்கு தையல் இயந்திரம் திருத்தும் பயிற்சியும் தையல் பயிற்சியும் வழங்கப்படுகிறது. வாகனச் சாரதிகள் லைசென்ஸ் பெறுவதற்காக மூன்று லட்சம் செலவில் 21 இளைஞருக்குப் பயிற்சி வழங்கப்பட்டுள்ளது. சிறுவர் தங்ககங்களில் உள்ளவர்கள் உள வியல் பாதிப்புக்கு உட்பட்டுள்ளனர். இவர்க ளுக்குச் சீராக்கல் நிகழ்வுகள் வழங்கப்படுகின்றன.

மாற்று வலுக் குறைந்த சிறுவர்களுக்கும் நடக்க இயலாத குழந்தைகளுக்கும் 19 விஷேட இருக்கைகள் (கதிரைகள்) செய்து கொடுத்துள்ளோம். இது வைத்திய சேவை சார்ந்ததாகும். மற்றைய குழந்தைகள் போல் செயற்பட உதவும்.

### உலர் உணவு விநியோகம்

வறுமை கோட்டில் உள்ளவர்களுக்கும் (தொழிலாளர், விவசாயிகளுக்கு) சமுர்த்தி பயனாளிகளுக்கும் வழங்கப்படுகிறது. கடந்த ஆண்டு 14 588 குடும்பங்கள் பயன் பெற்றன. செடக் நிறுவன நிதி வழங்கல் மூலம் மேலும் 764 குடும்பங்கள் உதவி பெற்றன. சமுர்த்தி பயனாளிகளை உள்ளடக்கியதாக கடந்த வருடம் 23,136 குடும்பங்களுக்கு (1,05,175 அங்கத்தவர்கள்) 4 லட்சத்து 38 ஆயிரத்து 702 கிலோ உலர் உணவு வழங்கப்பட்டது.

இந்த வருடம் ஏப்ரல் வரை 11,477 குடும் பங்களுக்கு (16,9044 கிலோ.கி) உலர் உணவு வழங்ககப்பட்டுள்ளது. இதைவிட வேறு பல திட்டங்களும் செயற்படுத்தப்பட்டு கின்றன - என்றார் அவர். *

# இன்றைய ஆட்டங்கள்

யாழ்.சென்றல் விளையாட்டுக் கழகம் வீ.டி.ஜெயரட்ணசிங்கம் வெற்றிக் கிண்ணத்துக்காக நடத்தும் கிரிக்கெட் சுற்றுப் போட்டியின் முதல் சுற்று ஆட்டங்கள் இன்று யாழ்.சென்றல் கல்லூரி மைதானத்தில் ஆரம்பமாகின்றன.

இன்றைய ஆட்டத்தில் சென்றல் வி.கவும் பற்றீஸியன் வி.கவும் மோதுகின்றன.

* * *

அமரர் சந்திரகுமாரின் 12 ஆவது ஆண்டு நினைவாக அராலி திருமகள் விளையாட்டுக் கழகம் வலிகாமம் உதைப்பந்தாட்ட லீக்கின் அனுசரணையுடன் நடத்திவரும் 7 பேர் பங்கு பற்றும் விலகல் முறையிலான உதைப்பந் தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று பிற்பகல் 3.30 மணிக்குத் திருமகள் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்றவுள்ள ஆட்டங்களில் கலந்து கொள்ளவுள்ள அணிகளின் விவரங்கள் வருமாறு:

* சண்டிலிப்பாய் கல்வளை விநாயகர் வி.க 'ஏ' அணி எதிர் ஏழாலை மயிலங்காடு ஞான முருகன் வி.க. 'பி' அணி.

* அராலி சில்வஸ்ரார் வி.க. 'பி' அணி எதிர் சுதுமலை சாவற்கட்டு மகாத்மா வி.க. 'ஏ' அணி. (203-86)


* * *

யாழ்.மாவட்ட தாச்சிச் சங்கத்தின் அனுசரணையுடன் கோண்டாவில் மறுமலர்ச்சி விளையாட்டுக் கழகம் லீக் முறையில் நடத்திவரும் தாச்சிச் சுற்றுப் போட்டியில் இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு மறுமலர்ச்சி விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெறவுள்ள ஆட்டங்களில் கலந்து கொள்ளவுள்ள கழகங்களின் விவரங்கள் வருமாறு:

* சுதுமலை நாவலர் வி.க. எதிர் நவாலி சென்.றோக் வி.க.

* மயிலிட்டி ஒற்றுமை வி.க. எதிர் உடுவில் வைகறை வி.க. (203-86)

## கண்ணீர் அஞ்சலி



யாழ்.பல்கலைக் கழகத்தில் பிரதேச திட்டமிடலில் முதுகலைமாணி பட்டத்துறையில் பயிலும் சக மாணவனான சே.ஜெயானந்தன் அவர்களின் அன்புத் தந்தை

**வீரகத்தியர் சேனாதிராசா**

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தினைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடையவும் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

இணைப்பாளர், விரிவுரையாளர்கள், சக மாணவர்கள்.

*பிரதேசதிட்டமிடல் முதுகலைமாணி, யாழ்.பல்கலைக் கழகம்.* (75322)

## முன்றாம் ஆண்டு நினைவஞ்சலி



திருமதி

**துரைசிங்கம் சின்னம்மா**

மண்ணில்: 10.08.1923

விண்ணில் : 19.06.2005

திதி: பூர்வபக்க துவாதசி 15.06.2008

எம்மை வயிற்றிலும், தோளிலும் சுமந்த சுமைதாங்கியே!
மக்களனைவரையும் சான்றோராக்கி, பதவிச் சுமைதந்து
ஈன்றபொழுதில் பெரிதுவந்தீர் ஈற்றில் உமது முதுமைச் சுமையை
எம்மைச் சுமக்க வைக்க நீர் அனுமதிக்கவில்லை!
ஆனால் - உமது நினைவுச் சுமையை நாம் இறக்கி வைக்க நினைத்தாலும், எம்மால் முடியவில்லை.

*ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!*

குடும்பத்தினர்.

நிரந்தர முகவரி: "லிங்கநேய", எழுதுமட்டுவாள்.

தற்காலிக முகவரி: *மருதடி, புலோலி தெற்கு, பருத்தித்துறை.*

## மக்கள் முகம்



கடந்த 21 வருடங்களாக கொக்குவில் இந்துக் கல்லூரியில், ஆசிரியர், உப அதிபர், பிரதி அதிபர் ஆகிய பதவித்தரங்களை வகித்த எஸ்.வி.மகேந்திரன் யாழ்ப்பாணக் கல்வி வலயத்தின் உதவிக்கல்விப் பணிப்பாளராக (கணிதம்) வடக்கு மாகாணக் கல்வி அமைச்சினால் நியமிக்கப்பட்டுள்ளார்.

கல்விச் சேவையில் 30 வருடகால சேவை அனுபவம் கொண்டுள்ள இவர் க.பொ.த.உயர்தர வகுப்பு மாணவர்கள் பலருக்கு கணித பாடங்களில் உரிய வழிகாட்டி உயர்வுபெற உதவியுள்ளார்.

இவர், உரும்பிராய் கிழக்கைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான வேலாயுதம்-கண் மணி தம்பதியரின் சிரேஷ்ட புத்தினராவார்.

* * *

இதே வேளைபருத்திததுறை நீதிவான் நீதிமன்றப் பதிவாளர் எஸ்.இராஜேஸ்வரன் நீதிச்சேவை ஆணைக்குழுவினால் பதவி உயர்த்தப்பட்டுள்ளார்.

இவர் யாழ்.மேல் நீதிமன்றப் பதிவாளராக நியமனம் பெற்றிருக்கிறார்.

பருத்தித்துறை நீதிவான் நீதிமன்ற பிரதம முகாமைத்துவ உதவியாளர் எஸ்.சிவராஜலிங்கம் பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றப் பதிவாளராகப்பதவி உயர்த்தப்பட் டுள்ளார்.

## கூட்டங்கள்

யாழ்ப்பாணம்,ஜூன்15

இலங்கை செஞ்சிலுவைச்சங்கசெயற்பாடுகள் தொடர்பான பரப்புரைக் கூட்டம் இன்று ஞாயிற்றுக் கிழமை காலை 9 மணிக்கு சுன்னாகம் புனித அந்தோனியார் ஆலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இப்பரப்புரைக் கூட்டத்தில் செஞ்சிலுவைச் சங்க யாழ். மாவட்டக் கிளையின் தலைவர் பேராசிரியர்வீ.கே.கணேசலிங்கம் தலைமையிலான குழுவினர் கலந்து கொள்ளவுள்ளனர்.

* * *

மல்லாகம்பழம்பதி பிள்ளையார் ஆலய பொதுக் கூட்டம் இன்று ஞாயிற் றுக் கிழமை காலை 9.30 மணிக்கு மல்லாகம் ம.வி யில் ஏ.சி.விஜய ராஜ சிங்கம்தலைமையில் நடைபெறவுள்ளது.

## வீடு வாடகைக்கு

835, நாவலர் வீதியில் (ஸ்ரான்லி கல்லூரிக்கு அருகில்) உள்ள மாடி வீடு வாடகைக்கு உண்டு.

தொடர்பு: 021 222 6338

## தவறிவிட்டது

வடிவேலன் சிறிதேவி, தோப்புக்காடு, காரைநகர் என்னும் விலாசமுடைய தே.அ.அ. (836192281V), விசேட அ.அட்டை ஆகியன சங்கானை சந்தைக்கும் தபாற்கந்தோருக்கும் இடையில் 07.06.2008 தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து நீதிவான் முகாம், சங்கானை அல்லது பிரதீப் புத்தகசாலை, பிரதான வீதி, சங்கானை (தபாற்கந்தோருக்கு முன்பாக) என்னும் விலாசத்தில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (சி/553329)

## கோழிக்குஞ்சு விநியோகம்

BIHIRA புறொயிலர் குஞ்சுகள் 16.06.2008 (திங்கட்கிழமை) விநியோகிக் கப்படும். பதிவுகளை மேற்கொள்ளவும்.

* **ராஜீன்** - *நவாலி வீதி, ஆனைக்கோட்டை.*

* **சிற்றி பாம் ரேடர்ஸ்** - *கல்வியங்காடு.*

* **P.ரவி** - *தபாற்கந்தோர் வீதி, சாவகச்சேரி.*

* **மதுரா** - *ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.*

* **திருமகள் களஞ்சியம்** - *சிவலிங்கப் புளியடி.* (75323)

## ORENDAL AQUARIUM
## ஒறின்டல் அக்கூறியம்

வளர்ப்பு கலர் மீன்கள் (சகல விதமான), ஆபிரிக்கன் குருவிகள் கோல்டியன், கொக்கட் (கொண்டைக் குருவிகள்) மற்றும் வளர்ப்பு இன புறாக்கள் (மொடினா இங்கிலிஸ் நங்ஸ், றைசர், கோமர், பான்ரெயில், யொக்கப்பியன் (கறுப்பு), நங்ஸ், வியூட்டிகோமர், கறணம், சைனா, ஒளள் மற்றும் பல இனங்கள்.

மற்றும் இறைச்சிக் கோழிகள் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.

தொடர்புகளுக்கு:

**மல்ரியாம்,**

61, [illegible]

யாழ்ப்பாணம்.

தொ.பே.இல. 0774007202 (75321)

## மரண அறிவித்தல்கள்

### நாகலிங்கம் நகுலராஜா



முதலாம் குறுக்குத் தெரு, வேம்படி, யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும், 214, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணத்தில் வசித்தவரும் கனடாவை தற்போதைய வசிப்பிடமாகவும் கொண்ட நாகலிங்கம் நகுலராஜா 13.06.2008 வெள்ளிக்கிழமை கனடாவில் காலமானார்.

அன்னார் நாகலிங்கம் - தவமணி தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற இந்திராணியின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான அருந்ததி, முரளி மற்றும் கணேஸ்கண்ணா (சுவிஸ்), சர்மிளா (இந்தியா) ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ்சென்றவர்களான பவா, ரஜனி, மற்றும் ராதா (கனடா), ராஜன் (இந்தியா) ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

*214, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.* (சி/553325)

தகவல்: கு.பத்மராணி (மைத்துனி)

### தம்பையா சதாசிவம்



வேலணை கிழக்கு, 5ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் சண்டிலிப்பாயில் வசித்தவருமான காலஞ்சென்ற அன்னலெட்சுமியின் அன்புக் கணவர் தம்பையா சதாசிவம் நேற்று (14.06.2008) சனிக்கிழமை சிவபதம் எய்திவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற தம்பையா - இராசம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான சண்முகப்பிள்ளை(கொழும்பு), கந்தையா (கரம்பன்), கண்மணிப்பிள்ளை (வேலணை) ஆகியோரின் அன்புச் சகோதரனும் சிவலிங்கம் (பொறியியலாளர்- லண்டன்), பாக்கியலட்சுமி (புத்தளம்), மகாலிங்கம் (ஜேர்மனி), சண்முகலிங்கம் (ஜேர்மனி), மகாலட்சுமி (மன்னார்), தனலட்சுமி (சண்டிலிப்பாய்), விஜயலெட்சுமி (இந்தியா) ஆகியோரின் அன்பு மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (15.06.2008) மு.ப. 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் விளாவெளி இந்து மயானத்திற்கு தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*சண்டிலிப்பாய் மேற்கு, சண்டிலிப்பாய்.*

தகவல்: வே.குணரத்தினம், கு.தனலெட்சுமி (மருமகள்). (75326)

### மாணிக்கம் தில்லைராஜா



ஓட்டுமடத்தைப் பிறப்பிடமாகவும் தலையாழி, கொக்குவிலை வசிப்பிடமாகவும் கொண்ட மாணிக்கம் தில்லைராஜா நேற்று (14.06.2008) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற மாணிக்கம் - விசாலாட்சி தம்பதியரின் அன்பு மகனும் பொன்னுத்துரை - சரஸ்வதி தம்பதியரின் அன்பு மருமகனும் இந்திராணியின் அன்புக் கணவரும் தில்லைநாதன், யோகேஸ்வரி, தில்லைப்பதி ஆகியோரின் அன்புச் சகோதரனும் தெய்வராணி (ஞானி), உமாசங்கர் ஆகியோரின் பாசமிகு தந்தையும் வரதராஜா (குகன்), சங்கீதா ஆகியோரின் அன்பு மாமனும் கணேசலிங்கம், புஷ்பராணி, வன்னியசிங்கம், கமலநாதன், ஜெயராணி ஆகியோரின் அன்பு மைத்துனரும் மயூரன், கௌசிகா, செந்தூரன் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.06.2008) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று காலை 9 மணியளவில் பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக கோம்பையன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*அச்சுக்கூட ஒழுங்கை, தலையாழி, கொக்குவில்.* (75328)

தகவல்: குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# பயங்கரவாத முத்திரையின் கீழ் உண்மைகள் மறைந்து விடா

இலங்கை இனப்பிரச்சனை விவகாரத்தை ஒட்டி லண்டனில் கருத்து வெளியிட்டிருக்கும் இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அங்கு ஒருவிடயத்தைச் சுட்டிக் காட்டியிருக்கின்றார்.

''உலகில் பயங்கரவாதம் என்பது ஒன்றுதான். அதில் 'நல்ல பயங்கரவாதி', 'கெட்ட பயங்கரவாதி' என்று இருவகை இல்லை''- என பிரிட்டனுக்கும் மேற்குலக நாடுகளுக்கும் 'பயங்கரவாதம்' குறித்துப் பாடம் புகட்ட முயல்கிறார் அவர். அதுவும் அக்கரைச் சீமையில் போயிருந்து கொண்டு அவர்களுக்குப் 'பயங்கரவாதம்' குறித்து அரிச்சுவடி படிப்பிக்கின்றார் அவர்.

'நல்ல பயங்கரவாதம்', 'கெட்ட பயங்கரவாதம்' குறித்தெல்லாம் பேசமுன்னர் 'பயங்கரவாதம்' என்றால் என்ன என்பதற்கு சரியான அர்த்தத்தைப் புரிந்து கொண்டுதான் வெள்ளைக்காரர்களுக்கு அவர், அது குறித்து பாடம் புகட்ட முயல்கிறாரா என்பதைப் புரிந்து கொள்வது முக்கியமானது.

தவிரவும் 'நல்ல பயங்கரவாதம்', 'கெட்ட பயங்கரவாதம்' என இரண்டு இருக்கின்றதோ, இல்லையோ ஆனால் 'நல்லாட்சி', 'கொடூர ஆட்சி' என இரண்டு உலகில் காலாதி காலம் இருந்து வந்திருப்பதையும், அதிலும் இந்த கொடூர ஆட்சியின் ஓர் அம்சமாக 'அரச பயங்கரவாதம்' என்ற மிகக் கொடூரப் போக்கும் அராஜகச் செயற்பாடும் விளங்கி வருவது நினைவூட்டத் தக்கதாகும்.

தமது தாயக உரிமைக்காக - நியாயமான சுதந்திரங்களுக்காக - கௌரவ வாழ்வுக் காக - இனத்தின் இருப்புக்காக - தமது பாரம்பரிய வதிவிடத்தைப் பறிபோகாமல் தக்க வைப்பதற்காக - ஆயுதமேந்திப் போராடுவது, அதுவும் சுமார் மூன்று தசாப்தகாலம் காந்திய முறையிலும், அகிம்சை நெறியிலும், சாத்வீக வழியிலும் போராடித் தோற்றபின்னர் வேறுவழியின்றி இராணுவ நெறிமுறையைத் தேர்ந்தெடுத்துப் போராடுவது வெறுமனே 'பயங்கரவாதம்' என்று வகைப்படுத்தக் கூடியது என்றால் -

1770களின் மத்தியில் வெடித்த அமெரிக்க சுதந்திரப் போராட்டத்திலிருந்து அண்மையில் தனிநாட்டுப் பிரகடனத் துக்கு வழிவகுத்த கொசோவோ விவகாரம் வரை அனைத்து விடுதலைப் போராட்டங்களுமே வெறும் பயங்கரவாதமாக அர்த்தப்படுத்தக் கூடியவையாகிவிடும்.

தேசிய ஒடுக்கு முறையிலிருந்து விடுபட்டு தனி அரசை அமைத்துக் கொண்டு வாழும் உரிமைக்கான போராட்டத்தை பயங்கரவாதம் கருத்துருவத்துக்குள் சிறைப்படுத்தி விட முடியாது.

ஆட்சியாளர்களுக்கு - அதிகாரத்துக்கு- எதிராக ஆயுதம் தூக்குவதும், வன் முறையில் ஈடுபடுவதும், கலகம் செய்வதும் எடுத்த எடுப்பிலேயே 'பயங்கரவாதம்' என்று வர்ணிக்கப்படக் கூடியவை அல்ல.

அத்தகைய போராட்டங்களின் பின் புலத்தில் புதைந்து கிடக்கும் நியாய, அநியாயங்களின் அடிப்படையிலேயே அந்தப் போராட்டத்தை எந்தவகைக்குள் அடக்குவது என்பதை உலகம் தீர்மானிக்கிறது.

இந்த அடிப்படையை மறந்து இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மேற்குல கினருக்குப் புத்தி புகட்ட முயன்றிருக் கின்றார்.

அதே சமயம் நாடு, இறைமை, ஆட்சி அதிகாரம் என்ற கவசங்களை வைத்துக் கொண்டு முன்னெடுக்கப்படும் சர்வதி காரத்தையும், ஜனநாயகத்தின் பெயரால் மேற்கொள்ளப்படும் எதேச்சதிகாரத் தையும் உலகம் வெறுமனே கைகட்டிப் பார்த்துக் கொண்டு வாளாவிருக்கும் எனவும் எதிர்பார்க்க முடியாது.

இலங்கையில்-ஜனாதிபதி மகிந்த ராஜ பக்ஷவின் ஆட்சி அதிகாரத்தின் கீழ் - மனித உரிமை மீறல் துஷ்பிரயோகங்கள் மிக மோசமாக எல்லை மீறி இடம்பெற்று வருகின்றன. இதனை சர்வதேச அமைப்புகள் வரை பல தரப்பினரும் அடையாளம் கண்டு அம்பலப்படுத்தி வருகின்றனர்.

'சட்டத்தின் ஆட்சி'' என்ற வெளித் தோற்றத்தில் 'அரசபயங்கரவாதம்' இங்கு அப்பட்டமாக அரங்கேறுகின்றமையை உலகம் அறிந்து கொண்டிருப்பதால் அது குறித்துக் கண்டனக் குரல்கள் தீவிரமாக எழுந்துள்ளன.

அதை மூடி மறைப்பதற்காக சர்வதேச ரீதியில் தமது அரசுக்கு எதிராகப் புலிகள் ஆதரவு சக்திகள் நடத்தும் பிரசாரப் போராட்டத்தில் தாங்கள் தோற்றுவிட்டனர் என்று கதை விடவும் முயற்சிக்கிறார் அவர்.

'கண்ணுக்குள் எண்ணெய் விட்டுக் கொண்டு' நோக்குவது போல இலங்கை விவகாரத்தையும் இங்கு நடப்பவற்றையும் சர்வதேசம் நுணுக்கமாக அவதானித்துக் கொண்டிருக்கின்றது.

எது பயங்கரவாதம், எது நல்லாட்சி, எது கொடூர ஆட்சி, சட்டத்தின் பெயரால் முன்னெடுக்கப்படும் பயங்கரவாதம் எது என்பவை எல்லாம் சரியான அளவுகோலால் இன்று அளவெடுக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன.

யாருக்கு இரத்தவெறி, யாருக்கு அதிகார மம்தை, எவரது நடவடிக்கை கொடூரமானது என்ற கேள்விகளுக்கெல்லாம் தீர்ப்பு ஒரு நாள் வந்தேயாகும்.

அப்போது கூட உண்மை கசக்கும். அதிகப்படி என்ற ஜனநாயகக் கோட்பாட்டுக்கு அடங்காமல், நீதியின்படி என்ற அடிப்படையில் தீர்ப்பு எழுதப்படும் போது நியாயம் வெல்லும்; விதண்டாவாதங்கள் தோற்றுப் போகும்.



உலக குருதிக் கொடையாளர் தினமான நேற்று யாழ். போதனா வைத்தியசாலை இரத்த வங்கியில் பெருமளவான குருதிக் கொடையாளிகள் இரத்ததானம் செய்தனர்.

இந்நிகழ்வில் தன்னார்வக் குருதிக்கொடையாளர்கள் கலந்து கொண்டனர். அனேக இளைஞர்கள் இரத்ததானம் செய்வதற்காக ஆர்வமுடன் கூடியிருந்தனர். வைத்திய பரிசோதனையின் பின் குருதி சேகரிக்கும் பணியில் வைத்தியசாலை இரத்த வங்கி ஊ ஈடுபட்டிருப்பதை மேலே காணலாம். (படங்கள்: லக்ஷமன்)

## தென்மராட்சிப் பகுதியில் நலத் திட்டங்கள் முன்னெடுப்பு

யாழ்ப்பாணம், ஜூன்15

அலைன்ஸ் அமைப்பு- தென்மராட்சி மந்துவில் பகுதியில் ஜே/345, ஜே/346, ஜே/347 ஆகிய கிராம சேவகர் பிரிவுகளில் பொதுமக்களுக்கான பலநலத்திட்டங்களைமேற்கொள்ளவுள்ளதாக அமைப்பின் திட்டப் பணிப்பாளர் தெரிவித்தார்.

இதன் பிரகாரம் அந்தப்பகுதியில் உள்ள 10 பொதுக்கிணறுகள் சுத்திகரிப்புச் செய்து குடிதண்ணீர் திட்டம் மேற் கொள்ளப்படவுள்ளது.

தாய் சேய் நலத் திட்டத்தின் கீழ் 52 கர்ப்பிணி மற்றும் பாலூட்டும் தாய்மார்களுக்கான சத்துணவும் வழங்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

அத்துடன் மந்துவில் றோமன் கத்தோலிக்க தமிழ்க்கலவன் பாடசாலையில் நல்லொழுக்கம் தொடர்பான கருத்தரங்குகளும் நடத்தப்படவுள்ளன. (203-131)

## சுகவாழ்வு பொது விரிவுரைத் தொடர்

யாழ்ப்பாணம், ஜூன் 15

யாழ்.பல்கலைக்கழக புறநிலைப் படிப்புகள் அலகின் ஏற்பாட்டில் சுவாழ்வு எனும் தலைப்பிலான பொது விரிவுரைத் தொடர் 08, எதிர்வரும் 21 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு கைலாசபதி கலையரங்கில் இடம்பெறவுள்ளது.

யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீடாதிபதி கலாநிதி க.சிவபாலன் தலைமையில் இடம்பெறவுள்ள இவ் விரிவுரை நிகழ்வில் யாழ்ப்பாணப் போதனா வைத்தியசாலை மகப்பேற்றியல் வைத்திய நிபுணர் வைத்திய கலாநிதி ஏ.சிறிதரன் ''குடும்பத் திட்டமிடலும் சுகவாழ்வும்'' எனும் தலைப்பில் உரையாற்றவுள்ளார்.

ஆர்வமுள்ள பொதுமக்கள், பல்கலைக்கழக சமூகத்தினர் வருகை தந்து பயன் பெற முடியுமென புறநிலைப்படிப்புக்கள் அலகின் இணைப்பாளர் தெரிவித்துள்ளார். (203)

## முன்பள்ளி ஆசிரியர்களுக்கு வலுவூட்டல் செயலமர்வுகள்

மந்திகை, ஜூன்15

வடமராட்சி வலயக்கல்வி அலுவலகம் சிறுவர் செயற்திட்டத்தின் கீழ் வடமராட்சியில் உள்ள முன்பள்ளி ஆசிரியர்களுக்கான வலுவூட்டல் செயலமர்வுகளை நடத்தவுள்ளது.

இச் செயலமர்வுகள் எதிர்வரும் 20 ஆம் திகதி வடமராட்சி தெற்கு, மேற்கு பிரதேசசபை மண்டபத்திலும் 21ஆம், 22ஆம் திகதிகளில் நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்திலும் காலை 8 மணி தொடக்கம் பிற்பகல் 4.30 மணி வரையும் நடைபெறவுள்ளன.

இச் செயலமர்வுகளில் பருத்தித்துறைப் பிரதேச முதன்மை ஆசிரியர்களையும் கரவெட்டிப் பிரதேச உதவி ஆசிரியர்களையும் கலந்து கொள்ளுமாறு வடமராட்சி வலயக்கல்விப் பணிப்பாளர் கேட்டுள்ளார். (203-218)

## நாளை

| | |
|---|---|
| ஆனி 02 | 16.06.2008 |
| | திங்கட்கிழமை |
| திதி: | திரயோதசி |
| | மு.இ. 07.45 வரை |
| நட்சத்திரம் : | விசாகம் |
| | மு.ப. 11.01 வரை |
| சுபநேரம் : | 11.53 - 01.23 |
| [illegible] : | [illegible] |

## அஞ்சல் அதிபர் நேர்முகப்பரீட்சை கொழும்பில்; பரீட்சார்த்திகள் பெரும் நெருக்கடியில்

யாழ்ப்பாணம், ஜூன்15

அஞ்சல் அதிபர் நேர்முகப்பரீட்சை கொழும்பில் நடத்தப்படவுள்ளதால் பரீட்சார்த்திகள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டுள்ளனர்.

இந்த நேர்முகப்பரீட்சை எதிர்வரும் 20 ஆம் திகதி கொழும்பில் நடத்தப்படவுள்ளது. இதற்கு குடாநாட்டில் இருந்து 41 பரீட்சார்த்திகள் அழைக்கப்பட்டுள்ளனர்.

கொழும்பில் நேர்முகப் பரீட்சை நடத்தப்படவுள்ளதால் பரீட்சார்த்திகள் பின்வரும் நெருக்கடிகளை எதிர்கொள்வதாகச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

* வடக்கிலிருந்து கொழும்புக்குச் செல்வோர் சந்தேகக் கண்கொண்டு பார்க்கப்படுகின்றனர்.
* கொழும்புக்குச் சாதாரணமாக ஒருவர் செல்வதற்கு அதிக செலவு ஏற்படுகிறது.
* தங்குவதற்கான வசதிகள் அங்கு எல்லோருக்கும் இல்லை.
* பரீட்சார்த்திகள் தனியே செல்ல முடியாத நிலைமை.
* அங்கு செல்வோர் பெரிதும் மன நிலை பாதிப்படைகின்றனர்.

எனவே இந்த விடயத்தில் உரிய அதிகாரிகள் கவனம் எடுக்க வேண்டும் என்று கேட்கப்பட்டுள்ளது. (203)

## சுகாதாரச் சீர்கேட்டுடன் செயற்பட்ட 'பேக்கரி'; இயங்குவதற்கு பருத்தித்துறை நீதிமன்றம் தடைவிதிப்பு

மந்திகை, ஜூன் 15

வல்வெட்டித்துறையில் அனுமதிப்பத்திரம் இன்றி, சுகாதாரச் சீர்கேட்டுடன் இதுவரை காலமும் இயங்கி வந்த 'பேக்கரி' க்குப் பருத்தித்துறை நீதிமன்றம் 6 மாதம் இயங்குவதற்குத் தடை விதித்துள்ளது. அத்துடன் 2 ஆயிரத்து 500 ரூபா அபராதமும் விதித்துள்ளது.

யாழ். உணவு, மருந்துப் பொருள் கட்டுப்பாட்டு அதிகாரி தலைமையில் அண்மையில் திடீர் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது.

அதன் போது வல்வெட்டித்துறையில் சுகாதாரச்சீர்கேடான முறையில் துர்நாற்றம் வீசும் சூழலில் 'பேக்கரி' இயங்கிவந்தமைகண்டுபிடிக்கப்பட்டது.

குறிப்பிட்ட 'பேக்கரி' உரிமையாளர் பருத்தித்துறை நீதிமன்ற நீதிவான் கே.அரியநாயகம் முன்னிலையில் ஆஜர் வெய்யப்பட்டார்.

விசாரணைகளை மேற்கொண்ட நீதிவான், 'பேக்கரி' உரிமையாளர் குற்றத்தை ஒப்புக்கொண்டதை அடுத்து அவருக்கு 2 ஆயிரத்து 500 ரூபா அபராதம் விதித்ததுடன் குறிப்பிட்ட 'பேக்கரி'யை 6 மாதங்களுக்கு இயங்குவதற்கும் தடைவிதித்துத் தீர்ப்பளித்தார். (203-218)

## நூல் அறிமுகஅரங்கு

யாழ்ப்பாணம், ஜூன் 15

எழுத்தாளர் த.ஆனந்தமயிலின் 'ஓர் எழுதுவினைஞனின் டயரி' சிறுகதைத் தொகுதி நூல் அறிமுக அரங்கு எதிர்வரும் 22 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை காலை 9.30 மணிக்கு யாழ். பல்கலைகழகப் புவியியற்றுறை மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

எழுத்தாளர் குப்பிளான் ஐ.சண்முகன் தலைமையில் நடைபெறவுள்ள இந் நிகழ்வில் அறிமுக உரையை எழுத்தாளர் அ.யேசுராசாவும் மதிப்பீட்டு உரைகளை நுண்கலைத்துறை விரிவுரையாளர் பா.அகிலன், எழுத்தாளர் மு.அநாதரட்சகன், தமிழ்த்துறை விரிவுரையாளர் க.அருந்தாகரன் ஆகியோரும் நிகழ்த்துவர். (203)

## இலங்கையின் முதல் புகைப்படக் கலைஞர்

**1853 ஜூன்**

1853 ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தில், என்று சொல்வதைவிட இலங்கையில் என்று சொல்வதே பொருத்தம். புகைப்படக்கலை அறிமுகம் செய்யப்பட்டது.

1853 ஆம் ஆண்டு ஜூன் மாதம் வட்டுக்கோட்டை தென்னிந்திய திருச்சபையைச் சேர்ந்த சிலர் 'கமரா' ஒன்றையும் புகைப் படம் கழுவுவதற்குரிய (Develop) இரசாயனப் பொருள்களையும் எடுத்து வந்திருந்தனர். எனினும் அவர்களுக்கு கமராவை இயக்கி புகைப்படம் எடுத்து கழுவி படம் பிரிண்ட் போடத் தெரியவில்லை.

அப்போது தென்னிந்தியத் திருச்சபையால் வெளியிடப்பட்ட 'உதய தாரகை' பத்திரிகையின் ஆரம்பகால ஆசிரியரான ஹென்றி மார்ட்டின் அவர்களை வரவழைத்து அவரிடம் புகைப்படம் எடுக்கும் பணி ஒப்படைக்கப்பட்டது.

**இன்றும் நினைவில் கொள்ள.... அன்றைய ஞாபகம் .... இங்கே!**

ஹென்றி மார்ட்டின் அங்கிருந்தவர்களை அமரச் செய்து புகைப்படம் ஒன்றை எடுத்து மூன்று மணித்தி யாலத்தினுள் கழுவி பிரிண்ட் போட்டுக் கொடுத்தார். இலங்கையின் முதலாவது புகைப்படப் பிடிப்பாளர் (Photographer)

### தென்னிந்தியத் திருச்சபையினர் செய்த உபகாரம்

இவரே. அதுவரை இலங்கையில் யாரும் புகைப்படம் எடுக்கவில்லை. 1856 ஆம் ஆண்டே கொழும்பில் புகைப்படக்கலை அறிமுகம் செய்யப்பட்டது. பார்ட்டிங் (Parting) என் பவரால் ஹென்றி மார்ட்டினின் திறமையைக் கண்டு வியந்த தென்னிந்தியத் திருச் சபையினர் தம்மிடம் இருந்த கமராவையும், ஏனைய உபகரணங்களையும், இரசாயனப் பொருள்களையும் ஹென்றி மார்ட்டினுக்கு அன்பளிப்புச் செய்தனர்.

அவர் இவற்றை வைத்து யாழ்ப்பாண சுங்கத் திணைக்கள வளவினுள ஸ்ரூடியோ ஒன்றை ஆரம்பித்தார். ஹென்றி மார்ட்டினின் தந்தையான ஜோன் மார்ட்டின் நினைவாகவே யாழ்ப்பாணம் மார்ட்டின் வீதிக்கு மார்ட்டின் வீதி [illegible] பெயர் சூட்டப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# படுகொலைகள், ஆள் கடத்தல்கள் குறித்து விசாரணை நடத்த ஐ.நா. கோரிக்கை

## மனித உரிமை ஆணைக்குழுக் கூட்டத்தில்

ஜெனீவா, ஜூன்15

இலங்கையில் இடம்பெற்று வரும் படுகொலைகள், ஆள்கடத்தல்கள், காணாமற்போகச் செய்தல் ஆகியன குறித்த முறைப்பாடுகள் மற்றும் அரசாங்கத்தின் பாதுகாப்பு படையினர் உள்ளிட்ட பொறுப்புமிக்க தரப்பினர் மீது முன்வைக்கப்படும் குற்றச்சாட்டுகள் தொடர்பில் இலங்கை அரசாங்கம் விசாரணைகளை மேற்கொள்ள வேண்டும். ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமை ஆணைக்குழு இவ்வாறு கோரிக்கை விடுத்துள்ளது.

மனித உரிமை ஆணைக்குழுவின் அமர்வு வெள்ளியன்று நடைபெற்ற போது இக்கோரிக்கை முன்வைக்கப்பட்டது.ஐ.நா. மனித உரிமைக்ள் ஆணைக்குழுவின் கோரிக்கைகளை வரவேற்றுள்ள சர்வதேச மன்னிப்புச் சபையினர் மனித உரிமை கண்காணிப்பகம் என்பன சட்டத்திற்கு முரணான நடவடிக்கைகள் மற்றும் கொடுமையான படுகொலைகள் என்பன தொடர்பில் இலங்கை அரசாங்கம் சட்ட நடவடிக் கைகளை முன்னெடுப்பதுடன் விசார ணைகளை மேற்கொள்ள வேண்டும் எனவும் வலியுறுத்தி உள்ளனர்.

தற்போது இடம்பெற்று வரும் படுகொலைகள், ஆள்கடத்தல்கள், காணாற்போகச் செய்தல் போன்ற சம்பவங்கள் மேலும் தொடர்வதற்கான சாத்தியக்கூறுகள் தென்படுவதாகத் தெரிவித்துள்ள சர்வதேச ம்னிப்புச்சபை உயர் அதிகாரியான யொலாண்டா [illegible]ஸ்ரர் தற்போது இடம்பெற்றுக்கொண்டிருக்கும் மனித உரிமையை சீர்குலைக்கும் நடவடிக்கைகளை முடிவுக்கு கொண்டுவர வேண்டும் என குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, 'பிரபஞ்சத்தின் நடப்பு நோக்கு' என்ற நிகழ்வில் கலந்துகொண்ட மனித உரிமைகள் அமைச்சர் மகிந்த சமரசிங்க ஐ.நா. மனித உரிமை ஆணைக்குழுவின் மேற்படி கோரிக்கைக்கு பதிலளிக்கும் வகையில் உலகத்தில் மிகவும் இரக்கமற்ற பயங்கரவாத அமைப்பான விடுதலைப் புலிகளுடன் போரிட்டுக்கொண்டு இருந்தாலும் இலங்கை அரசாங்கம் மனித உரிமைகளை பேணும் விடயத்தில் மிகவும் உறுதியாக இருப்பதாக கூறியுள்ளார். (அ)

## வைத்தியசாலையில் நேற்றுமுதல் உள்ளக தொலைபேசி சேவை செயற்பட ஆரம்பம்

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் செயலிழந்த உள்ளகத் தொலைபேசிச் சேவை நேற்று முதல் மீண்டும் இயங்க ஆரம்பமாகியுள்ளது. தொலைபேசி ஆழிப் பலகை பழுதடைந்திருந்தமையால் ஒரு மாத காலமாக இச் சேவை தடைப்பட்டிருந்தது. கொழும்பிலிருந்து புதிய தொலைபேசி ஆழிப்பலகை கொண்டு வரப்பட்டதை அடுத்து மீண்டும் இச் சேவை ஆரம்பமாகியுள்ளது.

(1-78)

# சமாதானம் குறித்து ஜனாதிபதியும் பிரதமரும் முரண்பட்ட கருத்துக்கள்

## சுட்டிக்காட்டுகிறார் ஐ.தே.க.பொதுச் செயலாளர்

கொழும்பு, ஜூன் 15

சமாதானம் தொடர்பாக அரசாங்கத்திடம் நிரந்தரமான கொள்கை இல்லை. ஜனாதிபதி ஒன்றைக் கூறுகிறார்; பிரதமர் வேறொன்றைச் சொல்கிறார். இவர்களால் எப்படி பிரச்சினையை தீர்க்க முடியும்?

இவ்வாறு கேள்வி எழுப்பியுள்ளார் ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்த நாயக்க.

இது குறித்து அவர் கூறியிருப்பதாவது:-

ஆயுதங்களை கீழே வைத்தால் மட்டுமே புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தப்படும் என ஜனாதிபதி லண்டனில் கூறி இருக்கிறார். புலிகளுடன் பேச்சுவார்த்தை என்ற வார்த்தைக்கே இடமில்லை. அவர்கள் கூண்டோடு ஒழித்துக்கட்டப்படுவர் என பிரதமர் தெரிவித்திருக்கிறார்.

ஜனாதிபதியினதும், பிரதமரினதும் பேச்சில் இருந்து சமாதானம் தொடர்பான நிரந்தர கொள்கை எதுவும் அவர்களிடம் இல்லை என்பதை தெளிவாக அறிந்து கொள்ளக்கூடியதாக இருக்கிறது.

தேசிய பாதுகாப்பு இன்று பெரும் அச்சுறுத் தலுக்கு இலக்காகி உள்ளது. வடக்கு, கிழக்கு பகுதிக்கு மாத்திரம் வரையறுக்கப்பட்டிருந்த யுத்தம் இன்று அகில இலங்கைக்கும் பரவி உள்ளது. யுத்தத்திற்கு எந்த விதத்திலும் தொடர்பு இல்லாத தமிழ், சிங்கள, முஸ்லிம் மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். யுத்த பீதி ஒரு புறம், அத்தியாவசிய பொருள்களின் விலை உயர்வு மறுபக்கம், நாட்டு மக்கள் இந்த இரண்டிலும் சிக்கி தவிக்கிறார்கள். - என்றார் ஐ.தே.க செயலாளர். (அ)

# வன்னிப் போர் முனையில் வெள்ளியன்று 7 படையினர் பலி

## 11 புலிகள் கொல்லப்பட்டதாக படைத்தரப்பு அறிவிப்பு

கொழும்பு, ஜூன் 15

வன்னிப் போர் முனையில் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை இடம்பெற்ற மோதல்களில் 7 படையினரும் 11 விடுதலைப் புலிகளும் கொல்லப்பட்டுள்ளனர் என பாதுகாப்பு அமைச்சு நேற்று அறிவித்துள்ளது.

மன்னார், வவுனியா, வெலிஓயா பகுதிகளில் இந்த மோதல்கள் இடம்பெற்றுள்ளன.

வெலிஓயாவில் 7 விடுதலைப் புலிகளும் நான்கு படையினரும் -

வவுனியா - மன்னாரில் நான்கு விடுதலைப் புலிகளும் மூன்று படையினரும் கொல்லப்பட்டனர் என பாதுகாப்பு அமைச்சு மேலும் தெரிவித்தது.

இந்த மோதல்கள் குறித்து புலிகள் தரப்பு தகவல்கள் வெளியாகவில்லை. (அ-1)

# வடமேல் மாகாணசபைத் தேர்தலில் முன்னாள் மேஜர்கள் மோதுவர்!

கொழும்பு ஜூன் 15

வடமேல் மாகாணசபைத் தேர்தலில் முன்னாள் உயர் படை அதிகாரிகளான மேஜர் ஜெனரல்கள் மோதவிருக்கின்றனர்.

கலைக்கப்பட்ட வடமேல் மாகாண சபையின் தேர்தல் ஓகஸ்ட் மாதம் நடத்தப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. இத் தேர்தலில் ஆளும் ஐக்கியமக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் சார்பில் முன்னாள் மேஜர் ஜேனரல் நந்த மல்லவராட்சியை முதன்மை வேட்பாளராகவும்- ஐ.தே.கட்சியின் சார்பில் முன்னாள் மேஜர் ஜேனரல் ஜானக பெரேராவை முதன்மை வேட்பாளராகவும் நிறுத்துவதற்கு இரு கட்சிகளும் முடிவு செய்துள்ளன.

அதேவேளை ஜே.வி.பி. சார்பில் நாடாளுமன்ற உறுப்பினர் லால்காந்த நிறுத்தப்படலாம் எனப் பேச்சடிபடுகிறது. (அ-1-3)

### மடு மாதா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்தனர்:

எதிர்வரும் ஜூலை மாதம் நடைபெறவுள்ள மடுமாதா திருவிழாவை நடத்துவது சாத்தியமற்றது என்று நேற்றுமுன்தினம் வெள்ளிக் கிழமை நடைபெற்ற கத்தோலிக்க மதகுரு மார் மாநாட்டில் தீர்மானிக்கப்பட்டுள்ளது. ஆலயத்துக்கு மக்கள் வருகைதரவும் தங்கவும் தேவையான வசதிகள் அங்கு இல்லை என்று தெரிவிக்கப்பட்டது.

இம் மாநாட்டில் கலந்துகொண்ட காலி பிரதேச மாவட்[illegible].ஹரோல்ட் அந்தோனி பின்வருமாறு தெரிவித்தார்.

மாதாவின் புனித சொரூபத்தை மீண்டும் ஆல யத்துக்கு கொண்டுவரப்பட்டால் தேவாலயத்தின் அபிவிருத்திகள் அதிகரிக்கலாம்.

தேவாலயப் பகுதியின் புனரமைப்புப் பணிகள் தாமதமடைவதனால் மடுமாதா புனித சிலை மீண்டும் கொண்டுவரப்படுவது தாமதமாகிறது. இது தொடர்பில் அரசிற்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையில் பேச்சுக்கள் நடைபெறுவதற்கான உடனடியான சாத்தியங்கள் இல்லை- என்றார். (அ-2)

### ஐரோப்பிய ஒன்றி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வெளிவிவகார அமைச்சரிடம் அனு மதி கோரியிருந்தது.

முன்னர் அதற்கு அனுமதி வழங்கிய வெளிவிவகார அமைச்சு, கிழக்கு மாகாணத்திற்கான அவர்களின் பயண நிகழ்ச்சி யில் கிழக்கு மாகாண முதலமைச்சர் பிள்ளையானையும் இணைத்துக் கொள்ளுமாறு கோரியிருந்தது.

ஆனால் அதற்கு ஐரோப்பிய ஒன்றியத் தூதுக்குழுவினர் மறுப்புத் தெரிவித்திருந் தனர். இதனைத் தொடர்ந்து கிழக்கு மாகாணத்திற்கான அவர் களின் பயணத் துக்கு கதவடைப் புச் செய்துள்ளது- மறுப்புத் தெரி வித்து விட்டது.

ஐரோப்பிய ஒன் றியத்தின் பிரதிநிதி கள் சந்திப்பவர்க ளின் பட்டியலில் முதலமைச் சரின் பெயர் இல்லாத போது கிழக்கு மாகாணத் திற்கான அவர்களின் பய ணத்திற்கு அவசிய மில்லை என்று அரசாங்கம் தெரி வித்துவிட்டதாக அறிய வந்துள்ளது. (அ-01)

### பேச்சுக்களை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஒன்றே தான்.

இலங்கையின் இனப்பிரச்சினைக்கு ஆயுதங்கள் மூலம் தீர்வு காண முடியாது என்பதை கடந்த இருபத்தைந்து வருட கால வரலாறு நிரூபித்து நிற்கிறது. இந்த யதார்த்தம் அது ஒருவேளை கசப்பாக இருந்தாலுங் கூட முதலில் உணரப்பட வேண்டும்.

பயங்கரவாதம் என்பது நாடு முழுவதும் வியாபித்திருக்கும் நிலைமையில் விடுதலைப்புலிகள் தரப்பிலிருந்து மட்டுமன்றி அரசாங்கத் தரப்பிலிருந்தும் பயங்கரவாதம் பிரயோகிக்கப்பட்டு வருகின்றது என்பதும் வெளிப்படையானது. இந்தநிலைமைக்கு முற்றுப்புள்ளி வைத்து நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்துவது என்பது ஒன்றும் இயலாத காரியமல்ல.

போர்நிறுத்தம் ஒன்றைக் கொண்டுவந்து. திட்டமிட்ட குறுகியகால வரையறைக்குள் பேச்சுக்களை நடத்தி முடிக்க முடியும்.

இலங்கை ஒரே நாடு என்ற அரசியற் கட்டமைப்புக்குள் தமிழைத் தாய் மொழியாகக் கொண்டிருக்கக்கும் தமிழ- முஸ்லிம் மக்களின் நியாயபூர்வமான அரசியல் அபிலாசைகளை எவ்விதம் திருப்திப்படுத்துவது என்பதுதான் கேள்வி. இது ஓர் அரசியற் சவால். இதனை நேர்மையோடும் துணிச்சலோடும் சந்திப்பதற்கு நாட்டின் அரசியற் தலைமை கடந்த ஐம்பது ஆண்டுகளுக்கு மேலாக தொடர்ந்து தவறி வந்திருக்கிறது.

சாத்தியங்களைக் கையாளும் கலைதான் அரசியல் என்ற வரைவிலக்கணத்தைப் பின்பற்ற முனைந்தால் இனப்பிரச்சினையின் தீர்வுக்கான உகந்த அணுகுமுறையை அரசாங்கமும் அதன் தலைவரான ஜனாதிபதியும் வகுக்க முடியும்-அந்த அறிக்கையில் தெரி விக்கப்பட்டிருக்கிறது. (அ-2)

### பரந்தனில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மக்கள் குடியிருப்புக்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்ட போதும், மக்கள் பதுங்கு குழி களில் பாதுகாப்புத் தேடியதால் உயிரிழப்புக்கள் தவிர்க்கப்பட்டன எனத் தெரிவிக் கப்பட்டது.

இதேவேளை- அப்பகுதியில் உள்ள புலிகளின் ஆயு தக்கிடங்கை இலக்கு வைத்து நடத்தப்பட்ட தாக்குதலில் அது அழிக்கப் பட்டுள்ளதாக பாதுகாப்பு ஊடகத்தகவல் நிலையம் தெரி வித்தது.


## நினைவஞ்சலி

எட்டாம் ஆண்டு | முதலாம் ஆண்டு





அமரர் சின்னையா முத்துக்கிருஷ்ணர் | திருமதி பூமணி முத்துக்கிருஷ்ணர்

11.01.1939 - மலர்வு - 27.05.1938

03.11.2000 - உதிர்வு - 27.06.2007

ஸப்தமி - திதி - துவாதசி

எங்கள் நெஞ்சங்கள் இருக்கும் வரை
உங்கள் நினைவுகளைச் சுமந்திருப்போம்
உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

கணக்கர் வளவு, கந்தரோடை,
சுன்னாகம்.

(75305)

குடும்பத்தினர்.





[illegible]பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் ... வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 15.06.2008 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org